# உதயன்

30°c - 25°c

மழைக்கான சாத்தியம் உண்டு

சுடர் 30 கதிர் 342 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 17, செவ்வாய்க்கிழமை 03.11.2015


## கைத் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தவர் மின்னல் தாக்கியதில் சாவு

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

முல்லைத்தீவு, நவ. 3

கடும் மழைநேரம் கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.



இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலையைச் சேர்ந்த, புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரம், வேணாவில் பகுதியில் வசித்து வரும் நடராசா ரவீந்திரன் (வயது- 49) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் இருந்து தொழில் நிமித்தம் பக். 24

## விடுதலை இன்றேல் சாவுதான்

### தமிழ் அரசியல் கைதிகள் அரசுக்கு எச்சரிக்கை உடல் உறுப்புக்களைத் தானம் செய்யவும் முன்வருகை

யாழ்ப்பாணம், நவம்பர் 3

விடுதலை இல்லையேல் சாவதைத் தவிர வேறு வழியில்லை. சாவடைந்த பின்னர் எமது உடல் உறுப்புக்களைத் தானம் செய்யும் பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கின்றோம்.

-இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் ஆவேசமாகத் தெரிவித்ததாக, அவர்களது உறவினர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன் ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்டதன் அடிப்படையில் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன் னர் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லையாயின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தீபாவளியைத் தாம் புறக்கணிப்பதாக அறிவிப்பதுடன் தமிழ் மக்களையும் புறக்கணிக்க வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

அத்துடன் நாடாளுமன்றத்துக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தையும் கூட்ட பக். 24

## 700 ஊடகவியலாளர்கள் 10 வருடங்களில் கொலை

நியூயோர்க், நவ. 3

பத்து வருடங்களில் 700 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

விசேட அறிக்கை ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அழுத்தங்களைக் கண்டிக்கும் தினத்தை முன்னிட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஊடகத்துறையில் பல்வேறு பணிகளை ஆற்றி வந்த 700 பேர் பக். 24

## 10 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, நவ. 3

நுவரெலியா, பதுளை, மாத்தளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை ஆகிய 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வுநிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும், கண்டியில் 18 பாடசாலைகளுக்கு மண்சரிவு அபாயம் உள்ளதாகவும், இதில் நான்கு பாடசாலைகளுக்கு மண்சரிவு ஆபத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மீத பக். 24

## தாய்லாந்து பிரதமருடன் மைத்திரி நேற்றுப் பேச்சு



கொழும்பு, நவ. 3

நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு தாய்லாந்துசென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்த நாட்டுப் பிரதமர் பரேயட் சென் ஓசாவை நேற்று அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார். இதன் போது ஜனாதிபதி பக். 24

## வாய், கை, கால்கள் கட்டப்பட்டு மூதாட்டி நேற்று சடலமாக மீட்பு

### உடுவில் லவ் லேன் பகுதியில் சம்பவம் கொள்ளையர் கைவரிசை எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், நவ. 3

உடுவில் லவ் லேன் பகுதியில் உள்ள வீடொன்றில் வசிக்கும் மூதாட்டி ஒருவர் வாய், கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அவரது வீட்டில் இருந்த நகைகள், பொருள்கள் என்பன இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

சிறிதேவி பாலசிங்கம்(வயது-67) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப் பக். 24

## பிணை வழங்கப்படும் கைதிகளின் விவரத்தைக் கையளிப்பார் பிரதமர்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

முதல் கட்டமாகப் பிணையில் விடுவிக்கப்படவுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வைத்துத் தம்மிடம் கையளிக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்ட சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்து, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் கைதிகளின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகத்தெரிவித்திருந்தார். இந்த நிலையில் இது தொடர்பில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று, பக். 24

## ஐ.நா தீர்மானத்தை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டம்

### மகிந்த ஆதரவு அணி திட்டம்

கொழும்பு, நவ. 3

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தக்கூடாது என வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்பதற்குப் பொது எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள மகிந்த ஆதரவு அணி தீர்மானித்துள்ளது.

இதன்படி முதற்கட்ட எதிர்ப்பு நடவடிக்கை இந்த மாத நடுப்பகுதியில் மாத்தறையில் இடம்பெறவுள்ளது. அதன்பின்னர் இரண்டாம் கட்ட நடவடிக்கை கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், ஜெனிவாத் தீர்மானத்திலுள்ள ஆபத்து தொடர்பில் பக். 24

## உள்ளூர் மீன்பிடி விருத்திக்கு உதவுவதற்கு வியட்நாம் தயார்

### முதலமைச்சரிடம் அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 3

வடக்கு மாகாணத்தில் மீன்பிடிக்கு கடலை மட்டும் நம்பியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. உள்ளூர் நீர் நிலைகளையும் பயன்படுத்த முடியும். இதற்கு வியட்நாம் முடிந்தளவு ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் தரத் தயாராக உள்ளது என அந்த நாட்டுத் தூதுவர் தம்மிடம் கூறியதாக வடக்கு பக். 24

## ஜனாதிபதி மீதான மனு விசாரணைக்கென ஏற்பு

### சட்டரீதியாக அதனை முன்னெடுக்க முடியும் என்கிறார் பிரத்ம நீதியரசர்

கொழும்பு, நவ.3

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான வழக்கொன்றை சட்டரீதியாக முன்னெடுக்கமுடியுமெனப் பிரதம நீதியரசர் கே.சிறிபவன் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் என்ற ரீதியில் அவருக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிலக்கரிக் கொள்வனவு செய்வது தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் விசாரிக்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியுமெனப் பிரதம நீதியரசர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வாதத்தை, நிராகரித்த பிரதம நீதியரசர், நாட்டின் ஒரு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசா பக். 24

கம்பர்மலை பெண் கடத்தல் சம்பவம்

# பெண்ணை மறைத்து வைப்பதற்கு இடம் கொடுத்த சட்டத்தரணி கைது

## நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், நவ.3

கம்பர்மலையில் பெண்ணொருவர் வாகனம் ஒன்றில் வந்த மர்ம நபர்களால் கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரபல சட்டத்தரணி ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். நேற்றுக்காலை பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்திய நிலையில் சந்தேக நபரான சட்டத்தரணி கைது செய்யப்பட்டார் என்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

இவர் விசாரணையின் பின் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேக நபரை 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணைகளில் செல்ல அனுமதித்தார்.

வடமராட்சி வல்வெட்டித்துறை கம்பர்மலை பகுதியை சேர்ந்த சசீந்திரன் ஞானகி (வயது-32) என்ற பெண் கடந்த மாதம் பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு ஒன்றுக்குச் சென்று விட்டு மாலை 4.30 மணியளவில் தனது தாயாருடன் வீடுநோக்கி வந்துகொண்டிருந்த போது வானொன்றில் வந்த மர்ம நபர்களால் கடத்தப்பட்டிருந்தார்.

தன்னிடம் பாதை ஒன்றின் வழி கேட்டுவிட்டுத் தன்னைத் தாண்டிச் சென்ற வாகனம் திடீரென திரும்பி வந்து தனக்கு முன்னால் நின்றதாகவும் அதில் இருந்து இறங்கிய நபர்கள் தாயாரைத் தள்ளி விழுத்தி விட்டு தன்னைப் பலவந்தப்படுத்தி இழுத்து வாகனத்துக்குள் ஏற்றினர் என்றும் குறித்த பெண் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

குறித்த வாகனத்தில் எட்டுப் பேர் இருந்தனர். தன்னை அவர்கள் புன்னாலைக் கட்டுவன் ஆலயம் ஒன்றுக்கு அருகில் உள்ள இடம் ஒன்றில் தடுத்து வைத்திருந்தனர். அவர்களில் ஒருவர் கைத்தொலைபேசியில் தகவல் வழங்கியதை அடுத்து அங்கு சிவானந்தராஜா சுசீந்திரன் (வயது 36) என்பவர் வந்தார் என்று குறித்து பெண் தமக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் தெரிவித்தார் என்று பொலிஸார் கூறியிருந்தனர். சுசீந்திரன் என்பவர் கடத்தப்பட்ட பெண்ணின் கணவர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த பெண்ணுக்கும் சுசீந்திரனுக்கும் இடையே விவாகரத்து வழக்கு ஒன்று நடந்து வருகின்றது என்று குறிப்பிட்டுள்ள பொலிஸார் குறித்த நபர் ஏற்கனவே பல மோசடி வழக்குகளுடன் தொடர்புடைய சந்தேக நபர் எனவும் தெரிவித்தனர். சில ஆண்டுகளுக்கு முன் ஒருவரை நிதி மோசடி செய்தார் எனவும் அப்போது கணவர் என்ற ரீதியில் குறித்த பெண் பிணை எடுத்தார் என்றும், அது சம்பந்தமான வழக்குக்குச் சமுகம் அளித்து விட்டு வந்த நிலையிலேயே பெண் கடத்தப்பட்டார் என்றும் பொலிஸாருக்குப் பெண் வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு முச்சக்கர வண்டியொன்றில் வந்த சுசீந்திரன் அந்தப் பெண்ணை இடம்மாற்ற வேண்டும் எனக் கடத்தல்காரர்களிடம் கூறியதை அடுத்து அங்கிருந்து புத்தூரில் அமைந்துள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்குப் பெண் இடம்மாற்றப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழி நடத்தலில் பிரதான பொலிஸ் பரிசோதகர் மீடின் தலைமையிலான விசேட பொலிஸ் குழு மறு நாள் அதிகாலை குறித்த சட்டத்தரணியின் வீட்டைச் சுற்றிவளைத்துக் குறித்த பெண்ணைப் பாதுகாப்பாக மீட்டுள்ளது.

சந்தேக நபரான சிவானந்தராஜா சுசீந்திரன் கைது செய்யப்பட்டார் . அவரிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளை அடுத்து கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வாகனம் கல்வியங்காடு பகுதியில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ மீடின் தலைமையிலான பொலிஸ் குழுவால் கைப்பற்றப்பட்டிருந்தது.

சந்தேக நபரான சுசீந்திரனிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையை தொடர்ந்து கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பத்து சந்தேக நபர்களும் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைத்து வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் அனைவரையும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சந்தேக நபர்கள் அனைவரும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். பதினொரு சந்தேக நபர்களையும் குறித்த பெண் அடையாளம் காட்டினார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் நிலையில் குறித்த சட்டத்தரணி பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அதையடுத்து சந்தேக நபரான சட்டத்தரணி நேற்றுக்காலை பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர் நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 20 ஆயிரம் பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-109)

# கிளி. விவசாயியின் டிராக்டர் இராணுவம் வசம் இல்லை

## ஜனாதிபதியிடம் முறையிட்டமை தொடர்பில் மாவட்ட செயலருக்கு இராணுவத்தினர் பதில்

கிளிநொச்சி, நவ.3

இராணுவத்தின் வசமுள்ள தனது டிராக்டரை மீட்டுத் தருமாறு கிளிநொச்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வந்திருந்த சமயம் விவசாயி ஒருவர் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் - தற்போது அதற்கான பதில் இராணுவத்தினரால் மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, இரத்தினபுரத்தில் வசிக்கும் குறித்த விவசாயி இறுதிப் போரின்போது தனது டிராக்டரை முள்ளிவாய்க்கல் பகுதியில் கைவிட்டுச் சென்றிருந்தார். பின்னர் தனது சொந்த இடத்தில் மீள்குடியமர்ந்த பின்னர் தனது டிராக்டர் இராணுவத்தினரால் உபயோகிக்கப்படுவதை அவதானித்துள்ளார். அதைத் தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு கோரிய போதும் இராணுவத்தினர் அதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர் என்று விவசாயி வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடாக ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தார்.

இந்தத் தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக வெளியானதை அடுத்து இது குறித்து கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தலைமையகத்தால் கடந்த 11ஆம் திகதி குறித்த விவசாயியிடம் இருந்து டிராக்டர் தொடர்பான அனைத்து விவரங்களும் பெறப்பட்டுள்ளன. இதுகுறித்து ஆராய்வதற்கு இராணுவத்தினரால் ஒருமாத கால அவகாசம் கோரப்பட்டிருந்தது.

ஆயினும் தற்போது இராணுவம் இதுகுறித்து மாவட்ட செயலருக்கு பதிலளித்துள்ளது. அதில் விவசாயியிடம் பெறப்பட்ட ஆவணங்கள் ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்த போது அவ்வாறான டிராக்டர் இராணுவப் பாவனையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-101)

# சாவகச்சேரியில் கடந்த மாதம் 8 பேருக்கு டெங்குத் தொற்று

சாவகச்சேரி, நவ.3

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் கடந்த மாதத்தில் மட்டும் 8 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் எட்டுப்பேர் சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட சங்கத்தானை, கல்வயல், மீசாலை கிழக்கு, சாவகச்சேரி நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

அதையடுத்து டெங்குத் தொற்று இனம் காணப்பட்ட பகுதிகளில் நகரசபையின் அனுசரணையுடன் சுகாதாரப் பகுதியினரால் டெங்குக் கட்டுப்பாட்டுப் புகையூட்டல் இடம்பெற்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்தின் வரணி, கொடிகாமம், மட்டுவில் போன்ற பகுதிகளிலும் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

(ற-9)

# இ.போ.ச. முகாமையாளர் குறித்து ஆணைக்குழு மூலம் விசாரணை

## மத்திய போக்குவரத்து அமைச்சின் செயலருக்கு பணித்துள்ளது மனித உரிமை ஆணைக்குழு

யாழ்ப்பாணம், நவ.3

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். முகாமையாளர் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்குப் பணிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண முகாமையாளருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கடந்த மாதம் 14 ஆம் திகதி யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதில் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமையகத்தால் இடம்பெற்ற அதிருப்தியான செயற்பாடுகள் தொடர்பில் மூன்று கட்டமாக விசாரணைகள் இடம்பெற்ற போதிலும் எந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நிர்வாகக் குழுவின் அனுமதியை பெறாமல் சுயமான முடிவுகள் எடுத்தல், ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஒழுங்கீனம், மதுபாவனையுடன் ஊழியர்களை வேலைக்கு அனுமதித்தமை, ஊழியர்களின் அனுமதியின்றி ஊதியங்கள் கழிக்கப்படுதல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இதன் போது முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையிலும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளமையால் இது தொடர்பில் ஆணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளரை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

(ற-5)

# மர நடுகை நிகழ்வு

சாவகச்சேரி,நவ. 3

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மரக்கன்று நடுதல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 8 மணி தொடக்கம் நகரசபை பணியாளர்களால் சிரமதானம் இடம்பெற்று பின்னர் நகரசபை அலுவலகம், பொது நூலகம் பொன்விழா மண்டபம், பொதுச் சந்தை ஆகிய இடங்களில் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

(ஐ-9)

# சிறுமியை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.3

15 வயதுச் சிறுமி ஒருவரைக் காணவில்லை என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பாலாவோடையைச் சேர்ந்த சிறுமி ஒருவரையே காணவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமிக்குத் தாய் இல்லை என்றும் தந்தையின் பாதுகாப்பில் அவர் வசித்த நிலையில் நேற்றுமுன்தினம் ஆலயத்துக்குச் சைக்கிளில் சென்றபின்னர் வீடு திரும்பவில்லை என்றும் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ற-101)

# மாணவர்கள் மீதான தாக்குதலை எதிர்த்து யாழில் நேற்றுப் பேரணி

## யாழ். தேசிய கணக்கீட்டுக் கற்கைநெறி மாணவர்கள் முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், நவ.4

உயர்தேசியக் கணக்கீட்டு கற்கை நெறி மாணவர்களால் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து யாழில் உயர் தேசிய கணக்கீட்டு கற்கை நெறி மாணவர்களால் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கருகில் இருந்து ஏ-9 வீதி வழியாக பேரணியாக சென்று தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

மாணவர்கள் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாகவும், மாணவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் பேரணியில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

சுதந்திரமான கல்வி எங்கே, நல்லாட்சி எங்கே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

(ற-101)



# சட்டவிரோத மணல் ஏற்றியோரை விரட்டிப் பிடித்தனர் பொலிஸார்

## மூவர் கைது: கொடிகாமம் பொலிஸ் அதிரடி

யாழ்ப்பாணம், நவ.3

மீசாலைப் பகுதியில் மணல் கடத்தலில் ஈடுபட்டவர்களை கொடிகாமம் பொலிஸார் விரட்டிச் சென்று கைது செய்துள்ளனர்.

நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் ஒரு கன்ரர், டிராக்டர் என்பவற்றைப் பொலிஸார் கைப்பற்றியதோடு, மூவரைக் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து குறித்த பகுதிக்குச் சென்றுள்ளனர். அங்கு மணல் ஏற்றிச் சென்று கொண்டிருந் கன்ரர் வாகனத்தை மறித்தபோது சாரதி நிறுத்தாது தப்பி யோடியுள்ளார். அதையடுத்து பொலிஸார் கன்ரர் வாகனத்தை விரட்டிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் வாகனம் கன்ரரை அண் மித்தபோது கன்ரரின் பின்னாக இருந்த ஆறுபேர் சவல் மூலம் பொலிஸ் வாகனத்தின் மீது மணலை எறிந்து தப்ப முயன்றுள்ளனர். எனினும் பொலிஸார் விடாது துரத்திச் செல்ல ஒரு கட்டத்தில் கன்ரர் சாரதி வாகனத்தைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். அதையடுத்து கன்ரர் வாகனத்தைக் கையகப்படுத்திய பொலிஸார் மூவரைக் கைது செய் துள்ளனர்.

அத்துடன் அந்தப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர் ஒன்றையும் கைப் பற்றிப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். (ற-101)

# கேரள கஞ்சா கடத்தல் யாழில் அதிகரிக்கிறது

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

யாழ். மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் கேரளாக் கஞ்சா கடத்தல் அதிகரித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி இரணைமடு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளான காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய கடல் பிரதேசங்கள் ஊடாக அண்மைக் காலங்களில் கேரளக் கஞ்சா போன்ற போதைப் பொருள்களின் கடத்தல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இது கடந்த காலங்களை விட அதிகரிப்புத் தன்மையை காட்டுகிறது. குற்றச்செயல்களை பொறுத்த வரையில் கடந்த காலங்களை விட இந்த வருடம் வட மாகாணத்தில் குறைவடைந்தே காணப்படுகின்றது. இது போதைப் பொருள்கள் உள்ளடங்கலாக அனைத்துக் குற்றச் செயல்களையும் ஒப்பிடுகையிலேயே நோக்கப்படுகின்றது.

தனியே போதை பொருள் என்று பார்க்கும் போது வடக்கில் அதிகமான பாவனையே காணப்படுகின்றது. குற்றங்களுக்கு சரியான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே பொலிஸாரின் கடமை. இதற்குப் பொதுமக்கள், ஊடகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் பங்களிப்புத் தேவை. குறித்த குற்றச்செயல்கள் கடந்த காலங்களில் ஊடகங்கள், பொதுமக்களுடைய ஆதரவாலேயே கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைகள் வழங் கப்பட்டுள்ளன.- என்றார். (ற-21,ரி3)

# சாவ. வைத்தியசாலையில் எக்ஸ்றே இயந்திரம் பழுது

யாழ்ப்பாணம், நவ.3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ள எக்ஸ்றே இயந்திரம் பழுதடைந்துள்ளால் நோயளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் தனியார் மருத்துவமனைகளில் பணம் செலுத்தித் தமது தேவையைப் பூர்த்தி செய்கின்றனர்.

வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவில் கடமையாற்றிய உத்தியோகத்தர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதால் இயந்திரம் பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளது என்றும் அங்கிருந்த பிலிம்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் எக்ஸ்றே எடுப்பதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அத்துடன் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் அம்புலன்ஸ் வாகனத்தில் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு எக்ஸ்றேஎடுத்ததும் மீண்டும் அழைத்து வரப்பட்டனர்.

இதன்பின்னர் வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் வாரத்தில் இரண்டு நாள்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றியதால் நோயாளர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களைத் தவிர்க்க முடிந்தது.

தற்போது வைத்தியசாலை எக்ஸ்றே இயந்திரம் பழுதடைந்ததால் நோயாளர்கள் தனியார் மருத்துவ நிலையங்களுக்குச் சென்று தமது செலவில் எக்ஸ்றே எடுத்துக்கொண்டு வந்து வழங்கிச் சிகிச்சை பெறுகின்றனர் (ற-9)

# இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை இல்லை

## முன்னெடுக்கப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளால்

கிளிநொச்சி, நவ.3

இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை அடுத்த வருடம் நடைபெறாது என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் காலபோக செய்கைக்கான நீர் விநியோகம் பாதிக்கப்படலாம் என கிளிநொச்சி விவசாயிகள் தெரிவித்திருந்தனர். அதுகுறித்து அரச அதிபரைத் தொடர்புகொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் பகுதியில் குளப் புனரமைப்புப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதனால் நீரைத் தேக்கி வைப்பது கடினமாக இருக்கின்றது. - என்று அரச அதிபர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

அதனால் அடுத்த வருடம் சிறுபோகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள படமாட்டாது.

சுமார் 21 ஆயிரத்து 985 ஏக்கருக்கும் அதிகளவான நிரப்பரப்பில் 6 ஆயிரத்து 495க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வரும் இரணைமடுக் குளமானது கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. அதன் கீழான கூட்டுமானங்கள் சேதமடைந்து காணப்படுகின்றன.

தற்போது குளத்தின் கீழான நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் இபாட் திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புனரமைப்பு பணிகள் தற்போது 5 திட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 20016ம் ஆண்டுக்கான சிறுபோக பயிர் செய்கை இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளபடமாட்டாது.- என்றார். (ற-21,ரி3)

# புற்றுநோயைக் கண்டறியக் கூடிய பப் சோதனை சண்டிலிப்பாயில்

யாழ்ப்பாணம், நவ.3

பெண்களின் நலன் கருதி மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் ஒரு பகுதியில் இயங்கிவரும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் சுக வனிதையர் பிணியாய்வு என்னும் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் பப் பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 2 மணியிலிருந்து இயங்கும் இந்த நிலையத்தில் மார்பகம், கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் சம்பந்தமாக பரிசோதனை இடம்பெறும் என்று தெரிவித்துள்ள வைத்திய அதிகாரி ரஜீவ், 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரையும் இந்தப் பரிசோதனையில் கலந்து பயன் அடையுமாறும் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையில் வாழும் பெண்களில், அதிகூடிய எண்ணிக்கையானவர்களின் சாவுக்கு, மார்பகப் புற்றுநோயும், கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயுமே காரணமாகும்.

கர்ப்பப்பை வாயிற் புற்றுநோயை, அது புற்று நோயாக உருவாக முன்பே உள்ள நிலையிலும், மார்பகப் புற்று நோயை அதன் ஆரம்ப காலங்களிலும், சுகவனிதையர் புனர்வாழ்வு நிலையங்களில் இலவசமாகக் கட்டணம் எதுவுமின்றிச் செய்யப்படுகின்ற சில எளிமையான பரிசோதனைகளின் மூலம் கண்டுபிடிக்கலாம். ஆரம்ப நிலையில் கண்டுபிடித்தல், இந்த நோய்கள் வராமல் தடுப்பதற்கும், இந்த நோய்களைக் குணப்படுத்தவோ, அன்றி அவற்றால் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கோ வழிகோலும்.

இந்தச் சுகவனிதையர் பிணியாய்வு நிலையங்களில், உயர் குருதி அழுத்தத்துக்கும், நீரிழிவு நோய்க்கும் உங்களைப் பரிசோதித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமும், மேலதிக அனுகூலமாகக் கிடைக்கும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-115)

# ஓட்டோ விபத்தில் அர்ச்சகர்கள் காயம்



யாழ்ப்பாணம், நவ.3

முழங்காவிலில் இருந்து கிளிநொச்சி நோக்கி அர்ச்சகர்கள் பயணித்த ஓட்டோ ஒன்று நேற்று அதிகாலையில் பூநகரிப் பிரதேசத்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. அதில் மூன்று அர்ச்சகர்கள் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முழங்காவில் பிரதேசத்தில் இடம்பெற்ற கிரியை நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு கிளிநொச்சி நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே பரந்தன்-பூநகரி வீதியில் குறித்த விபத்து நடந்துள்ளது.

அதிகாலை 5 மணியளவில் வேகமாகப் பயணித்த குறித்த ஓட்டோ எதிரே குறுக்காகச் சென்ற மாட்டுடன் மோதுண்டதை அடுத்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வயலுக்குள் பாய்ந்து அங்கிருந்த பனை மரத்துடன் மோதியுள்ளது. அதில் பயணித்த அர்ச்சகர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் வீதியால் பயணித்தவர்களால் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

# பிரதேச சபைகள் தோறும் ஆலோசனைச் சபை நியமிப்பு

## உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய

யாழ்ப்பாணம், நவ.3

பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய பிரதேச சபைகள் தோறும் 20 பேர் கொண்ட ஆலோசனைச் சபை அமைக்கப்பட்டுவருகிறது.

இந்தச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் செயலாளரின் தலைமையில் நடைபெறும் மாதாந்தக் கூட்டங்களில் பங்குபற்றி மேற்கொள்ளப்பட்டு வரும் - மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றியும் சபையின் நடவடிக்கை, முன்னேற்றம் பற்றியும் விரிவாக ஆராய்ந்து செயலாளருக்கு ஆலோசனை வழங்குவார்கள்.

வடக்கு மாகாணத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த பிரதேச சபைகளின் நான்கு வருட ஆட்சிக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கடந்த ஜுலை மாதம் 31 ஆம் திகதியுடன் சபை கலைக்கப்பட்டதால் தற்பொழுது செயலாளரின் நிர்வாகத்தின் கீழ் சபை இயங்கி வருகிறது.

இந்த நிலையில் பிரதேசத்தினதும் மக்களினதும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு பதவி இழந்த உறுப்பினர்களுக்குப் பதிலாக ஒவ்வொரு பிரதேச சபைக்கும் 20 பேர் கொண்ட ஆலோசனைச் சபையை அமைக்குமாறு செயலாளருக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் 20 பேர் கொண்ட ஆலோசனைச்சபைக்கு உறுப்பினர்கள் செயலாளரினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்தும் பரவலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-115)

# உள்ளூராட்சிச் சபை நிதி மோசடியை விசாரணை செய்ய எவருமில்லையா?

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், நவ.3

கோடிக் கணக்கான நிதி மோசடிகளில் ஈடுபட்ட வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளை விசாரிப்பதற்கு மாகாண சபையில் எவரும் இல்லையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா நகர சபை சுகாதார ஊழியர்கள் இருவர் வடக்கு மாகாண சபையால் பணிநீக்கம் செய்யப்பட்டமையைக்கண்டித்துவடக்குமாகாண சபைஉறுப்பினர்கள்,நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கும் சந்திப்பு ஒன்று கடந்த வாரம் வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரியளவிலான நிதி மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் தற்போது எங்கும் நடைபெறுகின்றன. ஆனால், எமது இந்த சாதாரண அன்றாடம் வேலை செய்வோர் காலாதி காலமாக இந்தத் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். வேறு தொழிலுக்குப் போக மாட்டார்கள். இவர்கள் மோசடி செய்து விட் டார்கள் என்று கூறி மாகாண சபை இந்தத் தொழிலாளர்களை பணியில் இருந்து நிறுத்திவிட்டது. அதே நேரத்தில் மேலிடத்தை பார்த்தால்அதிக நிதிமோச டிகளும் அதிகார துஷ்பிரயோகங்களும் நடைபெறுகின்றன. அதை கண்டு கொள்வதற்கு ஆள்கள் இல்லை. வடக்கு மாகாண சபை யின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி சபைகளில் மில்லியன் கணக்கில் பண மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன. நெல்சிப் திட்டத்தின் கீழ் நடைபெற்ற கோடிக்கணக்கான பண மோசடி குறித்து இதுவரை எந்தவிதமான விசாரணைகளும் செய்யப்படவில்லை. அவர்களை விசாரணை செய்யாமல் இந்தத் தொழிலாளிகள் மீது மேல் நடவடிக்கை எடுப்பது என்பது தவறானது. மாகாண சபையின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி சபைகளில் அவ்வாறு மோசடிகளில்ஈடுபட்டவர்களை விசாரணை செய்வதற்கு மாகாண சபையில் எவரும் இல்லையா? - என்றார். (ம-21)



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் சிறி, பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் பங்குபற்றினார். புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற மற்றும் இந்து விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் அழைப்பின் பெயரிலேயே அவர் அங்கு சென்றிருந்தார். அதன்பின்னர் அங்கு கருத்துத் தெரிவித்த அதுல் கெசாப் மதச் சுதந்திரமும், பன்முகத் தன்மையுமே அமெரிக்காவின் போற்றப்படும் விழுமியங்கள். அதுவே நாட்டை வலுப்படுத்துகின்றன என்றும் தெரிவித்தார். (ம-10)

# மாணவர் மீதான தாக்குதலை கண்டிக்கின்றது ஜாதிக பலய

கொழும்பு, நவ.3

பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்து உலமா கட்சி ஏற்பாட்டில் ஜாதிக பலய அமைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது. ஜாதிக பலய அமைப்பில் இலங்கையின் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்துக் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன.

குறித்த அமைப்புக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் தலைவர் ஆரியவங்ச திஸாநாயக்க மற்றும் உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் ஆகியோர் ஒருங்கிணைப் பாளர்களாக உள்ளனர்.

இந்த நிலையில் தங்கள் கல்விக்கு உரிய அங்கீகாரம் வழங்கக் கோரிய பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை ஜாதிக பலய வன்மையாகக் கண்டித்துள்ளது.

அத்துடன் ஜாதிக பலய அமைப்பின் ஏனைய உறுப்பினர்களான சரத் மனமேந்திர, ஜயந்த குலதுங்க ஆகியோருடன் - மௌலவி முபாரக் அப்துல் மஜீத் உள்ளிட்டோர் மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

பொலிஸாரின் அராஜகம் கட்டுப்படுத்தப்பட்டால் நல்லாட்சி என்பதற்கான அர்த்தம் கெட்டுப் போகும் என்றும் ஜாதிக பலய முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். (ம-10)

# மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம்

மட்டக்களப்பு, நவ.3

கொழும்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு முன்பாக உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின்போது மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று மட்டக்களப்பில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

'பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும்வழங்கு,உரிமை கோரும் மாணவர்களை தண்டிக்காதே' என்ற கோஷத்துடன் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு கல்முனை கோயில்குளம் பிரதான வீதியில் உயர் கல்வி அமைச்சின் கீழ் இயங்கிவரும் மட்டக்களப்பு உயர் தொழில்நுட்பவியல்நிறுவனத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது.



அதில் கலந்து கொண்ட மாணவர்கள் 'கல்வி உரிமையைக்கோரி, எச்.என்.டி.ஏ. மாணவர்களுக்கு பொலிஸாரால் ஏற்பட்ட கொடூரமான செயலை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்', 'உயர் பட்டப் படிப்பை பணத்துக்கு விற்பதை நிறுத்து', 'மாணவர்களை ஒடுக்குவதை உடனடியாக நிறுத்து', 'எச்.என்.டி.ஏ. மாணவர்கள் இழந்த கல்வி உரிமையை மீண்டும் பெற்றுத்தா', 'மாணவர்களைத் தாக்குவதும் இலவசக் கல்வியை விற்பதும் இலங்கை சட்டயாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதா?', 'மாணவர்களும் மனிதர்களே! எங்களை அடக்கி ஒடுக்க வேண்டாம்', 'மகா பொல திட்டத்தை 5000 வரை உயர்த்து', 'எச்.என்.டி.ஏ. உயர் கல்வியை வணிகவியல் (பீகொம்) தரத்துக்கு உயர்த்து' ,'எச்.என்.டி.ஏ. பாடநெறிக்கு வழங்கப்பட்ட பட்டப்படிப்புக்கு உரிய சமத்துவத்தை மீண்டும் வழங்கு' போன்ற வாசகங்கள் உள்ளடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம்நடத்தப்பட்ட இடத்துக்கு வந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான சீ.யோகேஸ்வரன் , சதாசிவம் வியாளேந்திரன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் கலந்துரையாடினர். மேற்படி விடயம் தொடர்பில் தாங்கள் பொது நிர்வாக அமைச்சின் கவனத்துக்கும் உயர் கல்வி அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் அவர் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் இது தொடர்பில் பேசுவார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழ்,முஸ்லிம் மாணவர்கள் கலந்து கொண்டனர். குறித்த பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ம-10)

# நிர்வாக ஆள் சேர்ப்பில் முஸ்லிம்களுக்கு அநீதி

## – உலமா கட்சி

கொழும்பு, நவ.3

இலங்கை நிர்வாக சேவையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவுக்கான ஆள் சேர்ப்பில் தெரிவு பெற்ற முஸ்லிம்கள் இருவர் இனரீதியாக ஓரம் கட்டப்பட்டுள்ளனர் என்று உலமா கட்சி குற்றஞ் சாட்டியுள்ளதுடன் அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அந்தக் கட்சியின் தலைவர் முபாறக் மௌலவி தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவுக்கான ஆள் சேர்ப்பில் தெரிவு பெற்ற முஸ்லிம்கள் இருவர் இனரீதியாக ஓரம்கட்டப்பட்டுள்ளனர். இது விடயத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் தலையிட்டு, நியாயம் பெற்றுத்தர வேண்டும். 2013-14 இலங்கை நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட பிரிவுக்கான தேர்வுக்காக ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். அவர்களில் எழுத்து மூல பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த 58 பேர் மட்டும் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களில் இருவர் மட்டுமே முஸ்லிம்கள். இந்த 58 பேரில் 46 பேர் தெரிவு செய்யப்படுவர் என்றும் - பின்னர் தெரிவு செய்யப்பட்ட 45 பேரின் பெயர் பட்டியல் வெளியாகிய போது மேற்படி இரண்டு முஸ்லிம்களின் பெயர்களும் நீக்கப்பட்டுள்ளன.

அவர்கள் முஸ்லிம்கள் என்பதற்காகவே இவ்வாறு அவர்கள் நீக்கப்பட்டுள்ளமை இனவாதமாகவே உலமா கட்சி காண்கிறது. ஆகக் குறைந்தது இன விகிதாசாரப்படி இந்த நியமனம் வழங்கப்பட வேண்டும் என்றிருந்தால்கூட எழுத்துப்பரீட்சையில் தேறிய மேற்படி இரு முஸ்லிம்களும் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள்.

கடந்த ஆட்சியின் இறுதிக் கட்டத்திலும் இவ்வாறு அரச நேர்முகப் பரீட்சைகளில் இனவாத செயற்பாடே அதிகம் இருந்தது. அந்த ஆட்சியிலும் எமது முஸ்லிம் அமைச்சர்கள் பந்தாக்களுடன் வலம் வந்தார்களே தவிர, இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத செயற்றிறனற்று இருந்தார்கள்.

தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான நல்லாட்சியிலும் அதே இனவாதம் தொடர்வதை அனுமதிக்க முடியாது. ஆகவே மேற்படி பரீட்சையில் வெற்றி பெற்று நேர்முகத்தேர்வில் ஓரங்கட்டப்பட்ட இரண்டு முஸ்லிம்களையும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ள வேண்டும். இது விடயத்தில் முஸ்லிம் கட்சித்தலைமைகள், அமைச்சர்கள் தலையிட்டு நீதியை பெற்றுத்தர வேண்டும்- என்றும் தெரிவித்தார். (ம-10)

# இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில் 18, 607 பேர் வாக்களிக்கத் தகுதி

## மட்டக்களப்பு உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.3

எதிர்வரும் 7ஆம் திகதி நாடளாவிய ரீதியில்நடைபெறவுள்ள 2015ஆம் ஆண்டுக்கான இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 32 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் மட்டக்களப்புத் தொகுதியில் 12 பேரும், கல்குடாத் தொகுதியில் 12 பேரும், பட்டிருப்புத் தொகுதியில் 8 பேரும் போட்டியிடுகின்றனர் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைமையக பணிமனையின் உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.என்.நைரூஸ் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 ஆயிரத்து 607 இளைஞர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மட்டக்களப்புத் தொகுதியில் 6 ஆயிரத்து 817 பேரும், கல்குடாத் தொகுதியில் 6 ஆயிரத்து 739 பேரும், பட்டிருப்புத் தொகுதியில் 5 ஆயிரத்து 51 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் பட்டியல் விவரமும் அவர்களுக்கான தொடர் இலக்கங்களும் தற்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனையால் வெளியிடப்பட்டுள்ளது- என்றார். (ம-10)

# விழா என்னும் பெயரில் நாள்கணக்கில் பாடசாலைகளில் பகட்டு நிகழ்வுகள்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், நவ.3

பாடசாலைகளில் விழாக்கள் எனும் பெயரில் பகட்டுக்கு விழா எடுத்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் வருத்தி பெரும் பணச்செலவில் நாள்கணக்கில் விழாக்கள் நடத்துவது தேவைதானா? - என்று கேள்வி எழுப்பியுள்ளார் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

மல்லாவியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அண்மையில் அரச திணைக்களங்களில் கணினித் தொழில்நுட்ப உதவியாளர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் வடபகுதியைச் சேர்ந்த பல பரீட்சார்த்திகள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் தெரிவாகிய போதும், நேர்முகத் தேர்வின் போது அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கணினிச் சான்றிதழ்களை வழங்கிய கல்லூரிகள் அரச அங்கீகாரம் பெற்றிருக்காமை, எத்தனை மணித்தியாலப் பயிற்சிகள் வழங்கப்பட்டன என்ற விவரங்கள் சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டிருக்காமை போன்ற காரணங்களால் அவர்கள் அந்தப் பதவிகளுக்குத் தெரிவாகவில்லை என அறிந்து கொண்டேன். பரீட்சையை மிக நன்றாகச் செய் தும் இப்பேர்ப்பட்ட காரணங்களால் அவர்கள் நிராகரிக்கப் பட்டார்கள்.

உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டோமானால் பல பாடசாலைகளில் இருந்து எனக்கு அழைப்புக்கள் வருகின்றன. பாடசாலையின் 25 ஆவது ஆண்டு நிறைவு, 50ஆவது, 60ஆவது, 100ஆவது, 125ஆவது எனப் பல ஆண்டு நிறைவு விழாக்களைக் கொண்டாட அழைக்கின்றார்கள். இவற்றை நான் பிழையாகக் கருதவில்லை. எனினும் இப்பேர்ப்பட்ட விழாக்களுக்கு பரீட்சை நெருங்கும் காலத்தில் மாதக் கணக்காகப் பிள்ளைகளை ஈடுபடுத்தி, ஆசிரியர்களையும் சிரமத்துக்குள்ளாக்கிப் பெரும் பணச் செலவில் விழாக்களை எடுப்பது உசிதமானது தானா என்ற கேள்வி எழுகின்றது. இதனால் விழாக்கள் சிறப் படைகின்றன. ஆனால் மாணவ, மாணவியரின் கல்வி மட்டங்கள் கீழ்நிலையை அடைந்து விடுகின்றன. சிங்களத்தில் ஒரு சொற்றொடர் உண்டு. தகுதிக்கு மீறிய டாம்பீகம் என்று வேண்டு மானால் அதனைத் தமிழில் மொழி பெயர்க்கலாம். மாணவ சமுதாயத்தின் கல்விக்குப் பங்கம் ஏற்படும் விதத்தில் இப்பேர்ப்பட்ட விழாக்களை நடத்துவது ஒரு டாம்பீக நிகழ் வாகவே எனக்குப் படுகின்றது. வேண்டுமெனில் வருடத் தொடக்கத்தில் அல்லது பரீட்சை முடிந்த பின்னர் குறித்த கொண்டாட்டத்தைக் கொண்டாடலாம். ஆண்டு நிறைவை உரிய நாளில் கொண்டாடாது உரிய ஆண்டில் கொண்டாடுவதாகக் காட்டலாம். ஆனால் பாடசாலைகளில் விழாக்கள் முக்கியம். கல்வியுடன் இணைந்த கல்விக் கண்காட்சி, கல்விச் சுற்றுலா போன்ற நிகழ்வுகளுக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலம் கடைநிலை மாணவனைக்கூட புத்தகத்தை விரிக்கவைக்க முடியும். ஆனால் பகட்டு நிகழ்வுகளால் மாணவ சமுதாயத்தின் கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது.

நான் பாடசாலைகளை மட்டும் குறையாகக் கூறவில்லை. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பான நெருக்கமான கரிசனையை வெளிக்காட்டுகின்றார்களா என்பதும் பரிசீலித்துப் பார்க்கப்பட வேண்டும். பாடசாலை முடிந்தவுடன் பிள்ளைகள் வீடு வந்து சேர்கின்றார்களா? வேறு எங்கு செல்கின்றார்கள்? தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்பவர்கள் அங்கு கிரமமாகச் செல்கின்றார்களா, வகுப்புக்கள் நிறைவடைந்ததும் வீடு திரும்புகின்றார்களா? அல்லது வேறெங்கும் செல்கின்றார்களா? என்பதைப் பெற்றோர்கள் கண்டறிய வேண்டும். மாலையில் விளையாட்டு மைதானத்தில்நின்றாற்கூட அது வரவேற்கப்பட வேண்டும்.

மாணவர்கள் விருப்புடன் கல்வி கற்கக் கூடிய விதத்தில் கற்பித்தல்கள் அமைய வேண்டும். அதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அன்பு வழியில் கல்வி முன்னெடுப்புக்களை மேற்கொள்வதன் மூலமாக சிறந்த ஒரு கல்விச் சமுதாயத்தை நாம் உருவாக்கலாம். நாம் அனைவரும் பாடுபட்டால் மாணவர்களை நல்ல வழியில் சென்று கல்வியில் உயர்ச்சி பெற வழிவகுக்கலாம் - என்றார். (101)

# பறிக்கப்பட்ட நிலங்கள் மீள வழங்கப்பட வேண்டும்

–ஜே.வி.பி.



கொழும்பு, நவ.3

மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் அவர்களுக்கே வழங்கப்படவேண்டும். இதனை அரசு உறுதி செய்யவேண்டும் என்று ஜே.வி.பி. கோரியுள்ளது அந்தக் கட்சியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட தினத்தை நினைவுகூர்ந்து ஹஸ்புல்லா என்பவர் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்த நிகழ்வில் அநுரகுமார பிரதம அதிதியாக பங்கேற்று உரையாற்றினார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்–

வடக்கில் படையினரால் அபகரிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் வழங்கப்படும்போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. நிலச் சொந்தக்காரர்களுக்கு தமது நிலங்களின் உரித்து மாத்திரமல்லாமல் அந்த நிலத்தில் உறவும் இருக்கிறது. நாட்டில் தற்போது போர் முடிவடைந்துள்ள நிலை யில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அவசியமற்றவை.- என்றார்.(ற)





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** செயலில் நேர்த்தியும், திறமையும் வெளிப் படும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதி கரிக்கும். விருந்து உபசரிப்பில் பங்கேற்று மகிழ்வீர்கள். உறவினர் வருகையால் கலகலப்பு உண்டாகும்.

**இடபம்:** கடந்த கால அனுபவத்தை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெற்றோர் உடல் நல னில் அக்கறை கொள்வீர்கள். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மிதுனம்:** பிறரது நலனில் அக்கறை கொள்வீர்கள். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி ஏற்படும். இலாபம் கூடும்.

**கடகம்:** பேச்சு, செயலில் நிதானத்தைக் கடைப் பிடிக்கவும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடை களை முறியடிப்பீர்கள். புத்திரர் படிப்பு, வேலையில் முன் னேறுவர். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**சிங்கம்:** சுறுசுறுப்பாக அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் அதிக இலாபம் கிடைக்கும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்குப் பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**கன்னி:** உறவினர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படி யாகக்கூடும். பெண்களுக்கு நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர்.

**துலாம்:** கடந்த கால உழைப்புக்கான பயன் கிடைக் கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். குடும்பத் தேவையை அதிக பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.


**விருச்சிகம்:** எளிய விடயம் கூட சுமை போலத் தோன்றும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலா பம் கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

**தனுசு:** நண்பர்களுக்குத் தேவையான உதவியைச் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பண வரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்ட மிடுவீர்கள்.

**மகரம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு கூடும். உறவினரோடு சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள்.


**கும்பம்:** நண்பரின் உதவியால் குடும்ப சிரமம் நீங்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல் லது. மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மீனம்:** குடும்ப வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள் வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் இலாபம் அதிகரிக்கும். உடல் நலனுக்காக மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும்.




# அனுஷ்காவை விரட்டும் ராணி

நடிப்புத்திறனால் ராணியாகவே பார்க்கப்படும் நிலையை உருவாக்கியுள்ள நடிகை தான் அனுஷ்கா. 'பாகுபலி' படத்தில் அனுஷ்கா ராணி வேடத்தில் வந்து இரசிகர்கள் மத்தியில் ராணி போலவே வலம் வரத் தொடங்கியுள்ளார். இதையடுத்து 'ருத்ரமாதேவி' படத்திலும் சரித்திர கால ராணியாக நடித்திருந்தார். அவரைச் சுற்றியே திரைக்கதை வலம் வரும் இந்தப் படமும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. வரலாற்றுப் பின்னணியில் உருவான இந்தக் கதைகளுக்காகவே அனுஷ்கா பல்வேறு பயிற்சிகளைப் பெற்றார். கடினமாக உழைத்தார். அதற்கு நல்ல பயனும் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து மீண்டும் அனுஷ்கா ராணியாக நடிக்கவுள்ளார். தற்போது சரித்திரப் பின்னணி கொண்ட 'பகமதி' ராணியாக இவரை வைத்துப் படம் எடுக்க தெலுங்கு இளம் இயக்குனர் ஜி.அசோக் முன் வந்துள்ளார். இதற்கான கதையை அனுஷ்காவிடம் அவர் சொல்லி நடிக்குமாறு கேட்டுக்கொண்டாராம். கதையும் அதில் வரும் ராணி பாத்திரமும் பிடித்து விட்டதால் தொடர்ந்தும் நடிப்பதற்கு அனுஷ்காவும் சம்மதம் தெரிவித்துள்ளாராம். இப்போது 'பாகுபலி-2' இல் நடிக்க இருப்பதால் உடனே இந்தப் படப்பிடிப்பு நடைபெற வாய்ப்பு இல்லை. எனவே 'பாகுபலி-2' படப்பிடிப்பு முடிந்த பின்னர் மற்றொரு ராணியாக நடிக்க இப்போதே அனுஷ்கா தயார் ஆகியுள்ளார்.



உலகில் உயர்ந்த மனிதர்கள் வாழும் வீடு. படிக்கட்டையே காணவில்லை. கதவத்திறக்கிறவன் செத்தான்டா..



## பேஸ் புக்கில் பிடித்தவை...










பார்வை இல்லாதவர்கள் தண்ணீர் அருந்துவதற்கு குழாய் திறந்து கொடுத்து உதவும் குரங்கு: இந்த உணர்வை மனி தர்கள் ஆகிய நாம் புரிந்துகொண்டால் நல்லதுதானே....



கதவே இல்லாத இடத்தில் பல்கணியா.. கட்டினவன் மறந்திருப்பானோ?



இதுக்கு மேலயும் கெல்மெற்றா..



உங்கள் விழிகளில் பட்ட இந்தப் படம், நீங்கள் செல்லும் வழிகளில் ஒரு ப(ா)டம்

# புற்றுநோயை முன்கூட்டியே அறிய சுக வனிதையர் பிரிவு ஆரம்பிப்பு

## மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,நவ.3
பெண்களின் நலன் கருதி மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் ஒரு பகுதியில் இயங்கிவரும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில், "சுக வனிதையர் பிணியாய்வு" என்னும் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் 'பப்' பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 2 மணியிலிருந்து இயங்கும் இந்த நிலையத்தில் மார்பகம் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் சம்பந்தமாக பரிசோதனை இடம் பெறும். 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரையும் இந்தப் பரிசோதனையில் கலந்து பயன் அடையுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் தொடர்பில் முன் கூட்டியே பரிசோதனை மூலம் அறிந்து சிகிச்சை அளிப்பது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இலங்கையில் வாழும் பெண்களில், அதி கூடிய எண்ணிக்கையானவர்களின் சாவுக்கு, மார்பகப் புற்றுநோயும், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயுமே காரணம் என்பதை நீங்கள் அறிவீர்களா? கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை, அது புற்றுநோயாக உருவாக முன்பே உள்ள நிலையிலும், மார்பகப் புற்றுநோயை அதன் ஆரம்ப காலங்களிலும், "சுகவனிதையர் புனர்வாழ்வு" நிலையங்களில் கட்டணம் எதுவுமின்றிச் செய்யப்படுகின்ற சில எளிமையான பரிசோதனைகளின் மூலம் கண்டு பிடிக்கலாம். ஆரம்ப நிலையில் கண்டுபிடித்தல், இந்த நோய்கள் வராமல் தடுப்பதற்கும், இந்த நோய்களைக் குணப்படுத்தவோ, அன்றி அவற்றால் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கோ வழிகோலும். அத்துடன், இந்தச் சுக வனிதையர் பிணியாய்வு நிலையங்களில், உயர் குருதி அழுத்தம் மற்றும், நீரிழிவு நோய் குறித்தும் உங்களைப் பரிசோதித் துக் கொள்வதற்கான சந்தர்ப்பமும், உங்களுக்கு மேலதிக அனு கூலமாகக் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-115)

# இந்து சமூகத்தின் பின்னடைவு குறித்த ஆலோசனைக் கூட்டம்

## ஆலயங்களின் பிரச்சினைகளும் ஆராயப்படும்

யாழ்ப்பாணம்,நவ.3
அண்மைக்காலமாக இந்து சமூகம் அடைந்துவரும் பின்னடைவுகளுக்கு உரிய காரணங்களைக் கண்டறிவதற்கான ஆலோசனைக் கூட்டம் வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.
இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆலயங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், குருமார்களின் பற்றாக்குறை, இந்து அமைப்புக்களின் பொதுப் பணிகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளன.
அத்துடன்யாழ்ப்பாணத்தின் இந்து அமைப்புக்களின் பிரதிநிதித்துவ இந்து மத குரு தெரிவும், ஆலோசனைக் குழுத் தெரிவும் நடைபெறவுள்ளன.
இந்தக் கலந்துரையாடலில் அந்தண, சைவக் குருமார்கள், இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய பரிபாலன சபையினர், தர்மகர்த்தாக்கள், இந்து இளைஞர் மன்றத்தினர், சமயச் சொற் பொழிவாளர்கள், இந்து சமய ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன் வைக்கலாம்.
அதே வேளை இந்தக் கலந்துரையாடலின் போது எடுக்கப்படும் தீர்மானங்கள் மனுக்கள் உரிய பிரமுகர்களிடம் கையளிக்கப் படவுள்ளன. (ஐ)


### பகிரங்க கேள்விகள் மூலம் விற்பனை செய்தல்
### மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்

கீழே குறிப்பிடப்பட்ட பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பொருள்களை விற்பனை செய்வது தொடர்பாகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை 2015.11.18ஆம் திகதி பி.ப. 2.30 வரை யாழ்ப்பாண மேல்நீதிமன்றக் கணக்குக் கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100/= ஐ செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிடப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். பொருள்கள் தொடர்பான விவரங்களும் மீளளிக்கக் கூடிய கேள்விப் பத்திர வைப்புத் தொகை போன்ற விவரங்களும் பின்வருமாறு,

| விவரம் | மீளளிக்கக் கூடிய வைப்பு (ரூபா) |
|---|---|
| 1. F.R.P.Boat (Hull No-DM2244<br>2. Yamaha out board engine<br>3. Ancher | 2000.00 |
| 4. Fiberglass Vallam<br>5. Inboard diesel engine | 2000.00 |

கேள்விப் பத்திரங்களைக் கௌரவ மேல்நீதிமன்ற நீதிபதி, மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தபால் உறையிலிட்டு ஒட்டப்பட்டு சீலிடப்பட்டு 2015.11.18ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக மேல்நீதிமன்றக் கணக்கீட்டுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் (Tender Box) இடுதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் கடல் உபகரணம் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் - 2015 எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மா.இளஞ்செழியன்
மேல்நீதிமன்ற நீதிபதி/
மேல்நீதிமன்றப் பெறுகைக்குழு தலைவர்
மேல்நீதிமன்றம்,யாழ்ப்பாணம்.
(65727)(11,16)

### வாகனம் வாடகைக்கு

TATA லொக்கா Supper ace படி வாகனம் (Original Alumiya Body) மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 077 746 6678,
077 659 7951
(65729)(11,16,17)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசித்து வரும் தாயும் மகளும் உள்ள குடும்பம் ஒன்றுக்குத் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை
தொடர்பு:- 077 035 3624
(65733),(11,16,17)

### Urumpirai Kids Park

Spoken (Elocution) Classes For Examination Conducted by CALSDA (Colombo)

ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சமூக நோக்கில் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

**Applications are invited to CALSDA Grade IV (School grades, 6,7+8)**

- ADMISSION BY INTERVIEW
- CLASSES ON SUNDAYS **4 P.M - 6 P.M**
- CLOSING DATE :- **04.11.2015**

Gnanavairavar Kovil Road,
Urumpirai. (65732)(11,16) T.P: 021 205 4654

### மாகாண கல்வி அமைச்சு - வட மாகாணம்

பாடசாலை மாணவர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்.

**விளம்பர திருத்தம் - கேள்வி அறிவித்தல்**

01.11.2015 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக் கப்பட்ட மேற்படி விளம்பரத்தின் 3 ஆவது விடயமாக குறிப்பிடப்பட்டிருக்கும் விலைக்கேள்வி பத்திரங்கள் 20.11.2015 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாக சேர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இதனை 20.11.2015 ஆம் திகதியன்று மாலை 3.30 மணிக்கு முன்பதாக சேர்க்கப்படல் வேண்டும் என்று திருத்தம் செய்யப்படுகிறது. என்பதனை அறியத்தருகிறேன்.

திரு.இ.இரவீந்திரன்
தலைவர் - பெறுகைக்குழு,
மாகாணக்கல்வி அமைச்சு, வடமாகாணம்.
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(c19700)
(14,15,17)

### வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசசபை
### வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2016

சபையானது 2016ஆம் ஆண்டுக்கான கீழ்குறிப்பிடப்பட்டுள்ளபொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருள்கள்**

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. கட்டடப் பொருள்கள்
05. கற்கள், மணல், கிரவல்
06. தீந்தை வகைகள்(Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
07. நீர் வழங்கும் குழாய்கள், கியூம்பைப்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
08. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
09. மின்வழங்கும் பொருள்கள், மின்பாவனைப்பொருள்கள்
10. எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள்
11. இரும்புப்பொருள்கள்
12. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
13. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
14. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றம் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
15. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமிநாசினிகள்
16. பாதணிகள், தோற்பொருள்கள்
17. இலத்திரனியல் பொருள்கள்
18. வாகன சுத்திகரிப்பு

**சேவைகள்**

01. அச்சிடுதல்
02. மோட்டார்வாகனம், உழவு இயந்திரம் திருத்தல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்
04. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்
05. மீள மின்வலுவூட்டல்
06. இலத்திரனியல்சாதனங்கள் திருத்தல்
07. வாகனங்கள் சுத்திகரிப்பு
08. கணினி பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம் சுத்திகரிப்பு(Service)
09. இறப்பர் முத்திரை தயாரித்தல்

**ஒப்பந்த வேலைகள்(ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)**

01. கட்டடநிர்மாண வேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதிநிர்மாண / திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை அலுவலக நேரங்களில் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசசபை அலுவலகத்தில்பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2016 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, மன்னார் மதவாச்சி வீதி, வெங்கலச் செட்டிகுளம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 23.11.2015 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

மேலதிக விவரங்களுக்கு
024 - 226 0915 அல்லது 024 - 226 0914
எனும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
(c 19699)
(14,16,17)

தலைவர்
பிரதேசசபை
வெங்கலச்செட்டிகுளம்
02.11.2015




## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் சேனாதிராஜா



ஆலங்குளம் துணுக்காயைப் பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும், விநாயகபுரம் நெளுக்குளத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சேனாதிராஜா அவர்கள் 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமக னும், புனிதவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மகேந்திரராசா, லங்காதேவி (சுவிஸ்), தவேந்திரராசா (சுவிஸ்), றஞ்சிதா தேவி (ஆசிரியை - ஹற்றன்), திருஆவன் (மிருகவைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சகுந்தலாதேவி, யோகராசா (சுவிஸ்), சற்குணதேவி (சுவிஸ்), சற்குணேஸ்வரன் (ஹற்றன்), சுமதினி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமனா ரும், பார்வதி, காலஞ்சென்றவர்களான சிவகாமி, யோகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிந்துஜா (நெதர்லாந்), பிரசாந் (பொறியியல் பீடமாணவன்), ரதுசன்(சுவிஸ்), ஜெனன் (சுவிஸ்), ஜஸ்மி (சுவிஸ்), மயூரிக்கா (மருத்துவபீட மாணவி), கயூரிக்கா (ஹற்றன்), சுஜானி (மாணவி - றம்பைக்குளம் மகளிர் ம.வி) ஆகியோரின் அன்புப் பேரனும், ரிந்திக்காவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விநாயகபுரம்,
நெளுக்குளம்,வவுனியா.
(65277)(11,16)

தகவல்:
குடும்பத்தினர்.
077 875 4002, 077 925 5470, 075 690 0855

### திருமதி பெர்ணடேற்றம்மா லீனஸ்



பொன்னாச்சிக்கடைச் சந்தி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெர்ணடேற்றம்மா லீனஸ் அவர்கள் 02.11.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவல் தம்பி லீனஸ் (திருக்குடும்ப பொது நிலையினர் சபை தலைவர், ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் தொழில் திணைக்களம் - யாழ்) அவர்களின் அன்பு மனைவி யும், காலஞ்சென்ற அலோசி யஸ் பிராங்லின், றூபன், சாந்தினி, தீபன் மற்றும் றாஜினி, சுபாஜினி (ஊர்.ப.நோ.கூ.சங்கம்) றோகன் (ஆசிரியர் ஊர்/புனித அந்தோனியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், யேசுதாசன், ஜீவப்பிரகாசம், றஸ்மி (ஆசிரியை யா/ஊர்காவற்றுறை றோ.க.த.ஆண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும்,றஜீவன், மிலோஜன், பியனுஜன், ஷாலு, ஷணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.11.2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்குப் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனிதயாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாச்சிக்கடைச் சந்தி,
ஊர்காவற்றுறை.
(65726)(11,16,17)

தகவல்:
குடும்பத்தினர்.
(077 110 2941)

### சுப்பிரமணியம் பத்மநாதன்

(இளைப்பாறிய ஆய்வுகூட பரிசோதகர் MLT)



பிறப்பு 06.02.1933 இறப்பு 01.11.2015

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலி கலாசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்மநாதன் 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிர மணியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜமலரின் (இளைப்பாறிய ஆசிரியர்) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான இரங்கநாதன், இராசலக்சுமி, சிவபாக்கியம் ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும் சத்தியபாமா(மருத்துவர், மீனா Global Lifestyle Lanka, பங்காளர்), பிரபாகரன் (சுவிஸ்), பிரியா (மட்டக்களப்பு), சுதாகரன்(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனேஸ்குமார்(மருத்துவர், தூயவன் Global Lifestyle Lanka பங்காளர்), சஞ்சிவா(சுவிஸ்), சிதம்பரேசன்(சிரேஷ்டவிரிவுரையாளர் கிழக்கு பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழ்மதி(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பாவலன்(புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கைரதி, கரேஸ், கிசோர், தேசகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2015) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(65727)
(14.16.17)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
021 222 0074,
077 366 2802

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் (தனேஸ்குமார்)

## பாடசாலைச் சேவை வாகனங்களை பதிவுக்கு உட்படுத்த அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.3
யாழ் மாவட்டத்தில் பாடசாலைச் சேவையில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் நாளை பதிவுக்குட்படுத்துமாறும், அவ்வாறு பதிவுக்குட்படுத்தாத வாகனங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் யாழ் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். மேலும் பாடசாலைச் சேவையில் ஈடுபடும் ஓட்டோ, பஸ், சொகுசு வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களுக்குமான பதிவுகளை நாளை காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளையில் மேற் கொள்ள முடியும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி காரசபையின் சட்ட சரத்துக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடைமுறையில் பதிவை மேற்கொள்ளவுள்ள வாகன உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை(உரிமையாளர், சாரதி, நடத்துனர்), சாரதி அனுமதிப்பத்திரம் (சாரதிக்கு மட்டும்), காப்புறுதி பத்திரம் மற்றும் வரிப் பத்திரம் முதலான ஆவணங்களுடன் சமுகமளிக்கமாறும் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி5)

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அல்பிரட்
இராஜேந்திரா சபாபதிப்பிள்ளை

தோற்றம் 30 . 08 . 1926



மறைவு 03 . 11 . 2012

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கிய வான்கள்"


மூன்று ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் வாழ்கின்றீர்.

"ஜோய் லின்" உடுவில் வீதி, மானிப்பாய்.

என்றும் மறவாத
குடும்பத்தினர்.

### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லத்துரை சிங்கராசா
(புகையிரத நிலைய ஓய்வூதியர்)
(திதி:அட்டமி 03.11.2015)



தோற்றம் 28 . 01 . 1932

மறைவு 30 . 10 . 2010

நிஜமாக நீங்கள் மறைந்து
ஐந்தாண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும்- ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்

இல.12,சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.
(f/19673)(11,16)

உங்கள் நினைவுகளுடன் என்றும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகள்.

### சாவகச்சேரிச் சந்தையில் வாகனங்கள் நிறுத்தத் தடை

சாவகச்சேரி,நவ.3
சாவகச்சேரி கடைத் தொகுதியின் விறாந்தையில் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைக்க நகரசபையினர் நேற்று முன்தினம் தொடக்கம் தடை விதித்துள்ளனர். மழை காரணமாக மற்றும் தீபாவளி பண்டிகைத் தேவை போன்றவற்றுக்கு வரும் பொதுமக்களின் பாவனைக்குப் பயன்படுத்த வேண்டியிருப்பதால் நவீன சந்தைக்கடைத்தொகுதிகள் அமைந்துள்ள பகுதியில் காணப்படும் விறாந்தைகளில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

### ஆசிரியர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைப் பயிற்சி

சாவகச்சேரி,நவ.3
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3:1 இல் உள்ள ஆசிரியர்களை தரம்2:11தரத்துக்கு உள்வாங்குவதற்கான பரீட்சை தொடர்பாக, தகைமையுள்ள ஆசிரியர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைப் பயிற்சி வகுப்புகள் கடந்த 29 ஆம் திகதி வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் ஆரம்பமாகின. 7 அலகுகளைக் கொண்ட இந் தப் பயிற்சி வகுப்பின் முதலாவது அலகுக்கான பயிற்சி வகுப்பை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் ஆரம்பித்து. வைத்தார் வரணி ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் க.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுக்கு வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப் பாளர் சு.சுந் தரசிவமும் கலந்து கொண்டார். பயிற்சிக்கான ஏழு அலகுகளும், கட்டம் கட்டமாக நடத்தப்பட்டு இறுதியில் பரீட்சை நடத்தப்படுமென்றும் பரீட்சையில் சித்திபெறு வோர் ஆசிரியர் சேவைதரம் 2 : 11 க்குள் உள்வாங்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

### அஷ்ரப் நினைவு

மட்டக்களப்பு, நவ.3
தலைவர் அஷ்ரப் நினைவு நிகழ்வு எனும்தலைப்பிலான இளைஞர் மாநாடு சாய்ந்தமருது லீ மெரீடியன் வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் அமைப்பான இளைஞர் காங்கிரஸின் ஏற்பாட்டில் நடை பெற்ற இந்த மாநாட்டில் கட்சியின் தலைவரும், அமைச்சருமானரவுப்ஹக்கீம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் சட்டத் தரணி ஆரீப் சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது. (ஐ-10)

# கமநலக் காப்புறுதி செய்வதன் மூலம் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்

## பிரதி உதவிப் பணிப்பாளர் பி.பூரணச்சந்திரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு,நவ.3

பெரிய மற்றும் சிறிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் கம நலக் காப்புறுதி செய்வதன் மூலம் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இயற்கை அழிவு மற்றும் யானைகளின் அழிவு என்பன வற்றால்ஏற்படுகின்ற இழப்புகளின் போது அதன் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என வவுனியா, முல்லைத்தீவு மாவட் டங்களின் பிரதி உதவிப் பணிப் பாளர் பி.பூரணச்சந்திரன் தெரி வித்துள்ளார். அவர் மேலும் தெரி விக்கையில், பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் நீர்ப்பாசன முறை யில் நெல் விதைப்பை மேற் கொள் ளும் ஒரு விவசாயி போகமொன றின் போது ஆயிரத்து 500 ரூபா வைச் செலுத்தினால், அவர் 25 ஆயிரம் ரூபாவை நஷ்ட ஈடாகப் பெறமுடியும். அதேபோன்று சிறிய குளங்களின் கீழ் பயிர் செய்யும் ஒரு விவசாயி ஆயிரத்து 625 ரூபாவை செலுத்து மிடத்து 25 ஆயி ரம் ரூபாவை நஷ்ட ஈடாகப் பெற் றுக் கொள்ள முடியும். அத்துடன் காப்புறுதி தொகைகளுடன் மேலும் 5 ஆயிரம் ரூபாவைச் செலுத்து வதன் மூலம் யானைகளின் தாக் கத்தால் அழிவுகள் ஏற்படும்போது 25 ஆயிரம் ரூபாவைப்-பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-500)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவில் வீதியில் அலையும் கட்டாக்காலிகள்

## வீதியில் செல்வோர் விபத்து

சாவகச்சேரி,நவ.3

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக வீதியில் அலையும் மாடுகளால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. அவ்வாறான இரு விபத்துக்களில் சிக்கி மூவர் காயங் களுக்கு உள்ளானதுடன் அவர் களில் இருவர் மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட் டனர். கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது வீதியில் நின்ற மாட்டுடன் மோதியதில் அதில் பயணித்த இரு வர்காயமடைந்தனர். காயமடைந்த வர்கள் சாவகச்சேரி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தி யசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார். இந்தச் சம்பவம் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது. இதே வேளை திருமண வீட்டின் நான் காம் நாள் கொண்டாட்டத்தில் கலந்து விட்டுத் தமது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய நபர் கொடிகாமம் பகுதியில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதியதில் காய மடைந்தார். இந்த விபத்தில் காய மடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தி யசாலைக்கு கொண்டு செல் லப்பட்டார். (ஐ-9)

# பருவமழை ஆரம்பிப்பு இடர்கள் ஏற்பட வாய்ப்பு

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ்.மாவட்டத்தில் பருவமழை ஆரம்பித்துள்ளதால் பல்வேறு இடர்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. இந்த நிலையில் அனைத்து உள்ளூராட்சிச் சபை களும் தமது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதி கள், வடிகால்கள் போன்ற வற்றில் மழை நீர் தேங்கி பாதிப்பு ஏற்படாத வகையில் தேவையான நட வடிக்கைகளை மேற்கொள் ளுமாறு, யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி சபை களின் செயலா ளர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-9)

# முல்லைத்தீவு பிரதான வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன

முல்லைத்தீவு,நவ.3

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையால் விபத்து ஏற்படக் கூடிய இடங்களாக அடையாளப் படுத்தப்பட்ட, வீதி விளக்குகள் பொருத்தப்படாத வீதி களுக்கு சூரிய மின்கல விளக்குகள் பொருத் தப்பட்டன. முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதியிலுள்ள 3 ஆம் கட்டை மஞ்சள் பாலத்தில் ஒரு விளக்கும், அதனை யடுத்துள்ள வளைவில் ஒரு விளக்கும், நந்திக் கடல் வெளியிலுள்ள வளைவில் ஒரு விளக்குமாக மூன்று விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் ஒரு விளக் கின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபா எனத் தெரிவிக் கப்படுகின்றது. வீதி விளக்குகள் பொருத்தப்பட வேண் டும் என மாவட்ட சிவில் பாதுகாப்பு செயலணிக் கூட் டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு ஏற்ப இந் தச் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஐ-433)

# விதை உருளைக்கிழங்குக்கு விவசாயிகள் விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,நவ.3

யாழ். குடாநாட்டில் இந்த முறை உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடுவதற்கு என விவசாயிகள் 2 ஆயிரத்து 600 அந்தர் விதை உருளைக்கிழங்குக்கு விண் ணப்பித்துள்ளனர் என்று மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ். தெய் வேந்திரம் தெரிவித்தார். இந்த முறை கூடுதலான விவசாயிகள் உருளைக்கிழங்கு ச் செய்கையில் அதி க ஆர்வம் காட்டியுள்ளனர். கடந்த போகத்தை விட இந்தப் போகத்துக்கு அதிகமான விவசாயிகள் இந்த விதை உருளைக்கிழங்குக்கு விண்ணப் பித்து உள்ளனர். நவம்பர் மாத நடுப்பகுதியில் விதை உருளைக்கிழங்கை யாழ்ப் பாணத்துக்கு எடுத்து வந்து விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விதை உருளைக் கிழங்கின் நடுகை நவம்பர் மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரி வித்தார். கடந்த வருடத்தை விட இந்த முறை இந்த விதை உருளைக்கிழங்கின் விலை அதிகரித்தும் உள்ளது. (ஐ-17)

# வாழ்வின் எழுச்சி திட்டத்தில் பயனாளிகளுக்கு உதவிகள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வாழ்வின் எழுச் சிப் பயனாளிகளுள் தெரிவு செய்யப்பட்ட பயனாளி களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் செயற்றிட் டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயனாளிகளால் கோரப்பட்ட பிரகாரம் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளி கருவிகள், மின்சார மோட்டர்கள் மற்றும் தும்பு உற்பத்தி இயந்திரங்கள், கால்நடைகள் போன்றவை வழங் கப்பட்டு வருகின்றன. இந்தத் திட் டத்துக்கென வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தி னால் 29 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 90 வீதமானியம், 40 வீத மானியம் என்ற அடிப் படையில் வழங்கப்பட்டு வருவதாக வாழ்வின் எழுச்சிப் பயனாளிகள் தெரிவித்தனர். (ஐ-9)


# 2016 ஆம் ஆண்டிற்கான இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்

## மாந்தை மேற்கு பிரதேசசபை

மாந்தை மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகளை 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**2016 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை**

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர) | அனுமதிக்கப்பட்ட கொல்களம் |
|---|---|---|---|---|---|
| 01 | காத்தாங்குளம மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 8,000.00 | **450,000.00** | புளியங்குளம் |
| 02 | அடம்பன் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **342,000.00** | |
| 03 | வட்டக்கண்டல் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **300,000.00** | |
| 04 | ஆண்டாங்குளம மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **300,000.00** | |
| | **விடத்தல்தீவு உப அலுவலகம்** | | | | |
| 05 | விடத்தல்தீவு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | **150,000.00** | பெரியமடு |
| 06 | பெரியமடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 3000.00 | **162,000.00** | |
| | **இலுப்பைக்கடவை உப அலுவலகம்** | | | | |
| 07 | இலுப்பைக்கடவை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 4,000.00 | **100,000.00** | மூன்றாம்பிட்டி |
| 08 | மூன்றாம்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 4,000.00 | **102,000.00** | |
| | **மடு உப அலுவலகம்** | | | | |
| 09 | பெரிய பண்டிவிரிச்சான் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **300,000.00** | பெரிய பண்டிவிரிச்சான் |
| 10 | காக்கையன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **300,000.00** | காக்கையன்குளம் |

**ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார். என்னும் முகவரியிலிருந்து (தொலைபேசி இல 023-3233627/023-3233742) கட்டணங்களை செலுத்தி கேள்வி பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.**

01. கேள்வி பத்திரம் வழங்கும் காலம் - **04.11.2015 மு.ப 9.00 – 26.11.2015 பி.ப 2.00 மணிவரை.**
02. கேள்வி பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி - **26.11.2015 பி.ப 2.00 மணிவரை.**
03. கேள்வி பத்திரம் திறக்கப்படல் - **26.11.2015 பி.ப 2.00 மணிக்கு.**
04. **26.11.2015** ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.
05. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார்** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் மூலப்பிரதியினையும், நிழற்பிரதியினையும் வெவ்வேறாக குறிப்பிட்டு தனித்தனியே அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்
06. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பட பிரதியினையும் தாம் வதியும் இடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. உள்ளூராட்சி மன்றத்தினால் தவறுணராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
08. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. வியாபார நடவடிக்கையின் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்க கூடிய தராசினை பயன்படுத்த வேண்டும்.
10. **2015** ஆம் ஆண்டிற்கான குத்தகை நிலுவை உள்ளவர்கள் **2016** ஆம் ஆண்டிற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
11. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் **1/3** பகுதியை **10.12.2016** ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையில் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு
13. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சம்சோன் ஜெனிங்ஸ்,**
**செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை,**
**அடம்பன்.**

03.11.2015

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

## ஒய்வுபெற்ற 25 வருட சேவையை பூர்த்திசெய்த அங்கத்தவர்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அங்கத்தவர்களது பிள்ளைகள்

# கௌரவிப்பு விழா - 03.11.2015

**தலைவர்**

சி.தங்கராஜா
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

**தலைமை விருந்தினர்**

கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர், வடமாகாண சபை

**விசேட விருந்தினர்கள்**

பேரவை உறுப்பினர்கள்
துணைவேந்தர்
பீடாதிபதிகள்
பதிவாளர்
துறைத்தலைவர்கள்
விரிவுரையாளர்கள்
நிர்வாக உத்தியோகத்தர்கள்
சமூக மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள்

**நிகழ்ச்சிநிரல்**

விளக்கேற்றல்
அகவணக்கம்
அறிமுகவுரை
தலைமையுரை
வாழ்த்துரை
- வாழ்நாள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் (பேரவை உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழகம்)
- சிரேஷ்ட பேராசிரியர் நா.சண்முகலிங்கன் (முன்னாள் துணைவேந்தர், தலைவர் - சமூகவியல் துறை)

தலைமை விருந்தினர் உரை
கௌரவிப்பு நிகழ்வு
- ஒய்வு பெற்ற அங்கத்தவர்கள்
- 25 வருட கால பல்கலைக்கழக சேவையாற்றிய அங்கத்தவர்கள்
- புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அங்கத்தவர் பிள்ளைகள்

பல்கலைக்கழக மாணவர் நல உதவி
நன்றியுரை

**பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவரின் வாழ்த்துச் செய்தி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது இன்று பல்கலைக்கழக சேவை செய்து ஓய்வு பெற்ற அங்கத்தவர்களதும், 25 வருடகாலமாக சேவையாற்றிய எமது அங்கத்துவ ஊழியர்களினதும் கௌரவிப்பு நிகழ்வையும், தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற எமது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் பாராட்டு விழாவினையும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான நல உதவி நிகழ்வையும் சிறப்பாகச் செய்கின்றது.

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோற்றம் பெற்று மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டது. 1975ஆம் ஆண்டு அன்று பல்கலைக்கழக சேவையில் இருந்த மூத்த அங்கத்துவ உறுப்பினர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதற்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் கல்விச் செயற்பாடுகள் தடங்கலின்றி நடைபெற்றன. அக்காலப் பகுதியில் இருந்த துணைவேந்தர்களினால் பல்கலைக்கழக சுயாபத்தியத்தை நிலைநாட்ட முடிந்தது.

2009ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டுவரையும் அரசியல் தலையீட்டால் யாழ்பபாணப் பல்கலைக்கழக நிர்வாக முகாமைத் துவம் சீர்குலைந்த நிலையில் பல்கலைக்கழக ஊழியரின் முறையற்ற நியமனங்கள், நிதி, நிர்வாக துஷ்பிரயோகங்கள் போன்வற்றால் சீர் குலைந்த நிர்வாகத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. 2015 ஏப்ரலில் உருவான பேரவை எமக்கு நம்பிக்கையூட்டுவதாயுள்ளது.

தற்போது நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மூவின மக்களும் இணைந்து கல்வி கற்கும் புதிய சூழ்நிலையில் எமது பல்கலைக்கழகத்தின் தனித்துவமான சுயா பத்தியத்தைப் பேணியவாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினை மீளவும் சிறப்பாக கட்டியெழுப்ப இவ்வருடம் அமைக்கப்பட்டிருக்கும் புதிய பேரவை வழிவகுக்கும் என நம்புகின்றோம்.

மிகவும் உணர்வுபூர்வமான இவ்வேளையில் ஓய்வுபெற்ற எம் ஊழியர்களின் ஓய்வுக்காலம் அமைதியாகவும் சிறப்பானதாகவும் அமைய பிரார்த்திக்கின்றேன். வெள்ளிவிழா சேவையாளர்களும் மேலும்பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றேன். புலமைப்பரிசில் பெற்ற மாணவச் செல்வங்களும் நிதி உதவி பெறும் பல்கலைக்கழக மாணவர்களும் இன்னும் பல சிகரங்களைத்தொட்டு தாயகத்தில் தலை நிமிர்ந்து வாழ வாழ்த்துகின்றேன்.

## கௌரவம் பெறும் ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள்

**09.6.2013 முதல் 03.11.2015 வரை**

| | | |
|---|---|---|
| | | திருமதி. ச.ஜெயபாலசுந்தரம் [நூலகம்] |
| திரு.சி.வரப்பிரகாசம் அன்ரனி [நிர்வாகம்] | திரு.கி.சந்திரசேகரம் [நிர்வாகம்] | திரு.செ.குகநாதன் [நிர்வாகம்] |
| திருமதி. இ.செல்வரட்ணம் [சித்தமருத்துவம்] | திரு.சி.விக்னேஸ்வரன் [நிர்வாகம்] | திரு.சி.குகதாசன் [மருத்துவபீடம்] |
| திரு.செ.சிவகுமாரன் [பாதுகாப்பு] | திரு.வே.தர்மகுலசிங்கம் [பாதுகாப்பு] | திருமதி.ர.கலாராஜி [நிர்வாகம்] |
| திரு.அ.ஆறுமுகம் [சுகாதாரப் பகுதி] | திரு.க.தர்மராஜா [பாதுகாப்பு] | திரு.ந.விஜயரட்ணம் [விஞ்ஞானபீடம்] |
| திரு.செ.வசந்தரூபன் [நிர்வாகம்] | திரு.செ.கனகசபை [விஞ்ஞானபீடம்] | திரு.நா.ஜெயச்சந்திரன் [விஞ்ஞானபீடம்] |
| திரு.ச.டொன் பொஸ்கோ [பாதுகாப்பு] | திருமதி.ம.சபாநாதன் [மருத்துவபீடம்] | திரு.அ.செல்வரட்ணம் [நுண்கலை] |
| திரு.செ.குமாரசாமி [கலைப்பீடம்] | திரு.க.நாகதேவ பாலசுப்பிரமணியம் [பராமரிப்பு] | திருமதி.ப.மகேந்திரன் [நிர்வாகம்] |
| திரு.ம.குணசேகரம் [பாதுகாப்பு] | திரு.க.செல்வரட்ணம் [நிர்வாகம்] | திரு.சு.சந்திரசேகரம் [விஞ்ஞானபீடம்] |
| திரு.நா.இராஜரட்ணம் [பாதுகாப்பு] | திரு.டே.த.எட்வின் அரசரட்ணம் [பாதுகாப்பு] | திரு.நா.மோகனேஸ்வரன் [நூலகம்] |
| திரு.அ.சாமிநாதன் [மருத்துவபீடம்] | திருமதி.வி.வேலுதாசன் [நூலகம்] | திரு.பொ.தேவபாதம் [மருத்துவபீடம்] |
| திரு.நீ.இரவீந்திரதாசன் [நூலகம்] | திரு.ஐ.நாகராஜா [நிர்வாகம்] | திரு.சு.சுப்பிரமணியம் [நிர்வாகம்] |
| திரு.க.மச்சேந்திரகுமார் [பாதுகாப்பு] | திரு.ச.பாலசுப்பிரமணியம் [கலைப்பீடம்] | திரு.க.கீதப்பொன்கலன் [சித்தமருத்துவம்] |
| திரு.மா.பரமலிங்கம் [நூலகம்] | திரு.சு.பாலசுப்பிரமணியம் [மருத்துவபீடம்] | திரு.யோ.சிவஞானச் செல்வன் [மருத்துவபீடம்] |
| திரு.வே.ஜெகசோதிநாதன் [பராமரிப்பு] | திரு.ச.க.தனேந்திரன் [பராமரிப்பு] | திரு.து.மோகன்ராஜ் [பராமரிப்பு] |

## அங்கத்தவர்களது ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகள்

**புலமைப்பரிசில் பரீட்சை - 2013**

1. செல்வி சிறிமேனன் தமிழாயினி
2. செல்வன் ஜெகதீஸ்வரன் ஆர்த்திகன்
3. செல்வி சக்திவேல் சங்கவி
4. செல்வன் நாதன் சுப ஆர்த்திஜன்
5. செல்வன் ஞானவேல் சபீஷன்
6. செல்வி. சபானந்தர் சிவதர்சினி
7. செல்வன் சிறிபண்டாகரன் சினேகன்
8. செல்வி இராசேந்திரன் தீபிகா
9. செல்வன் பகீரதன் கார்த்திகன்

**புலமைப்பரிசில் பரீட்சை - 2014**

1. செல்வன் சக்திவேல் சாருஜன்
2. செல்வன் பத்திநாதன் தர்சிகன்
3. செல்வன் சசிரூபன் சிவலக்ஷன்
4. செல்வன் வள்ளுவதாசன் சுபத்திரன்
5. செல்வி யசோதன் நிலாந்தி
6. செல்வன் அகிலன் சகாப்தன்
7. செல்வன் குகன் ஐங்கரன்
8. செல்வன் சரவணபவாநந்தன் பிரணவன்

**புலமைப்பரிசில் பரீட்சை - 2015**

1. செல்வி பார்த்தசாரதி மதுஷா
2. செல்வி உமாசங்கர் நிதுஷா
3. செல்வி ஹரிஹரகணபதி ஆதித்தியா
4. செல்வி தர்மராசா யனுஜா
5. செல்வன் சிறிபண்டாகரன் புவன்
6. செல்வி வரதராசா டஷ்வீனா
7. செல்வி மால்மருகன் ராதாஞ்சலி
8. செல்வன் கோணேஸ்வரன் ஹம்ஷானந்த்

## விருது பெறும் வெள்ளிவிழா சேவையாளர்கள்

1. திரு. செ.சிவகுமார்
2. திரு.இ.பாஸ்கரன்
3. திரு.செ. லிங்கராசா
4. திரு. நா. லோகராசா
5. திரு.ம. சந்திரகுமார்
6. திரு. அ.மதியழகன்
7. திரு. இ.ஜெகநாதன்
8. திரு.ம. சத்தியசீலன்
9. திரு.அ. லக்ஸ்மன்
10. திரு. அ.செல்வரட்ணம்
11. திரு.க. நவரட்ணம்
12. திரு.ஐ.சுரேஸ்குமார்
13. திரு.ப. மனோகரதாஸ்
14. திரு.பொ.பத்மநாதன்
15. திரு.அ.தணிகாசலம்
16. திரு.மு. விக்கினேஸ்வரன்

# சம்சுங் கலக்சி எஸ்7 (Samsung Galaxy S7) தொடுபேசியில் புதிய முயற்சி



சம்சுங் (Samsung) நிறுவனம் அண்மையில் தனது புதிய தொடுபேசிகளான Samsung Galaxy S6 Plus, Samsung Galaxy S6 Edge Plus ஆகியவற்றை அறிமுகம் செய்திருந்தது.

இந்த நிலையில் விரைவில் Samsung Galaxy S7 எனும் புத்தம் புதிய தொடுபேசியை அறிமுகம் செய்யவுள்ள அந்த நிறுவனம், புதிய முயற்சி ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் ஏற்ற வகையில் வெவ்வேறு Processor இனைக் கொண்டதாக அதனை அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளது.

அதாவது Samsung Exynos 8990 processor, Qualcomm Snapdragon 820 \u®D Samsung Exynos 7422 gþB Processor களை உள்ளடக்கியதாக இந்த தொடுபேசி வடிவமைக்கப்படவுள்ளது.

# மர நடுகை மாதம்


## பாரிய பேரழிவைத் தவிர்த்தல்

*"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்"*
*(தோமஸ் புல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)*

மனித பாதுகாப்பை அச்சுறுத்தும் மற்றொரு விடயம் வறட்சியும், நிலங்கள் பாலைவனமாதலும் ஆகும்;. இதனை நிவர்த்திக்க, மிகுந்த அச்சுறுத்தலுக்குள்ளான வடகிழக்கு ஆசிய நாடுகள் சேர்ந்து நடவடிக்கை எடுத்தல் அவசியம். பாலைவனத்தைச் சோலைவனமாக்குதல் இலகுவான காரியமல்ல. ஆகவே உள்ள சோலைவனங்களை கருகாது பாதுகாப்பதும், புதிய சோலைகளை உருவாக்குதலும், மனுக் குலத்துக்கு மட்டுமன்றி அனைத்து உயிரினங்களுக்கும் உதவும் உயர்ந்த மானிட நேயம் ஆகும். எமது சிறு பிள்ளைப் பராயத்தில் மாரி தொடங்கு முன், பட்டுப் பூச்சி அல்லது 'வெல்வெற' பூச்சி என்கின்ற பூச்சியினங்கள் அங்குமிங்கும் ஊரத் தொடங்கும். கடும் சிவப்பு நிறத்தில் கண்ணுக்கு விருந்தளிக்கும். அதே போன்று மாரி காலத்தில் சில் வண்டு ஓசைகளும் ரீங்காரமிடும். அவற்றைத் தேடிச் சென்று பிடிப்போம். பின்னர் விடுதலை செய்வோம். இதே போன்று இன்னும் பல வண்ண மயமான சிறிய பூச்சிகள்.... அவையெவையும் இப்போது காணக் கிடைப்பதில்லை. மறைந்து விட்டன. அல்லது எமது நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டுவிட்டன. இரசாயனப் பதார்த்தங்களின் பயன்பாடு, செயற்கை உரப் பயன்பாடு போன்றவை இவற்றுக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். இவற்றைத் தடுக்க, ஒன்றிணைந்த செயற்பாடுகள் மற்றும் கூட்டுச் செயற்பாட்டு அணுகுமுறைகள் அவசியம். காணி, நீர் முகாமைத்துவத்துடன் தொடர்பான நிறுவனங்கள் இதிற் கூடிய கரிசனை காட்ட வேண்டியது தட்டிக் கழிக்க முடியாத பொறுப்பாகும். மக்களும் இதிலிருந்து விலகியிருந்து விட முடியாது. அவர்களும் ஒத்துழைப்பு வழங்கி, எதிர் நோக்கும் சவாலுக்கு முகம் கொடுக்கத்தக்கவாறு நடவடிக்கையெடுக்க வேண்டும். சூழல் தொடர்பான பிரச்சினைகளும், மனித இனப் பாதுகாப்பும், பிரிக்கப்பட முடியாத தொடர்புடையவை. இது மிகவும் சிக்கலான விடயமாகும். இதனால் உலகில் இது தொடர்பான நிபுணர்களும், கரிசனையுடையோரும் நிறையவே இது தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். சூழலில், புவி வெப்பமடைதலுடன், மனிதரின் இருப்பும், உயிர்களின் பல்மைத்துவமும் கேள்விக் குறியாகியுள்ளமையை பல்வேறு நிகழ்வுகளின் மூலம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அண்மைய காலங்களில், பல்வேறு பிராந்தியங்களிலும், இயற்கையின் சீற்றத்தினாலான பேரழிவு அதிகரித்துச் செல்வதைக் காணலாம். இவற்றை எதிர்கொள்ள உலகளாவிய ரீதியிலான மாநாடுகள் கூடிக் கலைகின்றன. இந்த நிலையில் எமது சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் தம்மாலான பங்களிப்பாக மரங்களை நாட்டி பசுமைக்கு உதவுவது, தமது எதிர்காலச் சந்ததிக்குச் செய்யும் பேருதவியாகும். இவை ஓரளவு மணற் புயல்களைத் தடுத்தும், அமில மழை பொழிவதைக் குறைத்தும் இயற்கையழிவிலிருந்து எம்மைப் பாதுகாக்க உதவும். இத்தகைய அழிவுகள் எமது வீட்டுக் கதவுகளைத் தட்டமுன் தடுப்பு நடவடிக்கையான மரங்களை நாட்டுதல் தவிர்க்க முடியாத கடமையாகும்.

-செ.செல்வராஜா, அரியாலை-

# பரீட்சிப்புக்குத் தயாராகும் கூகுள் பலூன் இணையத் திட்டம்



கூகுள் நிறுவனம் பலூன் மூலம் உலகின் பல பகுதிகளிலும்இணைய சேவையை வழங்கும் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளமை நாமனைவரும் அறிந்ததே.

இந்த நிலையில் Google Project Loon எனும் இந்தத் திட்டம் அடுத்த வருடம் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதன்படி இந்தோனேசியாவில் உள்ள Indosat, Telkomsel, XL Axiata எனும் மூன்று இணைய சேவை வழங்குநர்கள் ஊடாக இந்தத் திட்டம் பரீட்சிக்கப்படவுள்ளது.

தற்போது இந்தோனேசியாவில் மூன்றில் ஒரு பங்கினர் இணைய இணைப்பைப் பயன்படுத்திவருவதாகவும், இந்தத் திட்டத்தின் ஊடாக குறித்த விகிதத்தை அதிகரிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனை வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் அதனைத்தொடர்ந்து ஏனைய நாடுகளிலும் குறுகிய காலத்தில் இந்தச் சேவை அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கருவி நிறுவனத்தால் மாணவர்களின் கல்விக்கான நிதியுதவி வழங்கி வைப்பு



யாழ்ப்பாணம்,நவ.3

யாழ். நல்லூரடி முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்தில், அதன் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஆஸ்திரேலிய தமிழ் பொறியியலாளர் அமைப்பின் அனுசரணையுடன், கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத் தலைவர் தர்மசேகரம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டு மேற்படி கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலைய செயலாளர் ஜசிந்தன், கனடாவிலிருந்து வருகை தந்த சமூக ஆர்வலர் கணேசலிங்கம் (வானொலி நிலைய இயக்குநர் கனடா) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதி ஆஸ்திரேலியாவிலிருந்து மாதாந்தம் பத்துப் பிள்ளைகளுக்கான நிதியை வழங்கி வருகின்றனர். இந்தச் சங்கம் இத்தகையதொரு உதவியை வழங்கி வருகின்றமை வரவேற்கக் கூடியது. வெளிநாடுகளில் லட்சக்கணக்கான எங்களுடைய மக்கள் வாழ்கின்றனர். ஆனால் ஒரு சிலர்தான் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் இங்கு வாழும் மக்களுக்கு உதவி வருகின்றனர். முக்கியமாக கல்விக்கான ஊக்குவிப்பு உதவியென்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். மேலும் வெளிநாடுகளில் இருக்கும் எமது உறவு கள் இப்படியான தேவைகள் உள்ள பிள்ளைகளை இனங்கண்டு அவர்களின் கல்விக்கு உதவ முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ)

# குறிகாட்டுவான் வாகனத்தரிப்பிடத்தில் அதிகரித்த வாகனக் கட்டணம் அறவீடு

யாழ்ப்பாணம்,நவ.3

குறிகாட்டுவான் வாகனத்தரிப்பிடத்தில் தனியார் ஒருவரால் அதிகளவான வாகன வரிப்பணம் அறவிடப்பட்டு வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது: கடந்த காலங்களில் வேலணைப் பிரதேச சபையால் வாகனத் தரிப்பிடத்துக்கான வரி அறவீடுகள் சாதாரணமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. பின்னர் பிரதேசசபையால் வழங்கப்பட்ட குத்தகையூடாக உரிமத்தைப் பெற்றுக் கொண்ட குறித்த நபரால், தற்போது வாகனங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட வரி அறவீட்டை விடவும் கூடுதலான பணம் அறவிடப்படுகின்றது. அண்மையில் நடைபெற்று முடிந்த நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்தில் அறவீட்டுக் கட்டணம் திடீரென உயர்த்தப்பட்டு, அனைத்து வாகனங்களுக்கும் தலா நூறு ரூபா விகிதம் அறவிடப்பட்டது. தற்போதும் இந்த நிலைமையே நீடிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக வேலணைப் பிரதேச சபையின் செயலாளரைத் தொடர்பு கொண்டபோது: இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும். வாகனத்தரிப்பிடம் அமைந்துள்ள பகுதி குறித்த நபரின் சொந்தக்காணி என்பதால் அந்த இடம் ஒரு வருடகாலக் குத்தகைக்காக வழங்கியிருந்தோம். இந்தக் குத்தகை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. எனினும் இந்த விடயம் தொடர்பாகஅவரைஅழைத்து அறிவுறுத்தவுள்ளோம். அவர் அதனை ஏற்றுக்கொள்ளாத விடத்து குத்தகை உரிமத்தை பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலசல கூடம் மற்றும் குடி தண்ணீர்ப்பிரச்சினைகள்தொடர்பான சீரான நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்படும். எதிர்காலத்தில் இது போன்ற குறைகள் ஏற் படாத வகையில் குறி கட்டுவான்பிரதேசத்தின்பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ-ரி5)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சின்னத்தம்பி சண்முகநாதன்
(ஓய்வுபெற்ற அதிபர், (அகில இலங்கை சமாதான நீதிவான் J.P)
(திதி: அபரபட்ச அட்டமி)



எம் குடும்பத்தின் குல விளக்கே!
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்து எம்மையும் வழி நடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டது மூன்றானாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது
மூன்றாண்டு காலமதில் உமைப்பிரிந்து ஒரு பொழுதும்
உம்மை மறவாமல் நாம் இருந்தோம்
ஒவ்வொரு கணமும் நினைத்து அழுகின்றோம்
அப்பா என்று அழைக்க நீங்கள் இல்லையே
அடிமனதில் வலி துடிக்க உயிரோடு வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

பிறப்பு 25.05.1936
இறப்பு 06.11.2012

43/4 கலாசாலைவீதி,
திருநெல்வேலி,வடக்கு,திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# எயிட்ஸுக்கு நிகராக காச நோயாலும் சாவு

## உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு

வொஷிங்டன், நவ.3
சாவை ஏற்படுத்தும் தொற்று நோயான எயிட்ஸ்க்கு நிகராக காச நோயும் பயங்கரத் தொற்று நோய்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளது என உலக சுகாதார நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.
2014 ஆம் ஆண்டு காச நோயால் 1.1 மில்லியன் இறப்புகளும் , எயிட்ஸால் 1.2 மில்லியன் இறப்புகளும் ஏற்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
1990 - 2015 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளை ஒப்பிடும்போது 1990 ஆம் ஆண்டிலிருந்து இறப்பு வீதம் பாதியாக வீழ்ச்சி அடைந்துள்ளது. 2000 ஆம் ஆண்டிலிருந்து நோய்த் தொற்று 1.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. எயிட்ஸ்க்கான உயிரிழப்பும் பெருமளவு வீழ்ச்சியடந்துள்ளது. எயிட்ஸுக்கான எதிர் மருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த உலக சுகாதார நிறுவனத்தின் காசநோய்ப் பிரிவுத் தலைவர், மரியோ ரவிக்லியன் - உலகில் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும், தொற்று நோய்களாக எயிட்ஸும், காசநோயும் இனம்காணப்பட்டுள்ளன - என்றார்.
இந்தியா, சீனா, இந்தோனேசியா, நிகேரியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் காசநோயின் பரவல் அதிகமாகக் காணப்படுகின்றது.
அடுத்த ஆண்டிலிருந்து காசநோய் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். 2030 ஆம் ஆண்டில் அதன் தொற்று 90 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. (ற- ரி4)



ஈராக் தலைநகர் பாக்தாத்...
போக்குவரத்துகள் பாதிக்க...




## பயணிகள் விமானம் தயாரித்தது சீனா

பீஜிங், நவ.3
சீனா தனது முதலாவது சொந்த உற்பத்தியாக மிகப் பெரிய பயணிகள் விமானத்தை வடிவமைத்துள்ளது.
இறுதி வடிவம் பெற்றுள்ள புதிதாக வடிவமைக்கப்பட்ட சி 919 என்ற விமானமானது சங்காயில் காட்சிப்படுத்தப்பட்டது.
இந்த விமானத்தில் 158 ஆசனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 4 ஆயிரத்து 75 கிலோமீற்றர்கள் வரை உச்ச வரம்பெல்லை கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விமானத்தைச் சீனாவின் வர்த்தக விமானக் கூட்டு நிறுவனம் தயாரித்துள்ளது.
இந்த விமானத்தின் வெள்ளோட்டம் அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், இவ்விமானம் வர்த்தகப் பயன்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் மூன்று ஆண்டுகள் வரை சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்த விமானத்தின் வெள்ளோட்டத்தின்போது பயணிப்பதற்கான 517 டிக்கட்டுக்களில் 21 டிக்கட்டுக்களை உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் போட்டியின் மூலம் பெற்றுக் கொண்டுள்ளனர். (ற)

## 97 வயதில் உயர் கல்வியை முற்றுச் செய்த மூதாட்டி

நியூயோர்க், நவ.3
79 ஆண்டுகளுக்கு முன்னர் உயர் கல்வியைக் கைவிட்ட பெண்மணி ஒருவர் தனது 97 ஆவது வயதில் அதே உயர் கல்வியை முடித்து அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளார்.
மார்க்ரெட் தோமஸ் பெக்கெமா என்ற அந்தப் பெண்மணி 1936 ஆம் ஆண்டு அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தில்உள்ளகிராண்ட் ராபிட்ஸ் நகரில் கத்தோலிக் சென்ரல் உயர்நிலைப் பாடசாலையில் கல்வி கற்றுள்ளார். எனினும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தனது தாயைக் கவனித்துக்கொள்வதற்காக உயர் கல்வியை இடை நடுவே கைவிட்டுள்ளார்.



இந்தநிலையில் அவரது நண்பர்களும் உறவினர்களும் கடந்த கோடைகாலத்தில் மாக்ரெட் படித்த உயர் பாடசாலையைத் தொடர்பு கொண்டு, பாட்டியின் கதையைக் கூறியுள்ளார். அந்தச் செய்தி அனைத்து ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.
அதையடுத்து உயர் கல்வியை முடிக்க முடியாது வருத்தப்படும் பாட்டிக்காக கௌரவ டாக்டர் பட்டம் வழங்க உயர்நிலைப் பாடசாலை முடிவெடுத்துள்ளது.
கடந்த 29 ஆம் திகதி அவரது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் கோலாகலமாக நடந்த விழாவில் பாட்டி அந்தப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.
நான் ஒன்றுமே தெரியாதவள். என்னுடைய சந்தோசத்தை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை என விழாவின்போது நெகிழ்ந்து பேசினார் மார்க்ரெட். (ற)

## ஆண்களைக் காப்பற்றுவத... சீனாவில் வருகின்றது சட்ட...

ஆண்களைப்பாலியல் துஷ்பிரயோகத்... உட்படுத்துவது தண்டனைக்குரிய குற்... கக் கருதப்படும் என்று சீன அரசு... வித்துள்ளது. அத்துடன் அதற்காக ... சட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.
சீன அரச நாளிதழ் ஒன்று இந்தத் தக... களை வெளியிட்டுள்ளது.
தற்போது கொண்டுவரப்பட்டுள்ள ச... ஆண் அல்லது பெண் பாலியல் குற்... களில் ஈடுபட்டால் அவர்களுக்கு 5 ஆ... கள் சிறைத் தண்டனை வழங்க வகை ... துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது...
இதுவரை சீனாவில் பின்பற்றப்பட்டு ... சட்டத்தின்படி ஆண்களுக்கு எதிரான ... யல் வன்கொடுமைக்கு வழக்குத் தெ... முடியாது. அவ்வாறு செய்வதானால் ... சட்டப் பிரிவுகளின் கீழ்தான் வழக்குப் ... செய்யமுடியும். இதனால் ஆண்களுக்கு... ரான பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட... களுக்கு மிகக் குறைந்த அளவில... தண்டனையே கிடைக்கும்.
தற்போது புதிதாகக் கொ... வரப்... சட்டத்தின்படி ஆண்களுக்கு எதிர... பாலியல் குற்றங்களுக்கு எதிராகவும் வ... குத் தாக்கல் செய்யமுடியும் என்று தெரி... கப்படுகின்றது.

## கட்டடம் இடிந்ததில் 17 பேர் உயிரிழப்பு

பீஜிங், நவ.3
சீனாவில் ஹெனான் மாகாணத்தில் வெய்வுடு என்ற இடத்தில் 2 மாடிக் கட்டடம் ஒன்றின் அத்திபாரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை புனரமைப்பு பணிகள் நடைபெற்றபோது எதிர்பாராத விதமாக அந்தக் கட்டடம் சரிந்து விழுந்தது. அதன் இடிபாடுகளில் சிக்கி 17 கட்டுமானத் தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். 23 பேர் படுகாயம் அடைந்தனர் என்றும் 9 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து வந்து, இரவிரவாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுவிட்டன. படுகாயம் அடைந்தவர்களும் மீட்கப்பட்டு, லுயோஹீ நகர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
இடிபாடுகளுக்கு இடையே எவரேனும் உயிருடன் சிக்கித் தவிக்கின்றனரா எனத் தேடும்பணி தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த விபத்துக் குறித்து விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் 1990 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி4)





...ாக்தாத்தில் பெய்துவரும் கடும் மழையால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகள் எங்கும் வெள்ளம் தேங்கியுள்ளதால் ...ா பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தில் மூழ்கியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்துள்ளனர். (ற)

# தொலைந்த கப்பலின் சிதைவு கண்டுபிடிப்பு

லண்டன், நவ.3

ஒரு மாதத்துக்கு முன்பதாக காணாமற்போன சரக்குக் கப்பலின் சிதைவுகள் பஹாமாவுக்கு அருகில் இருக்கக்கூடும் என்று தேடுதலில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

33 பேருடன் எல் பாரோ என்ற சரக்கு கப்பல் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் புளோரிடாவில் இருந்து புயிட்ரோரிக்கோ நோக்கி பயணிக்கையில் காணாமற்போயிருந்தது.

அமெரிக்க கடற்படையினர் ஒலி ஊடுருவிக் கருவிகளூடாகத் தேடுதலை மேற்கொண்டுள்ளதோடு 15 ஆயிரம் அடி ஆழத்தில் கப்பல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

கப்பலில் இருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சமிக்ஞை வெளியாகியுள்ளது என்றும், கப்பல் சக்தி இழந்துள்ளதோடு முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பல் காணாமற்போய் ஒரு நாள் கடந்திருந்தபோது அதில் பயணித்த ஒருவரின் சடலத்தை அமெரிக்க கடற்படையினர் மீட்டிருந்தனர்.

ஆயினும் குறித்த சரக்குக் கப்பலில் பயணித்த ஏனையோரது சடலங்கள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படாத நிலையில் கப்பலின் சிதைவுகள் விரைவில் கண்டுபிடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னரே குறித்த கப்பல் எவ்வாறு விபத்துக்குள்ளானது என்ற மர்மத்தை அவிழ்ப்பதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ...றுவதற்கு ...ு சட்டம்

...ரயோகத்துக்கு ...தரிய குற்றமா ...ா அரசு அறி ...தற்காக புதிய ...ாது.
...இந்தத் தகவல்
...டுள்ள சட்டம் ...ியல் குற்றங் ...க்கு 5 ஆண்டு ...க வகை செய் ...ட்டுள்ளது.
...றப்பட்டு வந்த ... எதிரான பாலி ...க்குத் தொடர ...தானால் வேறு ...வழக்குப் பதிவு ...ண்களுக்கு எதி ...ல் ஈடுபட்டவர் ... அளவிலான
...டு வரப்... ...க்கு எதிரான ...ரோகவும் வழக் ...ன்று தெரிவிக் (ற)

...ப்பு

# ரஷ்ய விமானத்தை ஐ.எஸ். வீழ்த்தும் சாத்தியமில்லை

## துறைசார் நிபுணர்கள் தெரிவிப்பு; நீடிக்கின்றது விபத்தின் மர்மம்

கெய்ரோ, நவ.3

ரஷ்ய விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களில் சிலரது உடல்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என்று உயிரிழந்தவர்களின் உடல்கள் வைக்கப்பட்டுள்ள கெய்ரோ நகர நஸ்ஸர் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

விபத்து நடந்த பகுதியில் இருந்து இதுவரை 163 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் அவற்றில் சுமார் 10 சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள நஸ்ஸர் வைத்தியசாலை அதிகாரி ஒருவர்-

மீட்கப்பட்ட 10 உடல்களை அடையாளம் காண்பது பெரும் சிரமமாக இருக்கின்றது. அவை தற்போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. எமது பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. - என்றார்.

அதேவேளை, குறித்த விமானம் தம்மாலேயே சுட்டு விழுத்தப்பட்டது என்று ஐ.எஸ். அமைப்பு தெரிவித்திருந்தது. சிரியாவில் ரஷ்யா நடத்தி வரும் வான் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அந்த அமைப்புத் தெரிவித்தது. ஆயினும் துறைசார்ந்த நிபுணர்கள் இது சாத்தியமில்லை என்று தெரிவித்துள்ளனர்.

31ஆயிரம் அடி உயரத்தில் பறப்பை மேற்கொண்டிருந்த விமானத்தைச் சுட்டுவீழ்த்தக் கூடிய அளவுக்கு ஐ.எஸ். அமைப்பினரிடம் ஆயுதவளம் இல்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கண்டெடுக்கப்பட்ட விமானத்தின் பாகங்களில் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான எந்தத் தடயமும் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த மர்மங்களின் முடிச்சுக்கள் எதிர்வரும் வாரங்களில் அவிழும் என்று அறிய முடிகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைக் குழு ஒன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அந்தக் குழுவினருடன் ரஷ்ய சிறப்பு விசாரணை அதிகாரிகளும் இணைந்து பணிகளை மேற்கொண்டுள்ளனர். தற்போது கிடைத்திருக்கும் தரவுகளின் அடிப்படையில் தொடர்பாடல் கருவிகளில் ஏற்பட்ட பழுதும், அதனால் தொடர்பாடலில் ஏற்பட்ட காலதாமதமுமே விபத்துக்கான முதற் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. ஆயினும் விமா



னம் ஏன் வெடிக்க வேண்டி நேர்ந்தது என்பது தொடர்பில் இதுவரை எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களில் அனேகர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர்கள். அதனால் ரஷ்யா சோகத்தில் மூழ்கியுள்ளது. நேற்று இதற்கான துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டதுடன், ரஷ்ய தேசிக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. அனைத்துக் கேளிக்கை நிகழ்வுகளும் ரத்துச் செய்யப்பட்டன. (ற-ரி4)

# ஆரோக்கியமான மக்களை கொண்ட நாடு சிங்கப்பூர்

## ஆய்வில் முதலிடம் பிடித்தது

கோலாலம்பூர், நவ.3

ஆரோக்கியமான மக்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் சர்வதேச அளவில் முதலிடம் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி மற்றும் உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து சர்வதேச அளவில் ஆரோக்கியமான மக்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலை உருவாக்கியுள்ளது.

பிறப்பு, இறப்பு விகிதங்கள், சா[illegible]கான காரணங்கள், இளைய தலைமுறையினர் இடையே பரவி வரும் புகைப் பழக்கம், அதீ[illegible] கொழுப்பு உள்ளிட்ட பிரச்சினை[illegible]களால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகள் மற்றும் நோய்த் தடுப்புத் திட்டங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச அளவில் 10 லட்சம் மக்[illegible]ளிடையே நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 89.45 சதவீதத்துடன் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இ[illegible]தாலி, ஆஸ்திரேலியா ஆ[illegible] நாடுகள் அடுத்தடுத்த இடங்கள[illegible] உள்ளன.

# வடக்கு, தெற்கு ஆசிரியர்களை ஒருங்கிணைக்கும் அன்பின் கல்விக்கூடம்

இ.வித்தி ஆனந்தன்
*சித்திர ஆசிரியர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்*

கல்வி அமைச்சின் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சமாதானக் கல்விப்பிரிவின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட 'அன்பின் கல்விக்கூடம்' எனும் திட்டம் வடக்கு, தெற்கு ஆசிரிய வளங்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும்.

தேசிய கல்விக் கொள்கை மற்றும் இலங்கையின் பொதுக்கல்வி தேசியக் கொள்கையில் அடையாளம் காணப்பட்ட பொதுக்குறிக்கோளில் காணப்படும் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்டு, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சமாதானக் கல்விப் பிரிவு நான்கு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்துள்ளது.

1. வினைத்திறனான தேசிய ஒன்றிணைவு மற்றும் தேசிய அடையாளம் என்பவற்றுடன் தேசிய சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்

2. பரந்த அளவில் சிதைந்து காணப்படும் சமூகங்களுக்காக பொதுவான ஒரு முறையை உருவாக்குதல்.

3.தேசிய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குக் காரணமாக இருக்கும் தனிமனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்காக அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் பல சந்தர்ப்பங்களை உருவாக்குதல்(தேசியக் கல்வி ஆணைக்குழு அறிக்கை 1992)

4. ஒவ்வொருவரைப் பற்றியும் ஆழமானதும், தொடர்ச்சியானதுமான அக்கறை காட்டும் வகையில் வினைத்திறனான பங்களிப்புச் செய்தல்.

குறித்த நிகழ்ச்சித் திட்டம் கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகி 27ஆம் திகதி வரை தென்மாகாண காலி மாவட்டத்தில் வக்வெல்ல பிரதேசத்தில் உள்ள முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இருந்து 28 ஆசிரியர்களும், தென்மாகாண கல்வி வலய ஆசிரியர்களும் 'சகோதரத்துவமும் சகவாழ்வும்' எனும் கருப்பொருளுடன் பங்கு பற்றினோம்.

குறித்த நிகழ்ச்சித் திட்டம், வழிகாட்டல் ஆலோசனையும் இணைச்செயற்பாடும் சமூக ஒருமைப்பாடும் சமாதானத்துக்குமான கல்விப் பிரிவுப் பணிப்பாளர் வை.ஏ.என்.டியாப்பா மற்றும் பத்மசாந்த என்பவர்களின் வழிகாட்டலில் நடைபெற்றது.

நிகழ்ச்சித் திட்டத்தில் தனித்துவ ஆசிரிய உறவு மேம்பாட்டு நோக்கத்துக்காக 26ஆம் திகதி அன்று செயலமர்வில் பங்குபற்றிய ஒவ்வொரு ஆசிரியரும், காலி கல்வி வலயத்தில் உள்ள வேறு வேறு பாடசாலைகளுக்குப் பயணம் செய்து குறித்த பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களை தமது நண்பர்களாக்கி அவர்களுடன், அன்புப் பாலத்தை மேம்படுத்தியமை அன்பின் கல்விக்கூட நிகழ்ச்சித் திட்டத்தில் முக்கிய நிகழ்வு ஆகும்.

நல்ல குணாம்சம் நிரம்பிய எதிர் காலக் குடிமக்களை உருவாக்குவதில் பின்வரும் முரண்பாடுகள் ஆரம்ப காலத்தில் இருந்துள்ளமையை இதன்மூலம் அவதானிக்க முடிந்தது. அவையாவன.

1. கலாசார முரண்பாடு

2.செயற்பாடுகளுக்கிடையிலான தொடர்பாடலில் உள்ள குறைபாடு

3. பிறரது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் குறைவான அக்கறை

4. ஆர்ப்பாட்ட அணுகுமுறையைத் தூண்டிவிடல்

5. வளப் பங்கீட்டில் மந்த நிலை

6.பிறரது கருத்து தொடர்பில் நம்பிக்கையின்மை

7. ஒற்றுமையான சகவாழ்வில் காணப்படும் பின்னடைவு

8. சமநிலையில்லாத நிலை

9. சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத் துறைகளில் போதிய அறிவின்மை

10 சமாதானம் தொடர்பில் கட்டியெழுப்ப வேண்டிய விடயங்களில் பலவீனம்

மேற்குறித்த விடயங்கள் காரணமாக அன்பின் கல்விக்கூட செயற்றிட்டங்கள் போன்ற செயற்றிட்டங்களின் தேவைப்பாடு அவசியமாகின்றது. எனவே, இத்தகைய சிக்கல் நிலைமைகளை இல்லாதொழிப்பதற்கும், சிறந்த குணாம்சங்களுடன் கூடிய விரிவானதும், தொடர்ச்சியானதுமான சமூக ஒருங்கிணைப்பு மற்றும் ஆழமான நட்புடன் மேற்கொள்ள,

1. சமாதானக் கொள்கையைச் சேர்த்தல்

2.அதிபர், ஆசிரியரின் திறமைகளை அபிவிருத்தி செய்தல்

3.சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பாடத்துக்குச் சமமான செயற்பாட்டு விருத்தி போன்றவை சமாதானக் கல்விப் பிரிவால் முன்னெடுக்கப்படுகின்றன.

மேற்படி காலி, யாழ்ப்பாண வலய ஆசிரியர்கள் ஊடாக ஆசிரியர்-ஆசிரியர் ஒற்றுமை, மாணவர்-மாணவர் ஒற்றுமை, சமூகஒற்றுமைஎன்பனபெறப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக இணைய முகப் புத்தகம் மற்றும் ஈமெயில் வசதித் தொடர்பு என்பவை நடைமுறையில் காணப் படுகின்றன.

# பிகாஸ் கம்பசின் பீடாதிபதியாக சானிகா ஹிரும்புரேகம நியமிப்பு

இலங்கையின் முன்னணி உயர் கல்வி நிறுவனமான BCAS Campus, தனது உயர் கல்வி விவகாரங்களுக்கான தலைமைப் பீடாதிபதியாக பேராசிரியர் சானிகா ஹிரும்புரேகமவை நியமனம் செய்துள்ளது என்பதனை அறிவிப்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது. ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து இந்த நியமனம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பிகாஸ் இன் உயர் கல்வி விவகாரங்களுக்குப் பொறுப்பான தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சானிகா, இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவராகவும், கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தராகவும் பணியாற்றியவராவார்.

1999 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் தலைசிறந்த முன்னணி உயர் கல்வி நிறுவனமாகத் திகழ்ந்துவரும் பிகாஸ் கம்பஸ், உடனடி தொழில் வாய்ப்புகளை உத்தரவாதப்படுத்தும் உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி வாயப்புகளை பல்வேறு துறைகளிலும் வழங்கி வருகிறது.அந்த வகையில் Civil Engineering, Quantity Surveying, Telecom, Engineering , Law, Business Mgt, Computing மற் றும் BioMedical Sciences ஆகிய துறைகளில் Degree Foundation பாடநெறிமுதல் HND, Top-Up Degree மற்றும் Master Degrees ஆகிய மட் டங்களிலான சர்வதேச தரம் வாய்ந்த தகைமைகளை இலங்கையிலேயே பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளை BCAS Campus வழங்குகின்றது.

இந்தப் பாட நெறிகளை சர்வதேச புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களான University of Wolverhampton (UK), London South Bank University (UK) என்பவற்றுடனும் Edexcel UK நிறுவனத்துடனும் BCAS கொண்டிருக்கும் கல்விசார் இணைப்புக்கள் ஊடாக வழங்குகின்றது.

இலங்கையில் கொழும்பு, கல்கிஸை, கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய நகரங்களில் வளாகங்களையும், கிளை வளாகங்களையும் கொண்டியங்கும் BCAS Campus, கடல் கடந்த மாணவர்களுக்கான கற்றல் உதவி நிலையம் (( Learning Support Centre) ஒன்றை Qatar நாட்டிலும் கொண்டிருக்கிறது.மொத்தமாக 3500 க்கும் அதிகமான மாணவர்கள் BCAS Campus இல் உயர் கல்வியைத் தொடர்கின்ற அதே வேளை, தகுதியும் அனுபவமும் கொண்ட 250க்கும் அதிகமான விரிவுரையாளர் குழாமையும் கொண்டிருக்கிறது.பேராசிரியர் சானிகாவை தனது கல்வி சார் விவகாரங்களுக்கான தலைமைப் பீடாதிபதியாக கொண்டிருப்பது BCAS Campus க்கு மேலும் பெருமை சேர்க்கும் விடயமாக அமைந்துள்ளது.

உயர் கல்வித்துறையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக 30 ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டிருக்கும் பேராசிரியர் சானிகாவின் தலைமையின் கீழ் BCAS Campus வழங்கும் கல்விச் சேவை சர்வதேச தரமிக்கதாக மேலும் உறுதி செய்யப்படும் என்பது நிச்சயமாகும்.

தாவரவியற் துறையில் கொழும்பு பல்கலைக் கழகத்தில் தனது முதலாவது பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பேராசிரியர் சானிகா, தனது முதுமாணிப்பட்டத்தை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

தனது கலாநிதிப்பட்டத்தை பெல்ஜியம் நாட்டில் பெற்றுக் கொண்டு இலங்கை திரும்பிய பேராசிரியர் சானிகா, சிரேஷ்ட விரிவுரையாளராக கொழும்பு பல்கலைக் கழகத்தில் இணைந்தார்.பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் தாவரவியல் திணைக் களத்தின் தலைவராகப் பணியாற்றிய அவர் 2008 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக நியமிக்கப்பட்டார்.

தொடர்ச்சியாக 5 வருடங்கள் அந்தப் பதவியை வகித்ததன் பின்னர், பேராசிரியர் சானிகா, இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக 2013 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

இலங்கை வரலாற்றில் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் தலைமைப் பதவியை வகித்த முதலாவது பெண்மணியான பேராசிரியர் சானிகா, கடந்த பெப்ரவரி மாதம் வரை அப்பதவியில் பணியாற்றினார்.இதனைத் தொடர்ந்து இம்மாதம் முதல் BCAS Campus இன் தலைமைப் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 16 வருடங்களாக இலங்கையின் தனியார் உயர் கல்வித் துறையில் பாரிய பங்களிப்புக்களை மேற் கொண்டு வரும் BCAS Campus சில் புதிதாக நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் சானிகாவின் தலைமையின் கீழ் BCAS Campus சர்வதேச தரம் வாய்ந்த தனியார் பல்கலைக் கழகமாக எதிர்வரும் நாள் களில் தன்னை நிலை நிறுத்திக்கொள் ளும் என்பது நிச்சயமாகும். (கு)

**இலங்கை வரலாற்றில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைமைப்பதவியை வகித்த முதலாவது பெண்மணியான பேராசிரியர் சானிகா கடந்த பெப்ரவரி மாதம்வரை அந்தப் பதவியில் பணியாற்றினார்.**



# தமிழ்ச் சமூகத்தை அழிக்கும் செயல்

எமது பகுதியில் ஒரு காலத்தில் புகழ்பூத்து விளங்கிய பாடசாலை ஒன்று, நிலை தளர்ந்து, நலிவுற்றுச் செல்கிறது. இது வரை (மிக அண்மைக்காலங்களில்) மூன்று ஏழைச் சிறுவர்கள் அதன் அதிபரால் பாடசாலையிலிருந்து இடைவிலக்கப்பட்டுள்ளனர். இதில் மிகப் பரிதாபம் என்னவென்றால், ஒரு சிறுவன் பெற்றோர் இருவரையும் இழந்தவன். தன் வயோதிப அம்மம்மாவுடன் வசிப்பவன். 16 வயது நிரம்பாமல் எவரும் வேலைக்கு அமர்த்த மறுக்கும் நிலை; அவனது அம்மம்மா வேறு வீடுகளில் வேலை, கூலி வேலைக்கு செல்பவர். மழை காலமாகையால் வேலை வாய்ப்புக்கள் மிக அரிது. இந்தப் பெண் மிக வயதானவர் என்பதால் வேலை வாய்ப்பு இயல்பாகவே குறைவு. இந்தச் சிறுவனின் இரு பெண் சகோதரிகளும் இந்த மூதாட்டியின் பராமரிப்பிலுள்ளவர்கள்.

இந்தச் சிறுவன் பாடசாலை சென்றால் அவனுக்கு மதிய உணவாவது தினமும் கிடைக்க வாய்ப்பாக இருந்திருக்கும். இன்று அவன் உணவுக்கே வழியின்றித் தவிக்கின்றான்.

(காலஞ் சென்ற) முன்னாள் மத்திய கல்லூரி அதிபர் இராசதுரையின் கட்டுரை ஒன்றில் அவர் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். பாடசாலை ஒன்றின் உயர் வகுப்பு மாணவன் ஒருவன் ஆசிரியர் ஒருவர்மீது கைவைத்துவிட்ட செய்தி பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதிபர் அவனை அழைத்து கல்வியை அவன் தொடர்வதால் அவன் எதிர் காலம் எப்படிப் பிரகாசிக்கும் என்பதை விளக்கினார். அதேபோல் ஆசிரியரை அழைத்து அவர் விரும் பினால் அந்த மாணவரை பாடசாலையால் விலக்கு வதாகவும், அதன் முழுப் பாவத்தையும் அந்த ஆசிரியரே ஏற்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அதேபோல் மாணவனிடம் நீ அடித்தது உன் தகப்பனிலும் மேலான ஒருவருக்கு. இதற்கு என்ன தண்டனை வேண்டுமென்பதை நீயே தீர்மானித்து மூன்றாம் நாள் சொன்னால் போதும் என்றார். அன்று மாலை (அப்போதெல்லாம் இருநேரப் பாடசாலை) பிரார்த்தனையின்போது சகல ஆசிரியர்கள் மாணவர்களின் முன்னிலையில் அந்த மாணவன் ஓடி வந்து குறித்த ஆசிரியரின் காலில் வீழ்ந்து காலைப் பிடித்து கதறி அழுது தன்னை மன்னிக்குமாறு கேட்டபோது எல்லோர் கண்ணிலும் கண்ணீர் பெருகியது. அந்த ஆசிரியரின் மிக மதிப்புக்குரிய மாணவனாகவும் உயர் அதிகாரியாகவும் அந்த மாணவன் பிற்காலத்தில் திகழ்ந்தார். ஆசிரியரின் இறுதிக் காலத்தில் சொல்லொணாத் துயரங்களை அந்த ஆசிரியர் சந்தித்தபோதெல்லாம் குறித்த அந்த மாணவன் அந்த ஆசிரியரது சொந்த மகனாகச் செயற்பட்டார் என்பதைப் பிற் காலத்தில் கேள்விப்பட்டேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

பொறுப்பு வாய்ந்தோர், சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் தலையிட்டு ஆரம்பத்தில் குறிப்பிட்ட சிறுவனின் கல்வியைத் தொடரவும் இது போன்ற சம்பவம் இனிமேல் நடவாது (எந்தப் பாடசாலையிலும்) தமிழ் மாணவர்களைப் பாது காக்குமாறும் எமது சமூகத்தைப் பாதுகாக்கவும் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சிறுவன் ஆண்டு 10 வகுப்பில் கல்வி கற்கும் நிலையிலேயே இடை விலக்கப்பட்டான். இந்த வருடம் சாதாரண தரப் பரீட்சை எழுத வேண்டும்.

**சமூக நலன்விரும்பி, உரும்பிராய்.**




# பொதுமக்கள் மனம் வைப்பார்களா?

சுன்னாகம் மயிலணியில் இருந்து காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மதவடிக்குச் செல்லும் வீதியின் முடிவுப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


புனரமைப்பின்போது காங்கேசன்துறை வீதி உயர்த்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் அதில் அமைக்கப்பட்டுள்ள மதகு ஊடாக மேலே குறிப்பிட்ட வீதியில் மழை வெள்ளம் வடிந்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் மதகின் அடிப்பாகத்தில் குப்பைகள், சேறு என்பன தேங்கிக் கிடப்பதால் வெள்ளநீர் ஓடமுடியாது வீதியில் தேங்கி நிற்கின்றது. வெள்ளம் வடிந்தோடுவதற்கு இடையூறாக இருப்பவற்றை அகற்றுவதற்கு எவரும் முன்வராததால் தற்போது பெய்கின்ற மழை காரணமாக வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணமுடிகின்றது.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துவர்கள் சிரமங்களுக்கு ஆளாகிவருகின்றனர். குறிப்பாக நடந்து செல்பவர்கள் அசுத்தமான நீரில் கால்களை நனைக்க வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற பொதுமக்கள் மனம் வைத்தால் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யமுடியும். செய்வார்களா?

**மயூரா, சுன்னாகம்.**

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# அச்சத்தில் உறையவைக்கும் விமான விபத்துக்கள்

எகிப்தில் சனிக்கிழமையன்று ரஷ்ய விமானம் நடுவானில் வெடித்துச் சிதறி அதில் பயணம் செய்த 224 பேரும் உயிரிழந்த விடயம் அடிக்கடி விமானங்களில் பயணிப்பவர்களை மாத்திரமன்றி, எதிர்காலத்தில் விமானத்தில் பறக்க விரும்பியிருப்பவர்களையுமே ஒரு முறையன்றி பல முறை யோசிக்கவைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

விமானம் உருவாக்கப்பட்டு அது சேவையில் விடப்பட்ட நாளிலிருந்து இன்றுவரையும் எத்தனையோ ஆயிரம் விமான விபத்துகள் இந்த உலகில் நடந்திருக்கின்றன. கடந்த ஆண்டு மார்ச் 8ஆம்திகதி மலேசிய எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.எச். 370 விமானம் காணாமல் போனதைத் தொடர்ந்து பின்னான காலப்பகுதியில் விமான விபத்துகள் என்பது அடிக்கடி கேள்விப்படும் ஒன்றாக மாறியிருப்பது அச்சத்தை அதிகரிப்பதற்கு வழிகோலியுள்ளது.

வீதி விபத்துகளைவிட விமான விபத்துகள் மிகவும் கொடூரமானவை. காரணம், வீதியில் விபத்து ஏற்பட்டால் சடலமாவது கிடைக்கும். ஆனால், விமான விபத்து ஏற்படும்போது மிகவும் அரிதாகவே உடல் எச்சங்களும் மீட்கப்படுகின்றன. வீதி விபத்துகளைப் போன்று விமான விபத்துகள் அடிக்கடி ஏற்படாவிட்டாலும் எப்போதாவது அந்த விபத்துகள் ஏற்படும்போது அதிகமான உயிரிழப்புகளும் பொருள் சேதங்களும் ஏற்பட்டுவிடுகின்றன.

வரலாற்றில் அதிகமான விமான விபத்துகள் உலகப்போர் நடைபெற்ற காலங்களிலேயே இடம்பெற்றுள்ளன. ஆரம்ப காலத்தில் விமான விபத்துகள் அதிசயமான ஒன்றாகவே பார்க்கப்பட்டன. பின் வந்த காலங்களில் அவை பழக்கப்பட, அதுவே எல்லோருக்கும் பழகிப்போயும் விட்டது.

விமானங்களை நாம் இரண்டு வகையாகப் பிரிக்க முடியும். முதலாவது வகை போர் விமானங்கள். மற்றையது வர்த்தக நோக்கத்தில் பயன்படுத்தப்படும் பயணிகள் விமானங்கள். இங்கு நாம் பேசப்போவது பயணிகள் விமானங்கள் பற்றியே. ஏனெனில், இந்த மாதிரியான விமானங்களின் விபத்தில்தான் அதிகமான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

பொதுவாக விமானங்கள் மேலே ஏறும்போதும், கீழே இறங்கும்போதும்தான் அதிகமான விபத்துகளைச் சந்திக்க நேரிடுகின்றது. அதனைத் தவிர, மேலே விமானங்கள் பறக்கின்றபோது ஏற்படுகின்ற விபத்துகள் மிக அரிதாகவே இடம்பெறுகின்றன. அதிலும் விமானம் காணாமல்போதல் என்கின்ற ஒரு விடயம் அதிசயமான ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. எப்படியான விமான விபத்துகள் ஏற்பட்டாலும், சில நாள்கள் கழித்து அதற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிடுவது இயல்பானது. அதற்கு மாறாக சில திட்டமிடப்பட்ட செயல்கள் மூலம் நடக்கின்ற விமான விபத்துகளின் காரணங்களைக் கண்டறிதல் என்பது அபூர்வமானது.

பயணிகள் விமானங்கள் விபத்துக்குள்ளாகும்போது அந்த விபத்துக்கான காரணிகள் காலந்தாழ்த்தியாவது கண்டுபிடிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன. பலவித பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய இந்த விமானங்கள் எப்படி விபத்துக்குள்ளாகின்றன என்பது எல்லோரது இதயத்திலும் எழக்கூடிய சாதாரண ஒரு கேள்வியாக இருக்கின்றது.

விமானத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளே அநேகமான விமான விபத்துகளுக்குக் காரணங்களாகும். விமானத்தில் ஏற்படும் கோளாறுகள் தவிர, விமானியின் திட்டமிட்ட கொலைவெறி நடவடிக்கை, வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றுடன் ஏனைய விமானங்களுடன் மோதி விபத்திற்குள்ளாகின்றமையும் விமான அழிவுகளுக்கு காரணமாக அமைகின்றன. அண்மைக்காலமாக பயணிகள் விமானங்கள் மீது தீவிரவாதிகளும் அதற்குத் துணைபோகும் சக்திகளும் தாக்குதல் நடத்துகின்றமை கடந்த வருடம் ஜூலை மாதத்தில் ரஷ்ய ஆதரவு உக்ரேனிய தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட எம்.எச். 17 விமானத்தாக்குதல் மூலம் மீள உறுதி செய்யப்பட்டது.

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம், தாங்கள்தான் இந்த ரஷ்ய விமானத்தைச் சுட்டுவீழ்த்தியதாக உரிமை கோரியிருந்தாலும், அது விபத்திற்குள்ளானதற்கு தொழில்நுட்பக் கோளாறே காரணம் என ரஷ்யத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். முழுமையான விசாரணைகளின் பின்னரே எப்படி ரஷ்ய விமானம் வீழ்ந்தது என்ற விவரம் தெரிய வரும்.

**பத்தி எழுத்து**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 - 492 7474, 021-492 7475, 021 - 567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 - 493 1111
விநியோகம் : 021 - 493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அனைத்துக் கட்சி மாநாடு சிதலமுறக் கூடாது; கவனம்

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் இன்னமும் செயல் உருப்பெறவில்லை.

குறிப்பாக, போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு மாறான செயற்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கான பொறிமுறை தொடர்பாக பலரும் பலவித கருத்துக்களைக் கூறிக்கொண்டிருந்த போதிலும், அந்தத் திசை நோக்கிய அரசின் நகர்வு தெளிவாகத் தெரிவதாக இல்லை.

மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்திருந்த பரிந்துரையில் காணப்பட்ட கலப்பு நீதிமன்றம் என்பதை மாற்றி, அதற்குப் பதிலாக பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு விசாரணையாளர்கள் என்ற சொற்பிரயோகம் தீர்மானத்தில் இடம்பெறச் செய்யப்பட்டிருப்பதாகவே பலரும் கருதுகிறார்கள்.

குறிப்பாக தமிழர் தரப்பில் அவ்வாறான ஒரு கருத்தே மேலோங்கி நிற்கிறது. ஆனால் அரசு தரப்பில், வெளிநாட்டு நிபுணத்துவ ஆலோசனைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்; அதுதவிர விசாரணைப் பொறிமுறையானது முழுக்க முழுக்க உள்நாட்டு விசாரணையாளர்களைக் கொண்டதாகவே இருக்கும் என்பதாகவே பிரதமர் மற்றும் ஜனாதிபதி போன்ற உயர் மட்டத் திலிருந்து வெளிப்பட்டுள்ள செய்திகள் உறுக்கிக் கூறுகின்றன.

இதைவிட மைத்திரி-ரணில் தேசிய அரசுக்கு எதிராக செயற்பட்டுவரும் ராஜபக்ச தரப்பு கோஷ்டி, ஜெனிவா தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றத்துக்கே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பதை ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. அவ்வாறான கலப்பு நீதிமன்றம் நிறுவப்படுவதாயின் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்தி வருகின்றது.

ஜெனிவாத் தீர்மானத்துக்கு உள்நாட்டிலேயே இவ்வாறான கருத்து மோதல்களும் முரண்பாடான வியாக்கியானங்களும் காணப்படுகின்றனவே அன்றி, வெளிநாடுகளில் இருந்தோ, குறிப்பாக ஜெனிவா மனித உரிமைகள் சபை வட்டாரங்களில்இருந்தோ, தீர்மானத்தை முன்மொழிந்த அமெரிக்காவிடமிருந்தோ இதுவரை அதிகாரபூர்வமான அபிப்பிராயங்கள் எதுவும் வெளிவந்ததாக இல்லை. உண்மையில், இலங்கையில் இப்போது ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாக பரவிக் கொண்டிருக்கும் வெவ்வேறு வகையான வியாக்கியானங்களுக்கு தீர்மானத்தின் மூலகர்த்தாவான அமெரிக்க தரப்பிலிருந்து விளக்கம் வரவேண்டும். அவ்வாறு இல்லையெனில், ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் சபையின் உயர்மட்ட அதிகாரிகளிடமிருந்து ஒரு விளக்கம் வருமாக இருப்பின் உள்நாட்டில் பல்வேறு தரப்புக்களும் தத்தம் போக்கில் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருப்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி ஏற்பட வாய்ப்புண்டு.

இவ்வாறான நிலைமையில், தாம் ஒரு முடிவு எடுக்கு முன்னர்நாட்டின்சகலதரப்பினரது கருத்துக்களையும் அறிந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்துக் கட்சி கூட்டத்தை அண்மையில் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டாலும் ஒரு முகமான கருத்தொன்று உருவாகும் சாத்தியம் தென்படவில்லை.

எதுவானாலும் அனைத்துக் கட்சி மாநாடென்பது, கடந்த காலத்தில் வெறும் கண்துடைப்பாகவும், காலம் கடத்தும் தந்திரமாகவுமே இருந்துள்ளது. மகிந்த ராஜபக்ச காலத்தில் இடம்பெற்ற திஸ்ஸ விதாரண தலைமையிலான மாநாடு இதற்குப் பொருத்தமான உதாரணம். அதே நிலைமை இப்போது மைத்திரிபால சிறிசேன நடத்தும் சர்வகட்சி மாநாட்டுக்கும் ஏற்படலாகாது.

மாநாட்டில் அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி சிவில் தரப்புக்களினதும், நாட்டு நலனில் அக்கறை கொண்ட புத்திஜீவிகளின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வது வரவேற்கத்தக்கதாக இருக்கும். குறிப்பாக தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். போரினாலும், பேரினவாதக் கெடுபிடிகளாலும் நீண்ட நெடுங்காலமாக பாதிக்கப்பட்டு வந்திருக்கும் தமிழ் மக்களின் சார்பில் பேசக்கூடியவர்கள் அவர்களே.

அதேபோன்று தமிழ் தரப்பினரும் தமிழ் மக்கள் சார்பில் ஒருங்கிணைந்த வகையில் கருத்துக்களை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பில் அரசியல் முரண்பாடுகளுக்கு இடம் கொடுக்காமல் தமிழ் மக்கள் நலன் சார்ந்த, யதார்த்தபூர்வமான, சாத்தியப்பாடான கருத்துக்களை முன்வைக்க வேண்டிய பெரும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு என்பதை கிஞ்சித்தும் மறந்து விடலாகாது.


# பிரச்சினைகள் தீர்ந்து விட்டால் இனியொரு போருக்கு இடமில்லை

**வந்தியத்தேவர்**




இலங்கையில் இனியொரு போருக்கு இடமில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமாதானத்துக்கான சர்வதேச சமய மாநாட்டில் வலியுறுத்தியுள்ளார். நாட்டில் உள்ள இனப்பூசல்கள் நீங்கி அனைத்து மக்களும் சகோதரத்துவம் மிக்க பிரசைகளாக இந்த நாட்டில் வாழவேண்டும் என்ற நோக்கில் நல்லாட்சியை உருவாக்க வேண்டும் என விரும்பியவர் ஜனாதிபதி மைத்திரி. எனினும் அவரது குறிக்கோள் பூரணத்துவம் பெறுமா என்பது இன்றைய நிலையில் கேள்விக்குரியதே.

அவரது ஆட்சியில் பிரதமராகப் பதவி வகிக்கும் ரணில் விக்கிரமசிங்க ஓர் இரட்டை வேட தாரி. தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிப்பவர்போல் காட்டிக்கொண்டு சிங்கள இனவாதிகளின் விருப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்பதில் தீவிர அக்கறை கொண்டவர். சர்வதேச விசாரணை தொடர்பில் அவரது அரசு நடந்து கொண்டமுறை அவரது தமிழர் விரோதப்போக்குக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே உள்ளது. அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு கடும்போக்காளர். தமிழர்கள் தன்னைத் தோற்கடித்து விட்டார்கள் என்ற கடுப்பில் இருப்பவர். தன்னை மீண்டும்முன்னிலைப் படுத்தவென, சிலபேரினவாதத் தரப்பினர்களைத் தனதுகைக்கூலிகளாக வைத்துக் கொண்டு நாட்டில் மீண்டும் ஓர் இனக்கல வரத்தை ஏற்படுத்தும்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார் என்பது புலனாகின்றது.



எத்தனையோ ஊழல்கள், போர்க்குற்றச்சாட்டுக்கள் என அவர் மீது அடுக்கடுக்காக விசாரணைகள் இருந்தாலும் மௌனமாக இருந்து கொண்டு நாட்டில் மீண்டும் ஒரு போரைத் தூண்டிவிடவும், இரத்தக்களரியை ஏற்படுத்தவும் தனது கைக்கூலிகளைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதுபோல் உள்ளது. இலங்கையை ஒரு சிங்கள நாடாக்குவோம். சிங்கள மக்கள் எல்லோரும் ஒன்று படுங்கள் என அவரது சார்பில் ஓர் அணி இப்போது மீண்டும் ஒரு இனவாதத் திரியைத் தூண்டத் தொடங்கியுள்ளது. ஜனாதிபதிப் பதவி பறிபோக, பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டு, இறுதியில் நாடாளு மன்ற உறுப்பினராகி மனம் தளர்ந்ததில்மூன்றுமாதங்களில் இருந்து ஓய்வு பெறவுள்ளேன் எனக் குறிப்பிட்டிருந்தாலும் பதவிக் கனவுகள் அவரை விடுவதாகத் தெரியவில்லை. அவரைப் பிடித்த சனியன்களாக சிலர் அவரை ஆட்டிவைத்துக் கொண்டேயிருக்கின்றனர். அவரும் ஆடிக் கொண்டே இருக்கிறார். அதனால்தான் இலங்கையைச் சிங்கள நாடாக்குவோம் என்ற நிலைப்பாட்டில் மீண்டும் அவர்கள் தொங்கத் தொடங்கியுள்ளனர்.



முன்னர் தமது ஆட்சிக் காலத்தில் சிங்கக் கொடியை ஏற்றி இந்த நாட்டை எவ்வாறு பாதுகாத்தோமா, அதேபோல் மீண்டும் சிங்கக்கொடிகளை ஏற்றி சிங்கள பௌத்த நாட்டைக் காப்பாற்றுவோம். சிங்கள மக்கள் அனைவரும் இதற்கு முன்வரவேண்டும் என்பது இந்த அணியினரின் கூச் சலாகும். அதாவது மீண்டும் நாட்டில் ஒரு குழப்பத்தை உரு வாக்கி, எப்படியும் தாங்கள் ஆட்சியில் அமரவேண்டும் என்பதற்கான இரகசிய செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கவும்கூடும். இந்த விடயம் தனக்குத் தொடர்பற்றது என மகிந்த வெளிப்படையாகக் கூறினாலும், அது நம்பக் கூடியதல்ல. நாட்டில் ஓர் இனக் கலவரத்தை எப்படியாவது மூட்ட வேண்டும் என்பதில் அவர் அக்கறையாக இருந்துள்ளார் என்பதற்கு, பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் ஆகியோர் சான்றாவர். மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் கொலைக்கு பிள்ளையான் உடந்தையாக இருந்துள்ளமை இப்போது தெரியவந்துள்ளது. அவர் விசாரணைகளின்போது குறிப்பிட்ட தகவல் மிகவும் முக்கியத்துவம்மிக்கது. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்ய மகிந்த, பிள்ளையானை அணுகியுள்ளதை அவர் போட்டுடைத்துள்ளார். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வைத்து அவரைக் கொலை செய்யுமாறும் கொழும்பில் வேண்டாம் எனவும் மகிந்த கூறியதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். திட்டமிட்டபடி இது நிகழ்திருந்தால் என்ன நடந்திருக்கும். ஒரு சிறிய பிரச்சினை என்றாலும் அதற்கான பழியைத் தமிழ் மக்கள் மீது போட்டு நாட்டில் இனக்கலவரங்களை உருவாக்குவதே சிங்களப் பேரினவாதிகளின் வழமை. கடந்த காலங்கள் இனக் கலவரங்கள் அத்தகைய விதத்திலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்தச் சதி முயற்சி நிறைவேறியிருக்கும் பட்சத்தில் மீண்டும் ஒரு பெரிய இனக்கலவரத்தை இந்த நாடு சந்தித்திருக்கும் என்பது நிச்சயம். இந்த விடயத்தை முன் கூட்டியே அறிந்து கொண்டதனால்தானோ என்னவோ, தேர்தலில் தான் தோல்வியுற்றிருந்தால் மகிந்தவால், தான் கொலை செய்யப்பட்டிருப்பார் என பின்னர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார்.

ஏற்கனவே பல அரசியல் கொலைகளைச் செய்வதற்குப் பிள்ளையான், கருணா போன்றவர்கள் காரணமாக இருந்துள்ளதாக மக்களிடையே பரவலான கருத்துக்கள் இருந்துள்ளன. தமிழ் மக்களை அழிக்கத் தமிழ் இனத்துரோகிகளைப் பயன்படுத்துவதே சரியான வழி என்பதைத் தீர்மானித்து, அதற்குத்தகுந்த தமிழ்த் துரோகிகள் பிள்ளையானும் கருணாவுமே என்பதை அனுமானித்து மகிந்த மட்டுமன்றி, ரணில் விக்கிரமசிங்கவும் காய்களை நகர்த்தினார்கள். கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி பிள்ளையானுக்கும், அமைச்சர் பதவி கருணாவுக்கும் வழங்கப்பட்டதன் நோக்கமே இதுதான். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணாவைக் கழற்றி எடுப்பதில் வெற்றி கண்டவர் ரணில் விக்கிரமசிங்க. புலிகளின் முகாம்கள் தொடர்பாக முக்கிய ஆவணங்களை கருணா எடுத்துச் சென்றது எதற்காக? தங்களது எஜமானர்கள் தங்களைப் பதவியில் இருந்து விரட்டிவிட்டதால் எஜமானர்களிடமிருந்து பெற்ற விடயங்களை பின்னர் அவர்களுக்கு எதிராகவே அவர் கக்கிவிட்டுள்ளார்.

மீண்டும் ஒரு கலவரத்தை உண்டுபண்ணி நாட்டைச் சிங்கள நாடாக மாற்ற வேண்டும் என்ற மனப்போக்கைச் சிங்கள மக்கள் மத்தியில் கிளறிவிட மகிந்தவும் அவரது ஆதரவாளர்களும் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் ஒட்டுண்ணிகளை விலைக்கு வாங்கவும் தயாராக உள்ளனர். தமிழ் மக்கள் இது தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டியது தவிர்க்க முடியாதது.

இந்தச் சூழலில்தான் இலங்கையில் இனியொரு போருக்கு இடமில்லை என்பதை ஜனாதிபதி வலியுறுத்திக் கூறியுள்ளார். முதலில் நாட்டில் இனவாதம், வன்முறைகள் தொடராதிருக்கத் தக்கதாக இனவாதிகளையும் கடும்போக்காளர்களையும் உரிய தண்டனைக்கு உட்படுத்தக் கூடிய செயற்பாடுகள் தேவை. போர்க்குற்றங்கள் போன்று இனவாதக் குற்றங்களுக்கும் வழங்கும் தண்டனைகள் நீதியின் சின்னமாக நிலை நிறுத்தப்பட வேண்டும். நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் பரந்த அளவில் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என விரும்பும் ஜனாதிபதி, போர் இடம்பெற்றதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும் என்கிறார். கடந்த கால அரசுகள் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகள் இனிமேல் தான் கண்டறியப்பட வேண்டும் என்பதல்ல. ஜனாதிபதிப் பதவியை ஏற்ற மைத்திரிபால சிறிசேனவும் ஒரு நீண்டகால அரசியல்வாதியாக முன்னைய அரசின் ஆட்சியில் பங்கெடுத்தவர் என்பதால் போருக்கான காரணங்களை அவர் இனிமேல் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது சரியானதல்ல. இது வரை காணப்பட்ட பேதங்களைத் தகர்த்தெறிந்து இந்த நாடு இங்குள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருக்குமே உரியது என்ற கோட்பாட்டை முன்னிலைப்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்படுவதே இலங்கையில் இனியொரு போருக்கு இடமில்லை என்பதை நிஜமாக்கும்.



செ.உமாசுதன்

# நல்ல மாட்டுக்கு ஒரு சூடு புரிகிறதா சபை (அவை)யே!



வடமாகாண சபைத் தேர்தல் இடம்பெற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆனால் எந்த வித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அமர்வுகள் இடம்பெறுகின்றன. காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் ஒப்புச்சப்பாக இடம்பெறுகின்றன. இருந்தும் என்ன பயன்? அறிக்கைகள் மாத்திரம் அடுக்காக, துடுக்காக அடுக்கிவிடப்படுகின்றன. மாகாண ரீதியிலே செய்யப்பட வேண்டிய பல விடயங்கள் செய்து முடிக்கப்படவில்லை. கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. இந்த நிலையிலே மாகாண சபையும் மாகாண அமைச்சரவையும் வினைத்திறனாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களை அவைத் தலைவர் தான் சரிசெய்ய வேண்டும் என்ற கருத்து ஒருபுறமிருக்க, மறுபுறம், இல்லை அதனை முதலமைச்சர் தான் சரி செய்ய வேண்டுமெனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவே இலங்கையில் அரசமைப் புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப் பட்டது. இந்த நிலையில் ராஜீவ் காந்தியும், ஜே.ஆர் ஜெயவர்த்தனவும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி ஏற்படுத்தப்பட்ட 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அனைத்து அம்சங்களும் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும். அதனை நடைமுறைப்படுத்த இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டும் என்கின்ற கருத்தாடல்கள் வடமாகாண சபைத் தேர்தலின் முன்பாக அதிகளவில் சிலாகிக்கப்பட்ட விடயமாக இருந்தது.

இந்த நிலையிலே 13+ என்பது சாத்தியமில்லை என்ற நிலையும். அப்படிச் சாத்தியப்படுமாக இருந்தால் அது எவ்வாறானதாக இருக்கும் என்ற கேள்வியும் தமிழ்தலைமைகளைவிட தமிழ்மக்களுக்குத் தலையைக் குடையும் விடயமாக இருந்து வருகிறது. அதே சமயம் 13க்குரிய பல அதிகாரங்கள் இல்லாதொழிக்கப்பட்டு விட்டன. குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரிப்பு. அதே போன்று 13 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் உருவாக்கப்பட்ட சட்டங்கள் அதில் இருந்த குறைந்தபட்ச அதிகாரங்களையும் இல்லாது செய்துவிட்டன. அதனையும் தாண்டி அடையாள ரீதியாக அதாவது குறியீட்டு ரீதியாகப் போட்டு வைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூட இல்லாமல் செய்த நடவடிக்கைகளும் இடம்பெற்று விட்டன.

இந்த விடயங்கள் ஒருபுறமிருக்க 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் மாகாண சபை உருவாக்கப்பட்டு தமிழ் ஆட்சி ஒன்று நிலை கொள்ளும் பட்சத்தில் அமெரிக்கா சர்வதேச விசாரணையைக் கைவிடும் நிலை ஏற்படும் என்ற கருத்து இந்திய அரசியல் புலத்திலும், அரசியல் ஆய்வாளர்கள் மத்தியிலும் நிலவியது. அதனையே இந்தியாவும் விரும்பியது. அந்தச் செயல் நிலைகள் உண்மையிலேயே தோன்றிவிட்டதோ என்ற பதற்றம் தென்படத் தொடங்கிவிட்டது. கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்பது முற்றிலும் இலங்கை அரசுக்கு எதிரானதாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இறுதியில் இலங்கை அரசின் அனுசரணையுடன் அது பல மென்போக்கான விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்து விட்டது. இந்தியா கூட, தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர்தான் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டது. தற்போது இலங்கையில் நல்லாட்சி துளிர்விட்டு விட்டது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இனங்களிடையே நல்லிணக்கம் மற்றும் சமத்துவத்தைப் பேணுவதற்கும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று மேற்குலக நாடுகள் கூறிய போதும், அவற்றை இலங்கை அரசு காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக போர்க்குற்ற விசாரணை என்ற விடயத்தில் வெளிநாட்டு நீதிபதிகள் வெறும் பார்வையாளர்கள், ஆலோசனையாளர்கள் தான் என்று கூறி வருகின்றது. இது அரசின் வழக்கமான தன்னுடைய நலன் சார்ந்த ஒரே சிந்தனையில் இருந்து கொண்டு இரு வேறு தோற்றங்களைக் காட்டுகின்ற தன்மையைச் சுட்டி நிற்கின்றது. அதாவது தனக்குச் சாதகமான விடயங்களை நிறைவேற்றுவதற்கு நரித் தந்திரங்களைப் பயன்படுத்துவதும், அதன் பின்னர் யார் கேட்பது என்ற போக்கில் தனது நரிக் குணத்தைக் காட்டுவதாகவும் அதன் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

இந்த நிலையிலே வடமாகாண சபை மற்றும் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழர்களது அரசியல் பிரதிநிதித்துவம் பயணிக்கும் பாதையின் ஸ்திரத்தன்மை எப்படி இருக்கிறது. எவ்வாறு நகர்கிறது என்பது குறித்துச் சிந்திக்க வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. தம்மைத் தாமே எடை போட்டுக் கொள்ள வேண்டிய தேவை அல்லது சவால் தமிழர் தலைமைத்துவங்கள் முன் முன்னிலைப்படுத்தப் பட்டிருக்கின்றது. இந்த எடை போடல் அவர்களின் நிலை தொடர்பான சான்றாக அமையக் கூடும். மக்கள் நலன் தொடர்பில் குறிப்பாக தமிழினத்தின் இருப்புத் தொடர்பிலும் அவர்களின் நிலைத்திருப்பு, அபிலாசைகள் தொடர்பிலும் இனியாவது சிந்திக்க வேண்டும்.

இந்தச் செயல் நிலைகள் இவ்வாறிருக்க வடமாகாணத்திலே முக்கியமான பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. குறிப்பாக தமிழ் சமூகத்தின் எதிர்காலத்தூண்களான மாணவர்களின் பிரச்சினைகள் கோரிக்கைகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அவர்களின் படிப்புரிமைகளும் அடிப்படை உரிமைகளும் கண்டு கொள்ளப்படவில்லை. அவர்கள் மதிக்கப்படவில்லை மாறாக மிதிக்கப்படுகின்றனர். வடமாகாணத்தைப் பிரதிநித்துவப்படுத்தி வருடம் தோறும் ஆயிரம் பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். ஆனால் அவர்களுக்கான வேலைவாய்ப்பு என்பது எட்டாக் கனியாகவே இருக்கிறது. குறைந்தது 5 வருடங்கள் அல்லது அதற்கு மேல் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் அந்தப் பட்டத்தைப் பெறுவதற்கு பட்ட கஷ்டங்களும் அதன் பின் இருக்கின்ற பெற்றோரின் தியாகங்களும் காத்திருப்போடு கலைந்து போகின்றது. அவர்களின் கோரிக்கைகளும் வேண்டுதல்களும் தூக்கியெறியப்படுகின்றன. கேட்டால் சட்டத்தில் இடமில்லை. ஆனால் அவர்களின் தட்டத்தில் வைத்தால் இடமிருக்கிறதாம். என்ன நிலைமை இது? மாணவர்களின் எதிர்காலம் என்னாவது? அவர்களின் வாழ்வாதாரம் எங்கே? அன்றாடம் அல்லாடுகின்றனர். இந்த நிலை தொடர்கிறது. இது இவ்வாறிருக்க தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அது தொடர்பில் பேசுவதற்கும் எங்களால் தெரிவு செய்யப்பட்டு, சபைக்கு அனுப்பப்பட்டவர்களுக்கு எங்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசத் திராணியில்லை. கதிரைகளில் உட்கார்வதும், தூங்குவதும் பின்னர் தூக்கக் கலக்கத்தோடு கருத்துக்களை வெளியிடுதல். இது தான் அவர்கள் செய்த வேலையின் மிச்சம். இதற்கு எடுக்கும் சம்பளம் போதவில்லையாம்? ஏனைய மாகாணங்களைப் போன்று சம்பளத்தைக் கூட்டித்தர வேண்டுமாம். அத்துடன் நிலுவையையும் சேர்த்துத் தர வேண்டுமாம். இது என்ன அடிப்படை என்று புரியவில்லை. மாணவர்கள் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்தி இவர்களைச் சபைக்கு அனுப்பினால். அவையிலும் சபை சந்திகளிலும் கூடி மூக்கு முட்டத் தின்றுவிட்டு ஏப்பம் மட்டும் விடுகின்றனர். தீர்வு என்பது இன்னமும் எட்டப்படவில்லை. மாறாக அசைபோடப்பட்டும் மெல்லப்பட்டும் கொண்டிருக்கிறது. இரை மீட்டல் என்பது இன்னமும் நிகழவில்லை. மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தப் பெரும்பாடு படுகின்றனர். கிடைக்கும் வேலைக்குச் சென்று திண்டாடுகின்றனர். ஆனால் இங்கு சிலர் திங்களுக்கு வழங்கப்படும் சம்பளம் போதவில்லை (31,750) ஏனைய மாகாண சபைகளைப் போல (43,250) சம்பளம் வழங்கப்படவேண்டும் என வடமாகாண ஆளுநருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர். ஐயா! மாணவர்கள் தங்கள் படிப்புரிமைக்காகப் போராட, இவர்கள் எங்கள் வாக்குரிமையின் பலத்தால் கதிரைகளில் உட்கார்ந்து சொகுசாக வாழ்வது மட்டுமன்றி எங்கள் உரிமைகள் தொடர்பில் பேசாதிருக்கின்றனர். எங்களின் கோரிக்கைக் கடிதங்கள் முதலமைச்சர் முதல் ஆளுநர் வரை சென்றிருக்கிறது. மாகாண அரசு முதல் மத்திய அரசு வரை பறந்திருக்கிறது. அதிகாரிகளின் மேசைகளைத் தட்டி அங்கிருந்த தூசிகளோடு கோவைகள் பத்திரமாக அலுமாரிகளில் அடுக்கப்பட்டுக் கிடக்கின்றன. சந்திப்பு பின்னர் பேச்சு என்ற தொடர்கதை. இரண்டு நாள்கள் ஞாபகம் மீட்டப்படும் பின்னர் அதுவும்காற்றோடு பறந்துவிடும். பறக்கிறது. மாணவர்கள் மனம் பதைபதைக்கின்றது. தாய் தந்தையின் தியாகத்துக்கு செய்ய வேண்டிய கடமைகள் எதிரே இருக்க தங்களின் மடமையை எண்ணித் தவிக்கின்றனர். இதனை யார் கவனத்தில் எடுப்பார்கள்? மீண்டும் மாணவர்கள் தங்கள் உரிமைக் காகவும் புறக்கணிப்புக்காகவும் போராட வேண்டிய நிலைதான் முன்னிறுத்தப்பட்டுள்ளதா? வாக்குரிமையால் வந்தவர்களின் சொகுசு மட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் சொகுசு என்பது சொரியாஸிஸ் நோயாகத் தொடரும். நாங்கள் எங்களின் உரிமையைக் கேட்கும் போது அதிகாரிகளின் தலையைச் சொறியும் குணம் என்பது இந்த நோயின் தாக்கம் தான். இதை எவரும் மறுக்க முடியாது.

இவர்களின் மௌனம் பதில் தராவிட்டாலும் காலம் இவர்களுக்கு விரைவில் பதில் சொல்லும். அந்த நம்பிக்கைக்கீற்று விரைவாகத்தென்பட வேண்டும். வாக்குரிமையின் பலத்தால் வந்தவர்களின் கோரிக்கைகளும் வேண்டுதல்களும் கருத்தில் எடுக்கப்படுமாக இருந்தால் எங்களின் படிப்புரிமைக்கான தீர்வுகளும் தரப்பட வேண்டும். இதுவே மாணவர்கள் அனைவரது வேண்டுகோளும். விண்ணப்பமும்.

இனியாவது இவர்கள் படிப்புரிமைகளின் கோரிக்கைகளைத் தங்களின் நேர்த்தியான சமூகப் பணிக்காக வாவது கருத்தில் எடுக்க வேண்டும். சுய நலன் இன்றி பிறர் நலன் கருதிச் செயற்பட வேண்டும். தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.



# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## அனைத்திலும் அன்பு தேவை

உலக வாழ்வுக்குள் வந்துவிட்டீர்கள். அதற்கு அறிகுறியாக ஏதேனும் அடையாளத்தை விட்டுச் செல்லுங்கள். எழுந்திருங்கள், உழையுங்கள். இல்லாவிட்டால் நாம் பூமியில் பிறந்ததில் ஒருபயனும் இல்லை. அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ் வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். அமைதியையும் ஆசியையும் கொண்டுவராத அன்புச்செயல்கள் உலகத்தில் எதுவுமே இல்லை. கடவுள் பற்றில்லாமல் இருக்கிறார். ஏனென்றால் உலகம், உயிர்கள், அண்டசராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

# மாங்காயில் இவ்வளவு சத்துக்களா?



மாங்காய் என்ற பெயரைக் கேட்டாலே நாவில் எச்சில் ஊறுவது போன்று மாங்காய் உடலுக்குத் தேவையான ஆரோக்கிய நன்மைகளையும் வழங்குகிறது. மாங்காய் சாப்பிட்டால் மலக்குடற் புற்றுநோய் வராமல் தடுக்கும். செரிமானத்தைத் தூண்டி மலக் குடலைச் சுத்தம் செய்யும். பசியைத் தூண்டும். மாங்காயில் விற்றமின் மற்றும் கனிமச் சத்துக்கள் நிறைந்துள்ளன. மாங்காயில் கலோரிகள் குறைவாக இருப்பதால் நிறையைக் குறைக்கநினைப்போர் இதனைச் சாப்பிடலாம். மாங்காயில் விற்றமின்-சி சத்து இருப்பதால், புதிய குருதி அணுக்களின் உற்பத்திக்கு உதவுகிறது. மாம்பூவை நிழலில் உலர்த்தி எடுத்துப் பொடியாக்கி நீர்விட்டுக் கொதிக்க வைத்துக் குடிநீராக அருந்தினால் வயிற்றுப் போக்கு நீங்கும். காலில் பித்த வெடிப்பு உள்ள பகுதியில் மாம் பிசினைத் தடவி வந்தால் பித்தவெடிப்புக் குணமாகும். சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் இருந்தால், அது மற்றவர்களுக்கும்பரவாமல் தடுக்கும்தன்மைமாவிலைக்கு உண்டு. தினமும் மாங்காய் சாப்பிட்டால் குருதியைச் சுத்தப்படுத்தி உங்கள் உடலைப் பலமாக்கும். ஆண் பெண் ஆகிய இருபாலாருக்கும் ஏற்படும் நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத்தீர்வு தரும். மாலைக் கண் மற்றும் பற்களில் ஏற்படும்பிரச்சினைகளுக்கு மாங்காய் சாப்பிடுவது ஏற்ற தீர்வாகும். சருமத்தைப் பளபளப்பாக்கி, முதுமைத் தோற்றத்தைத் தடுக்கும்.

## நாளை

**ஐப்பசி-18 புதன்கிழமை (04.11.2015)**

| | |
|---|---|
| **திதி:** அட்டமி மு.ப. 11.08வரை | **சுபநேரம்:** 04.34-06.04 வரை |
| **நட்சத்திரம் :** ஆயிலியம் பி.இ.12.22வரை | **இராகு காலம்:** 12.04-1.34 வரை |

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 120 | 100 | 100 | 100 | 80 | 80 | 80 | 60 |
| கரட் | 100 | 80 | 60–140 | 80 | 180 | 120 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 60 | 40 | 40 | 30 | 50 | 30 |
| பயிற்றை | 160 | 140 | 150 | 140 | 160 | 200 | 100 | 130 |
| பாகல் | 200 | 130 | 200 | 180 | 180 | 200 | 110 | 180 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 60 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 180 | 120 | 140 | 140 | 140 | 180 | 120 | 130 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 130 | 160 | 100 | 130 |
| பூசணி | 50 | 40 | 60 | 50 | 50 | 80 | 50 | 40 |
| தக்காளி | 160 | 120 | 150 | 120 | 120 | 160 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 70 | 60 | 60 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 30 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 350 | 270 | 150 | 240 | 150 | 200 | 250 | 180 |
| புடோல் | 60 | 60 | 140 | 100 | 80 | 60 | 60 | 70 |
| கோவா | 130 | 100 | 80 | 100 | 80 | 140 | 100 | 70 |
| வெண்டி | 120 | 70 | 120 | 100 | 100 | 120 | 50 | 50 |
| போஞ்சி | 180 | 130 | – | 160 | 180 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 | 80 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 110 | 140 | 120 | 100 | 130 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 350 | 360 | 600 | 250 | 350 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 10 | 10 | 20 | 15 | 8 |
| கறிமிளகாய் | 140 | 150 | 180 | 160 | 220 | 160 | 120 | 170 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 200 | 100 | 140 | 90 | 140 | 200 | 120 | 120 |

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 700 | 700 | 500 |
| நண்டு | 250 | 600 | 200 | 300 | 200 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 600 | - |
| பாரை | 400 | 450 | 350 | 500 | 600 | 300 |
| சுறா | 400 | 500 | 350 | 600 | 800 | 360 |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 250 | 300 |
| விளை | 450 | 400 | 260 | 450 | 400 | 320 |
| முரல் | 250 | 300 | 250 | 350 | 300 | - |
| கும்பிளா | 200 | 300 | 200 | 350 | 300 | 160 |
| கிழாக்கன் | 350 | 800 | - | 400 | - | - |
| ஒரா | 300 | 300 | 220 | 450 | - | 300 |
| திரளி | 150 | 300 | 150 | 300 | 100 | - |
| நகரை | 150 | 300 | 100 | 300 | 100 | 200 |
| சூடை | 150 | 100 | 50 | 120 | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 180 | 300 | - | - |
| திருக்கை | 150 | 300 | 150 | 250 | 200 | 100 |
| பாலை | 350 | 200 | - | 400 | 300 | - |
| வாழை | 80 | 100 | 150 | 300 | - | 150 |
| கொய் | 100 | 100 | 40 | 120 | 50 | - |
| மதனம் | 150 | 250 | 130 | 250 | - | 100 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | 3 | 7 | | 9 |
| 9 | 5 | | 7 | | | | | |
| | | | 9 | | | | 6 | |
| | 2 | 9 | | 8 | | 6 | 5 | 3 |
| | 3 | 8 | | | | 2 | | |
| | 4 | | 2 | 3 | | 9 | | 8 |
| | 1 | | | | 6 | | | |
| | | | | | 2 | | 8 | |
| 3 | | 2 | 5 | | | | | 6 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 9 | 1 | 3 | 6 | 7 | 2 | 4 |
| 1 | 2 | 3 | 4 | 7 | 5 | 9 | 6 | 8 |
| 7 | 4 | 6 | 2 | 8 | 9 | 1 | 3 | 5 |
| 9 | 6 | 5 | 8 | 1 | 2 | 4 | 7 | 3 |
| 2 | 1 | 7 | 3 | 6 | 4 | 8 | 5 | 9 |
| 8 | 3 | 4 | 5 | 9 | 7 | 2 | 1 | 6 |
| 6 | 9 | 2 | 7 | 4 | 3 | 5 | 8 | 1 |
| 3 | 5 | 1 | 9 | 2 | 8 | 6 | 4 | 7 |
| 4 | 7 | 8 | 6 | 5 | 1 | 3 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# உங்கள் பிறந்த மாத பலன்கள் எப்படி?

*(ஜனவரி, மாதத்தில் பிறந்த வர்களுக்கான பலன்கள் குறித்து நேற்றைய உதயனில் குறிப்பிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சி கீழே பிரசுரமாகிறது.)*

ஜனவரி மாதத்தில் பிறந்த ஒருவர் எவ்வளவு கொடிய சோதனைகள் வந்தாலும் வேதனையடைய மாட்டார். தம்முடைய குறிக்கோள் நிறைவேறும் வரை சாதனையிலேயே ஈடுபடுவார். நிபந்தனைகள் பலவாக இருப்பினும் உண்மையான போதனைகளைக் கைவிடமாட்டார். மற்றவர்களிடத்தில் காண முடியாத அதிசயம் இவரிடத்தில் உண்டு. அது என்னவென்றால், ஒரு காரியத்தில் ஈடு படும்போது குறைந்தபட்சம் இரண்டு விதமான நன்மைகளை ஏற்படுத்திக் கொள்வார். தரம் பார்த்துச் செலவு புரிந்திடுவார். சிக்கனத்தில் உலோபிகளையும் இவர் தோற்கடிப்பார். தாராள மனப்பான்மையிலும் உதார குணத்திலும் கொடை வள்ளல்களும் இவரைக் கண்டு பொறாமைப்படுவர். எதை, எந்த நேரத்தில், எப்படிச் செய்ய வேண்டுமோ, அதை அந்த நேரத்தில் அதன்படியே செய்து முடிப்பார். இந்த நெறியே இவருக்கு உறுதுணையாக நின்று எளிதில் அரும் பயனைத் தேடியளித்திடும். பணத்தைக் கொண்டும், செல்வாக்கைக் கொண்டும், மற்றவர்கள் சாதிக்க முடியாததை இவர் செலவின்றி, சிபாரிசு இல்லாது நொடிப்பொழுதில் சாதித்திடுவார். சிக்கல் நிறைந்த வாழ்க்கையெனினும், சிக்கலிலிருந்து இவர் தன்னை விடுவித்துக் கொள்வார். இவரை நம்பி எந்தக் காரியத்தையும் ஒப்படைக்கலாம். ஆனால், இவரை நம்பி எந்தக் காரியத்திலும் பிறர் பிரவேசிக்கலாகாது. இவர் நினைத்தால் ஆண்டியையும் அரசனாகக் கருதுவார். நினைத்தால், அரசனைத் துரும்பாகவும் மதியார். ஆம் என்பவர்களுக்கு ஆத்திகனாகவும், இல்லை என்பவர்களுக்கு நாத்திகனாகவும் தோற்றமளிப்பார். ஆசாரங்களை அனுஷ்டிப்பது ஒழுக்கமெனவும் கருதுவார். அதே போல், அநாசாரத்தை இழுக்கெனக் கருதவும் மாட்டார். ஒளிவுமறைவு என்பதை இவரிடத்தில் காண்பது அரிது. பிறர் புலனுக்குக் கடுமையாகத் தோற்றமளிப்பார். ஆனால், உள்ளம் கனிந்தவர். செய்வதைத் திருந்தச் செய்வார். மிதமாகவே எதையும் உபயோகிப்பார். ஆக்க சக்தியுடையவர். அழிவதைத் தடுக்க வல்லவர். அழிந்ததை மீட்கக் கூடியவர். இருப்பதைப் பெருக்கிடும் ஆற்றலுடையவர். தன்னை உணர்ந்தவர். தனிமையில் இனிமையைக் காண்பவர். தன்னம்பிக்கையுடையவர். குஷிப் பேர்வழி. சுபிட்சமான எதிர்காலத்தை நிர்மாணிக்கப் பல திட்டங்களைத் தீட்டிடுவார். ஆனந்த பரவசமுடையவர். சிறிய விடயங்களிலும் பெரிய பிரயாசை கொள்வார். தனது வழிக்கு இசையாததைக் கண்டு வருந்துவார். ஆனால், மற்றவர்களைப்போல் நீண்ட நேரத்தைச் சிந்தனையில் செலவிடமாட்டார். பிடிக்காத விடயமென்றால் திரும்பியும் பார்க்க மாட்டார். வாழ்க்கையில் ஏற்படும் அரிய வாய்ப்பை நழுவ விடமாட்டார். இவருக்கு அதிக நண்பர்கள் இருக்க மாட்டார்கள். காரிய தம்பிரான் என்றால் அது இவர் தான்.

**பிணியும் மருந்தும்**

உணவில் அக்கறையின்றி சலிக்காமல் செயலாற்றுவார். இதனால் ஜீரணக் கோளாறுகள் தோன்றி வாட்டிடும். பல்வலியும், சரும வியாதியும், வழுக்கை விழுதல், மனச்சோர்வு போன்றன சாதாரணமாக இவர்களுக்கு ஏற்படும். வாய்ப்புக் கிடைக்கும்போது உல்லாசப் பிரயாணங்களில் ஈடுபடுவதாலும், புதிய இயற்கை வனப்பைக் கண்டு களிப்பதாலும், மன ஆறுதல் அளிக்கும் கண்காட்சிகளைக் கண்டு களிப்பதாலும் அசதிகளைத் தடுக்கலாம். எந்த நேரத்திலும், எது கிடைத்தாலும் ருசி அறியாது உட்கொள்ளக் கூடியவர். இந்தப் பழக்கத்தை மாற்றிக் கொண்டு, பசி நேரத்தில் பக்குவமான உணவுகளை உட்கொண்டால் எவ்விதக் கோளாறுமின்றி இவர் நோயற்ற வாழ்க்கை வாழலாம்.

**குறையும் நிறையும்**

இவர் அதிகாரத்துக்கு வளைந்து கொடுப்பவர் அல்லர். பிறருடைய அபிப்பிராயங்களுக்குச் செவி சாய்ப்பவரல்லர். துதிபாடுவது இவருக்குப் பிடிக்காது. இன வேட்கை அதிகம். சொல்லுக்கு இணங்காதவர்களை வேருடன் களைந்து அகற்றிடுவார். இவரைப் புரிந்துகொள்வது கடினம்.

**வாழ்க்கைத் துணை**

மே, ஜூன், செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் பிறந்தவர்கள் கூட்டாளியாகவோ, வாழ்க்கைத்துணையாகவோ அமையப் பெற்றால் நன்மைகள் ஓங்கிடும். ஏனைய மாதங்களில் பிறந்த வர்களால் அமைதியின்மையும் சங்கடமுமே உண்டாகும்.

**தொழில்**

ஜனவரி மாதத்தில் பிறந்தவர். பயிர்த் தொழிலில் சிறப்பார். கடமை தவறாதவர். வைத்தியரானால் தனிச்சிறப்புடன் விளங்குவார். இவர் கை பட்டதும் நோய் விலகும். தொழிற்சாலைகளை நிறுவி பல்லாயிரக்கணக்கானோருக்கு தொழில் வழங்கிடுவார். பொறியியல், கட்டட வேலை, ஆராய்ச்சி போன்ற துறைகளிலும் மிளிருவார். சொந்த முயற்சியால் எழுத்தாளராகவும், பதிப்பாசிரியராகவும் ஞானியாகவும் விளங்குவார். படிப்படியாக இலட்சியத்தை அடைவார்.



# இன்றைய பெண்ணியம்



பெண்கள் சரிசமமாக வளர்க்கப்பட்டு, நடத்தப்படும் பல முன்னேறிய நாடுகளிலும் பெண்கள் வன்முறை மிக அதிகமாக நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஏன், 6 மணிக்கு மேல் (ஆண்கள்கூட!) வெளியே வர முடியாத அளவு சூழல் உள்ள நாடுகளும் உண்டு. ஆக எமது கலாசாரத்தில் பிழை இல்லை. மேற்குக் கலாசாரத்தை உள்ளே கொண்டு வந்து மக்கள் வக்கிரத்தை தூண்டும் சக்திகளும் அதற்குத் துணை போகும் ஊடகங்களும் தான் இன்றைய நிலைக்குக் காரணம். சட்டத்துக்குப் பயந்து எத்தனை பேர் குற்றம் செய்யாமல் இருக்கிறார்கள்? கலாசாரம்–பாவ புண்ணியம்–மனச் சாட்சி இவற்றுக்குக் கட்டுப்பட்டு எத்தனை பேர் குற்றம் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதை எண்ணி பார்த்தால் எமக்கு கலாசாரத்தின் முக்கியத்துவம் புரியும்!

தவறு செய்தவனை ஆராய்ந்து பாருங்கள். அவனது வக்கிர செயலின் பின்னணியில் நாகரிகமற்ற பெண்களின் நடவடிக்கையும் அதில் நிச்சயம் இருக்கும். எங்கோ அவனது வக்கிரம் தூண்டிவிடப்பட்டு, அதைச் சந்தர்ப்பம் கிடைத்த இடத்தில் அரங்கேற்றி இருக்கிறான். ஆக இந்தப் பாவத்தில் அநாகரிகப் பெண்களின் பங்களிப்பு நிச்சயம் உள்ளது. தற்காலத்தில் கற்பு என்பது ஊடகம் உட்பட பேச்சு வழக்கிலும் போலி பெண்ணிய– திராவிட– முற்போக்கு இயக்கங்களினாலும் தவிர்க்கப்படுகிறது. கற்பு என்பது ஆண்கள் பெண்கள் இருவரும் பின்பற்ற வேண் டிய ஒழுக்கநெறி. அது தான் தனிமனித– குடும்ப–சமூக நலத்துக்கு உகந்தது. இயற்கை ஆணையும் பெண்ணையும் வெவ்வேறாகத் தான் படைத்துள்ளது. அறிவு, வீரம், உடல் திண்மை, உணர்வு போன்றவற்றில் இருவரும் ஒன்றாக இல்லை. பெண்ணின் மென்மை, உணர்ச்சிவசப்படுதல் போன்ற குணங்களைத் தரும். இதை உணர்ந்துகொண்டால் தான் உருப்படியான தீர்வுகளைக் காண முடியும். ஆணும் பெண்ணும் சரி சமம் என்று திணிப்பது மனப்பிறழ்வு.

பெண்ணியவாதி என்றால் ஆண்களின் எதிரி ஆண்களை கோபமூட்ட வேண்டும். ஆண்கள் செய்வதை அப்படியே திருப்பிச் செய்ய வேண்டும். பண்பாட்டு மரபுகளுக்கு எதிராக செயற்பட வேண்டும்' என்பவை போன்ற சிறிய வட்டத்துக்குள்ளேயே அடைந்து இருக்குமாறு நவீன பெண்ணியவாதிகள் பார்த்துக் கொள்கிறார்கள். உண்மையான பெண்ணியம் என்றால் நல்ல பண்பட்ட சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் பெண்கள் சமூகத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைமைப் பண்பும், அறிவும் பெறுதலே ஆகும். இன்றைய பெண்ணியவாதிகளின் உண்மை முகத்தை ஆராய்ந்தால் அவர்கள் பல்வேறு இயக்கங்களின் தூதுவர்களாக இருப்பது தெரியும். அவர்களின் எண்ணத்தை நிறைவேற்ற பெண்களை பகடைக்காயாக பயன்படுத்துகிறார்கள். உலகமயமாக்கல் (அமெரிக்கமயமாக்கல்), பெண்களிடம் போதைப் பழக்கத்தை பெருக்குவது, பெண்கள் மூலம் குடும்ப அமைப்பு சமூகத்தைச் சீர்குலைப்பது, களவுத் திருமணங்களை ஊக்குவித்து மதம் பரப்புவது, கலாசாரத்தைச் சீரழிப்பது என்று அவர்களின் குறிக்கோள் நீளும். 'நான் சொல்வதை ஒப்புக்கொண்டு அப்படியே திருப்பிச் சொல்; உனக்கு புரட்சிப்பெண் போராளி என்று பட்டம் கொடுக்கிறேன்' என்பது தான் அவர்களின் அடி நாதம். விட்டில் பூச்சிகள் போல உலகம் அறியாப் பெண்கள் அவர்கள் வலையில் விழுகிறார்கள். எனவே பெண்ணியம் பற்றிய சரியான புரிதல் இன்றி வெறும் வாதத்துக்காக வளர்க்கப்படும் கருத்தாக்கங்கள், சமூக தடுமாற்றத்தை ஏற்படுத்துமே ஒழிய, பெண்களுக்கோ மொத்த சமூகத்துக்கோ எந்த நன்மையையும் செய்யாது.

**ஏன், 6 மணிக்கு மேல் (ஆண்கள்கூட!) வெளியே வரமுடியாத அளவு சூழல் உள்ள நாடுகளும் உண்டு. ஆக நமது கலாசாரத்தில் பிழை இல்லை. மேற்குக் கலாசாரத்தை உள்ளே கொண்டு வந்து மக்கள் வக்கிரத்தை தூண்டும் சக்திகளும் அதற்குத் துணை போகும் ஊடகங்களும் தான் இன்றைய நிலைக்குக் காரணம்.**



# வல்லவனுக்கு வல்லவன்

மன்னர் மகிபாலனின் அரசவையில் பாலா என்ற விகடகவி இருந்தார். விகடகவியின் புத்திக்கூர்மை மன்னருக்கு மிகவும் பிடித்துப் போனதால் அவரைத் தனது அரச ஆலோசகராகவும் நியமித்துக் கொண்டார்.



விகடகவி பாலா, அரச ஆலோசகராக இருப்பது அரண்மனை அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பொறாமையை உண்டு பண்ணியது. அன்று அரசவையில் அறிஞர் பெருமக்கள் பலரும் வீற்றிருந்தனர். அப்போது அரசவைக்கு அயல் நாட்டு அறிஞர் ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் அமைச்சர்களும், அதிகாரிகளும் சந்தோசத்தால் துள்ளி எழுந்தனர். ஏனென்றால் அவர்கள்தான், தங்கள் திட்டத்தின் படி அந்த அறிஞரை வர வழைத்திருந்தனர். இவர்களின் கபட நாடகத்தை அறியாத மன்னரும், "வாருங்கள் அறிஞரே! எங்கள் அரசவையிலும் உங்களைப் போன்று ஒரு விகடகவி இருக்கிறார். இருந்தாலும் உங்களது திறமையை இந்தச் சபையில் காட்டுங்கள்" என்று கூறினார். "அரசே! உங்கள் நாட்டு விகடகவியோடு நான் போட்டியிட வேண்டும். அதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டும்"என்று பணிவுடன் வேண்டி நின்றார் அயல் நாட்டு அறிஞர். அதைக் கேட்ட மன்னரும் ஹ... ஹா... ஹா... என்று பலமாகச் சிரித்தார். "அரசவை விகடகவியே, நீங்கள் மிகச் சிறந்த அறிவாளி என்று கேள் விப்பட்டேன். கணிதத்திலும் தேர்ச்சி பெற்றவர் என்று அறிந்தேன். அதனால் உங்கள் தலை முடியை ஒவ்வொன்றாக எண்ணி அதன் மொத்த எண்ணிக்கையை உங்களால் கூற முடியுமா?" என்றார் அயல் நாட்டு அறிஞர். அயல்நாட்டு அறிஞரின் கேள்வி அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியது. "தலை முடியை எப்படி எண்ண முடியும்?" என்று ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுக் கொண்டனர். அந்தச் சமயத்தில் விகடகவி பாலா "ஐயா! அறிஞரே! நான் மொத்த முடியை எண்ணி முடிப்பதற்கு ஒரு நாள் கால அவகாசம் வேண்டும். நாளை எனது தலைமுடியின் எண்ணிக்கையை இந்த அரசவையில் தெரிவிக்கிறேன்" என்று கூறினார். அதைக் கேட்ட அதிகாரிகளும், அமைச்சர்களும், "ஒரு நாள் என்ன பத்து நாள்கள் கால அவகாசம் எடுத்துக் கொண்டாலும் பாலா தனது தலைமுடியை எண்ண முடியாது" என்று தங்களுக்குள் கூறிக் கொண்டனர். அடுத்த நாள் அரசவை கூடியது அனைவரும் விகடகவி பாலா என்ன சொல்லப் போகிறார் என்ற ஆவலோடு இருந்தனர்.'அறிஞர் பெருமானே! நீங்கள் விதித்தப்படி நான் எனது தலை முடியை எண்ணி முடித்துவிட்டேன். ஆனால் அதற்குள் ஒரு நிபந்தனை. அந்த நிபந்தனைக்கு நீங்கள் கட்டுப்பட்டாக வேண்டும். எனது எண்ணிக்கை தவறாக இருந்தால் நான் எனது தலையை இழக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், சரியாக இருந்தால் நீங்கள் உங்கள் தலையை இழக்க வேண்டும். சம்மதமா?" என்றார் விகடகவி பாலா. "பாலா! உமது நிபந்தனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீர் உமது தலைமுடியின் எண்ணிக்கையைக் கூறும்" என்று கம்பீரமா[illegible] குரல் கொடுத்தார் அயல் நாட்டு அறிஞர். பாலாவின் பதிலைக் கேட்க எல்லோரும் ஆவலாக இருந்த போது அவர் மௌனமாக நின்றபடி தனது தலையிலிருந்த தலைப் பாகையைக் கழற்றி எடுக்க, அவரது தலையைக் கண்ட அனைவரும் 'கொல்' என்று சிரித்து விட்டனர். பாலா மொட்டைத் தலையுடன் நின்று கொண்டிருந்தார். அவரது தலையில் முன்னே இரண்டு முடிகள் மட்டும் நீண்டு கொண்டிருந்தன. "அறிஞர் பெருமானே! எனது தலையில் இரண்டு முடிகள் தான் இருக்கின்றன. நீங்களும் நன்றாக எண் ணிப் பாருங்கள்" என்று கூறினார் விகடகவி பாலா. பாலாவை ஒழிப்பதற்குத் திட்டம் போட்ட அதிகாரிகளும், அமைச்சர்களும் வெட்கத்தால் தலை குனிந்தனர். தனது தலைக்கு ஆபத்து வந்துவிட்டதை நினைத்த அயல்நாட்டு அறிஞரின் உடல் நடுங்கத் தொடங்கியது.

## வர்ணம் தீட்டலாம் வாங்க






# முயன்றால் முடியாதது எது?

"முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை" என்று சொல்வார்கள். எம்மால் அறவே முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றி அடைய முடியும். அது எமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும். எந்தக் காரியமும் ஆரம்பிக்கும்போது மலைப்பாகத்தான் தோன்றும். குழந்தைகள் கூட நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் விழுந்து எழுந்துதான் நடை பயிலுகின்றன. கீழே விழுகிறோமே என்று அவர்கள் முயற்சிக்காமல் விடுவதில்லை. விடாமுயற்சி மட்டும் இல்லாவிட்டால் பல சாதனைகள் நிகழ்ந்திருக்க மாட்டா. தோமஸ் அல்வா எடிசன் சொல்கிறார், "ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலும் முயற்சி செய்யாமல் இருப்பது எமது பலவீனமே. இன்னுமொருமுறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம்தான் வெற்றிக்கு வழிவகுக்கும்''என்று. புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிசங்களை எம்மால் அறிய முடியும். நாம் எல்லாம் படித்து முடித்து விட்டோம் என்று எண்ணுவது சுலபம். ஆனால் கற்றது கைம் மண்ணளவுதான் என்று புத்தகச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்டத்தான் புரியும். ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளைச் சந்தித்திருக்கிறார்கள்! அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரப் புகழ் பெறுவதற்கு முன்னால் எத்தனை முறை தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்பதும் தெரியும். தோல்விகள் கதவை மூடும்போது தொடர்ந்து விடாமுயற்சியுடன் கதவுகளைத் தட்டித் திறப்பதுதான் வெற்றிக்கான சாவி. கடலை நோக்கி மலை சொல்லியது. "நான் உன்னைவிடப் பலசாலி. என்னை எவராலும் அழிக்க முடியாது" என்று. ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளில்கடலின் அலைகளால் மலை மறைந்தது கடல் அலைகள் தொடர்ந்தன. ஓரிரு முறை தோல்வியைச் சந்தித்துவிட்டால் துவண்டு விடாதே! தோல்வி நிரந்தரம் அல்ல, தோல்வியுற்றால் அதில் உள்ள தவறை ஒத்துக்கொண்டு அதிலிருந்து மீண்டும் முன்னேறு...!





ஆனால் ஒருபோதும் முயற்சி செய்ய மறக்காதே...!' இதனை மறவாமல் இருந்தாலே வெற்றி எமது காலடியில் சரணடையும். எமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடாமுயற்சியோடு செயற்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். சிகரங்கள் காத்திருக்கின்றன. சிகரங்களை எட்ட நீங்கள் தயாராகுங்கள்.

# கடந்த சில மாதங்களில் இலங்கையில் 161 எய்ட்ஸ் நோயாளிகள் கண்டுபிடிப்பு

## *அதில் ஒன்பது பேர் கர்ப்பிணிகள்*

இந்த வருடத்தில் கடந்த சில மாதங்களில் இலங்கை முழுவதிலும் 161 எய்ட்ஸ்நோயாளிகள்இனங்காணப்பட்டுள்ளதாகவும், அவர்களில் ஒன்பது பேர் கர்ப்பிணிகள் எனவும் தேசிய பால்வினை மற்றும் எய்ட்ஸ் நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இவர்களுள் 65.70 வீதமானோர் 25இற்கும் 49இற்கும் இடைப்பட்ட வயதினர் எனவும், 10 வீதமானோர் 20 இற்கும் இடைப்பட்ட வயதினர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவிவரங்கள் வருமாறு:-

விபசாரிகளுடன் பாதுகாப்பற்ற முறையில் பாலியல் தொடர்புகளை வைத்துக்கொள்ளல், ஆண்களின் ஓரினச் சேர்க்கை மற்றும் ஊசிகள் மூலம்போதைமருந்துகளை ஏற்றிக் கொள்ளல் போன்றவை எய்ட்ஸ் நோய்த் தாக்கத்துக்கான முக்கிய காரணங்களாகும்.

இனங்காணப்பட்டுள்ள நோயாளிகளில் 40 வீதமானோர் வெளிநாடுகளில் தொழில் செய்துவிட்டு இலங்கைக்குத் திரும்பியவர்களாவர்.

1987ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கையில் மொத்தமாக 2,241 எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுள் 342 பேர் மரணடைந்துள்ளார்கள்.

தாயிடமிருந்து பிள்ளைகளுக்கு இந்நோய் பரவுவதற்கு 4 வீத வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, சகல கர்ப்பிணிகளும் தவறாமல் வைத்தியப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம். அத்துடன், விபசாரிகளுடன் உறவுகொள்பவர்கள் கட்டாயமாக ஆணுறைகளைப் பாவிக்கவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மூலமாகவே இந்த ஆட்கொல்லி நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு தெரிவித்தார் மருத்துவர் சிசிர லியனகே. (த)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, நவ. 03

சேருநுவரபொலிஸ்பிரிவுக்குட்பட்ட லிங்கபுரம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் யானைதாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றதாகச் சேருநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் லிங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் கீதன் (வயது – 48) என்பவரே உயிரிழந்துள்ளார். குறித்த நபரது வீட்டில் வைத்தே அவரை யானை தாக்கியுள்ளதாகவும், உயிரிழந்தவரது சடலம் சேருநுவர வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (த–10)


## அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட வளர்ச்சிக்காக முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிஸ்டலாப சீட்டிழுப்பின் முடிவுகள் பின் வருமாறு

1ஆம் பரிசு இலக்கம் 1339 - ஜெ. மேரி அனுசியா (மன்னார்)
2 ஆம் பரிசு இலக்கம் 684 - தே. மயூரன் (துணுக்காய்)
3ஆம் பரிசு இலக்கம் 2701 - ஜெகனேந்திரன் (மன்னார்)

ஆறுதல் பரிசுகள்

இலக்கம்:- 849, 1120, 1360, 2431, 1754, 1182, 51, 105, 2565,2494,

இவ் இலக்கங்களை கொண்ட அதிஸ்டசாலிகள் அதிஸ்டலாபச் சீட்டுக்களுடன் சங்கத் தலைவர் பா. கஜஜேசன் (T.P:- 0777 577863) அவர்களை தொடர்பு கொண்டு பரிசில் களை பெற்றுகொள்ளவும்.


# மீள்குடியேறிய முஸ்லிம்களுடன் பேராசிரியர் குழுவினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களை பேராசிரியர் எச்.எஸ். ஹஸ்புல்லாஹ் தலைமையிலான குழுவினர் சென்று பார்வையிட்டனர். அவர்களின் இந்தப் பயணம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.



குறிப்பாக முஸ்லிம் மக்கள்வாழும் கிராம சேவகர் பிரிவுகளான ஜே/86, ஜே/87 ஆகிய பகுதிகளுக்குச் சென்று குறைநிறைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன், அதற்கான தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கைஎடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பில் இந்தக் குழுவினர் ஈடுபட்டதுடன் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு உதவவும் முன்வந்துள்ளனர்.

யாழ். – கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பயணம் மேற்கொண்ட இந்தக் குழுவினர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவினால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய ஒற்றுமைபாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் பொறுப்பாளர் சந்திரசேன மாலியத்த, யாழ். முஹம் மதியா ஜும்மா பள்ளி வாசல் பிரதம இமாம் மஹ்மூத் பலாஹி, தன்னார்வ தொண்டு நிறுவன உறுப்பினர் அகிலன் மற்றும் யாழ். – கிளிநொச்சி சம்மேளனம் சார்பாக அதன் தலைவர் ஜமால் முகைதீன், செயலாளர் ஆர்.கே சுவர்க்ஹான் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த–10)

# அலுகோசு பதவிக்கான நியமனத்தில் இழுபறி

கொழும்பு, நவ .3

அலுகோசு (கைதிகளைத்தூக்கில் போடுபவர்) பதவிக்கு அண்மையில் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோதிலும் அவர்களின் நியமனம் இது வரை உறுதி செய்யப்படவில்லை எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹண புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

சாவுத் தண்டனை மீண்டும் நடமுறைக்கு வருமா ? இல்லையா? என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள் ளதால் இவர்களின் நியமனம் குறித்து, சிறைச்சாலைகள் புனருத்தாபன அமைச்சிடமிருந்து அனுமதி கிடைக்காததன் காரணத் தாலே அவர்களது நியமனங்கள் பற்றிய முடிவு எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

அலுகோசு பதவிக்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் நடந்தது. அதன் பின்னர் இருவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டமை தெரிந்ததே. (த)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம் :- 14
ஆதன இலக்கம் : 153
கல்வளை றோட்.
கிராம சேவகர் பிரிவு J/142

வட்டாரம் 14, கல்வளை றோட், ஆதன இலக்கம் 153 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை பிரதேசசெயலகம், சண்டிலிப்பாய், பிரதேச சபை மானிப்பாய். (வலி தென் மேற்கு) "வெல்காமம்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 10 குளி 2.62 கொண்ட இவ் ஆதனம் ஆனது யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த தற் பொழுது கனடாவில் வதியும் சண்முகவடிவேல் நாகேந்திரன், சண்முக வடிவேல் குகேந்திரன், சண்முகவடிவேல் லோகேந்திரன், சண்முக வடிவேல் லோகேந்திரன், சண்முகவடிவேல் மகேந்திரன், சண் முகவடிவேல் புவனேந்திரன் ஆகிய இவர்களால் தத்துவக்காரர் சண்டிலிப் பாயைச் சேர்ந்த தியாகராஜா கிருஸ்ணராஜா மூலம் சண்டிலிப்பாய் கல்வளை யைச் சேர்ந்த தர்மலிங்கம் கேதீஸ்வரன் என்பவருக்கு குறித்த ஆதனம் ஆனது பிரசித்த நொத்தாரிஸ் திரு. பொ. சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 2406 ஆம் இலக்க 03.09.2008 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "வெல்காமம்" நிலப்பரப்பு 10 குளி 2.62 கொண்ட இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றறேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனம் தர்மலிங்கம் கேதீஸ்வரனும் பெண் கிருஸ்ணானந்தியும் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தை பெயர் மாற்றம் செய்ய உரிய நட வடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய்.


# கொரிய வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கத் தூதுவர் இணக்கம்

கொரியாவில் இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு இலங்கைக்கான கொரியத் தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மாகாண நிர்வாகம் மற்றும் மாகாணசபைஅமைச்சர்பைஸர் முஸ்தபாவுடன் நடத்திய சந்திப்பொன்றின் போதே கொரியத் தூதுவர் இந்த இணக்கத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், மாகாணசபை நிறுவனங்களுக்கான தேவையான வசதிகளை மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகளிலும் கொரிய அரசு உதவிகளைப் பெற்றுத் தருவதாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான, நல்லுறவை மேலும் விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தூதுவர் தன்னிடம் உறுதியளித்துள்ளதாக அமைச்சர்முஸ்தபாதெரிவித்துள்ளார். (த)


## வீணை விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள **வீணை** விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு : 021 222 2940

## வீடு வாடகைக்கு தேவை

தனியார் நிறுவன ஊழியர்கள், முகாமையாளர்கள், தங்குவதற்கு யாழ் மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளும் கொண்ட வீடு / தொடர்மாடி தேவை.

தொடர்புக்கு : 077 0360 555

## வேலையாள்கள் தேவை

ஆடைத் தொழிற்சாலைக்கு

- ★ ஆடை உற்பத்தி முகாமையாளர்
- ★ தையல் பட வரைஞர்
- ★ தையல் இயந்திர இயக்குநர்
- ★ வோஷிங் பிளான் ஒப்ரேட்டர்

மேற்குறிப்பிட்ட வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புவர்களும் உடனடியாகத் தேவை.

T.P : 077 6701 495

## தவறிவிட்டது

பொன்னையா விஜயரட்ணம் என்பவ ரது தே.அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் வாகன வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதி அட்டை என்பன விசுவமடு - நாச்சிக்குடா பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழக்காணும் இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு : 077 6386 624



## புதுக்குடியிருப்பு பிரதேசசபை.
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையால் இக்ராட் (ICTAD) பதிவுச்சான்றிதழ் வைத்திருப்போர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கீழே காட்டப்பட்டவாறு கேள்விப்பத்திர கட்டணத்தையும் கேள்வி வைப்புப்பணத்தினையும் அலுவலக நேரத்தில் செலுத்துவதன் மூலம் கேள்விப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. **கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 04.11.2015ஆம் நாள் தொடக்கம் 12.11.2015 ஆம் நாள் வரையிலான அலுவலக நேரம்.**
02. **கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 13.11.2015 நண்பகல் 12 மணிவரை**
03. **கேள்வி திறக்கப்படும் திகதி :- 13.11.2015 பிற்பகல் 1.00 மணி**
04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்ததாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
06. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு **செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்வதுடன் மறுபிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம். | குறைந்த அளவு இக்ராட் (ICTAD) பதிவு |
|---|---|---|---|---|
| 01 | புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் வாகன தரிப்பிடம் அமைத்தல் | 15,000.00 | 2,000.00 | C9 |
| 02 | பழம்பாசி மாமடு வீதி புனரமைப்பு | 27,000.00 | 2,000.00 | C8 |

திரு.கு.மிதிலைநாதன்
செயலாளர்,
பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

**02.11.2015**

(C/19804)(10.17)

# போர்க்குற்ற விவகாரம் இலங்கையின் உள்விடயம்

*தலையிட விரும்பவில்லை என்கிறார் வியட்நாம் தூதுவர்*

யாழ்ப்பாணம், நவ. 03
இலங்கையின் போர்குற்ற விசாரணை தொடர்பில் நாம் எந்தக் கருத்தையும் வெளியிட விரும்பவில்லை. அது இலங்கை மக்களுடன் தொடர்புடைய விடயம். வியட்நாம் இதில் எதுவித தலையீடும் செய்யாது என்று யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட வியட்நாம் தூதுவர் பான் கியவ்து தெரிவித்தார்.
யாழ்.வணிகர் கழகத்தை நேற்று மாலை சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே வியட்நாம் தூதுவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
வியட்நாமும் இலங்கை போன்று போரினால் பாதிக்கப்பட்ட ஒரு நாடு. நாம் சாமாதானத்தையே விரும்புகிறோம். தமிழ் – சிங்கள – முஸ்லிம் என்ற எந்த இனப் பாகுபாடுமின்றி, இலங்கை மக்கள் என்ற நோக்கத்துடன் நட்பு ரீதியில் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளேன்.
போரினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக 2012 ஆம் ஆண்டில் மீன்பிடித்துறை சம்பந்தப்பட்ட 2 திட்டங்கள் எமது அரசினால் வழங்கப்பட்டன. இந்தத் திட்டங்களைப் பார்ப்பதற்கு நான் தற்போது ஆவலாக உள்ளேன் – என்றார்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன், வியட்நாமில் அரிசி, இறப்பர், கோப்பி, கடலுணவுகள் அதிக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த உற்பத்திகள் – ஏற்றுமதிகள் தொடர்பில் எம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம் என்று குறிப்பிட்டார்.
விசேடமாக கடலுணவு உற்பத்தியில் இறால், நண்டு, கடலட்டை போன்றவற்றைப் பண்ணைகளில் உற்பத்தியில் செய்வது தொடர்பான ஆலோசனைகள் வழங்கத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். தமது நாட்டில் இருந்து ஆலோசகர்களை இங்கு கொண்டு வந்து பயிற்சிகள் வழங்க முடியும் என்றும்– அத்துடன் விவசாயத்தில் இயந்திர தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் வியட்நாம் தூதுவர் தெரிவித்தார்–என்றார்.
(த–ரி4–ரி6)



## ஆத்துமாக்கள் நினைவு நேற்று

மன்னார், நவ. 3
கத்தோலிக்க திருச்சபை இறந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யும் சடங்கான ஆத்துமாக்கள் திருநாள் நேற்றுக் கத்தோலிக்கர்களால் உலகெங்கிலும் நினைவுகூரப்பட்டது.
இந்தத் திருநாள் நேற்றுத் திங்கட்கிழமை காலை மன்னார்– பேசாலை சேமக்காலையிலும் நடைபெற்றது.
இதன்போது அருட்தந்தை செபமாலை திருப்பலியை ஒப்புக் கொடுத்து இறந்த ஆத்துமாக்களின் கல்லறைகளையும் ஆசிர்வதித்தார்.
இதன்போது பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொண்டதுடன், இறந்தவர்களின் உறவினர்கள் இறந்த உறவுகளின் கல்லறையில் மெழுகு வர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (து)

# கிளி. பாடசாலைகளில் வேண்டும் வகுப்பறைகள் , மலசலகூடங்கள்

*மாவட்ட புள்ளிவிவரத்தில் தெரிவிப்பு*

கிளிநொச்சி, நவ. 3
கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் வகுப்பறைகள், மல சல கூடங்களின் தேவை அதிகமாகக் காணப்படுவதாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலகப் புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட புள்ளிவிவரம் தொடர்பான கலந்துரையாடலிலேயே குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் 104 பாடசாலைகள் இருக்கின்றபோதும் அவற்றில் 32 படசாலைகளுக்கு 171 வகுப்பறைக் கட்டடங்கள் தேவைப்படுவதாகவும், இதற்கு 249 மில்லியன் ரூபா உத்தேச செலவினமாகக் காணப்படுவதாகவும் புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அத்தோடு 17 பாடசாலைகளுக்கு 17 விஞ்ஞான ஆய்வுகூடங்களும், 14 பாடசாலைகளுக்கு 14 ஆசிரியர் விடுதிகளும், 5 பாடசாலைகளுக்கு 5 அலுவலகக் கட்டடங்களும், 26 பாடசாலைகளுக்கு 26 கணினி கற்கும் நிலையங்களும், 23 பாடசாலைகளுக்கு23நூலகங்களும், 11 பாடசாலைகளுக்கு 64 மல சல கூடங்களும், 20 பாடசாலைகளுக்கு தண்ணீர் வசதிகளும் செய்து கொடுக்க வேண்டி உள்ளதாக குறித்த புள்ளிவிவரத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் உள்ள இவ்வாறான பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்காக 573.29 மில்லியன் ரூபா உத்தேச நிதியாக தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–21–ரி3)

## மாணவர்கள் மீதான தாக்குதல்; ஜே.வி.பி. இன்று கேள்விக்கணை

கொழும்பு, நவ. 3
உரிமைக்காகப் போராடிய பல்கலைக்கழக மாணவர்கள்மீது பொலிஸார் மேற்கொண்டுள்ள தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜே.வி.பி. இன்று நாடாளுமன்றத்தில் கேள்விக்கணைகளைத் தொடுக்கவுள்ளது.
நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச்சட்டத்தின் 23/2ஆம் பிரிவின்கீழ் விசேட கூற்றொன்றை விடுத்தே இதுபற்றி ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாய்க்க சபையில் சர்ச்சையைக் கிளப்பவுள்ளார்.
ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் பத்தரமுல்லையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.
இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அநுரகுமார திஸாநாயக்க, மாணவர் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை விடுக்கவுள்ள விடயத்தை உறுதிப்படுத்தினார்.
அத்துடன், மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
இது பற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:–
மக்கள் போராட்டங்களை ஒடுக்குதல், ஊடக அடக்குமுறை என ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் மகிந்த ஆட்சியில் தலைவிரித்தாடியதால் தான், அந்த ஆட்சியை மக்கள் விரட்டியடித்தனர். எனவே, ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்காது மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கும் வகையில் மைத்திரி – ரணில் ஆட்சி செயற்படவேண்டும்.
ஆனால், அவ்வாறு நடப்பதாகத் தெரியவில்லை. ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள்மீதான மிலேச்சத்தனமான தாக்குதல் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றது.
உயர் தேசிய கணக்கீட்டு டிப்ளோமா மாணவர்களின் கோரிக்கை நியாயமானதாகும். பேச்சுமூலம் தீர்வை அடைவதே மாணவர்களின் இலக்காக இருந்தது. இதற்காக பலமுயற்சிகளை அவர்கள் எடுத்திருந்தனர். அமைச்சரை சந்திப்பதற்கு முயற்சித்தனர். அவையாவும் தோல்வியில் முடிந்ததாலேயே வீதியில் இறங்கி உரிமைக்காகப் போராடினார்கள். அந்தப் போராட்டம் மிகவும் கொடூரமாக ஒடுக்கப்பட்டுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இதை ஏற்க முடியாது.
மாணவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையிலேயே, அவர்கள் இப்படி நடந்துகொண்டுள்ளனர் என்று உயர் கல்வி அமைச்சர் கூறுவதை ஏற்கமுடியாது. அவரின் கருத்து அப்பட்டமான பொய்யாகும்.
அதேவேளை, கல்விக்காக 6 சதவீதம் ஒதுக்கப்படும் எனக் கூறப்பட்டது. எனினும், அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. இலவச கல்விக்கு ஆப்புவைத்து தனியார் கல்வித்துறைக்கு வழிசமைத்துக் கொடுக்கும் திசையிலேயே அது பயணித்துக்கொண்டிருக்கின்றது. இதற்கு இடமளிக்க முடியாது. இலவச கல்வியைப் பாதுகாப்பதற்காக நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம்.
மாணவர்கள்மீதான தாக்குதல் மற்றும் கல்விப் பிரச்சினைகள் சம்பந்தமாக செவ்வாய் அன்று நாடாளுமன்றத்தில் விசேட அறிப்பு விடுக்கப்படும்.
சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டிய பொலிஸார், காட்டுமிராண்டித்தனமாகச் செயற்பட்டுள்ளனர் .
பொலிஸாரின் நாளாந்த நடவடிக்கைகளில் தலையிடும் அதிகாரம்பொலிஸ் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. உத்தரவிடும் அதிகாரமும் கிடையாது. ஆள்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற பரிபாலன நடவடிக்கைகளிலேயே அது ஈடுபடும். பொலிஸ் ஆணைக்குழுவால் கட்டளை பிறப்பிக்கமுடியாது.
பொலிஸ் என்பது அரசின் ஒரு பகுதி. எனவே, தமக்குத் தெரியாமல் பொலிஸ் செயற்படுகின்றது என அரசு ஒருபோதும் கூற முடியாது. எனவே, இந்தச் சம்பவத்துக்கான முழுப்பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும்.
பல்கலை மாணவர்கள்மீதான தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சருக்குப் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். இதுபற்றி விசாரித்து அறிக்கை தருமாறு அவர் பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார். இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
மகிந்த ஆட்சியின்போது பிரச்சினைகளை மூடிமறைப்பதற்குஆணைக் குழுக்கள் அமைக்கப்படுவது வழமையான நடவடிக்கையாகும். எனவே, கடந்த காலத்தைப்போன்று இந்த அரசின் விசாரணைகளும் அமையக்கூடாது–என்றார். (கு)

## மின் தடை

யாழ்ப்பாணம், நவ. 03
உயர் அழுத்த, தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகச் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்படவுள்ளது.
நாளை புதன்கிழமை மற்றும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 9ஆம் திகதி திங்கட்கிழமை, 10ஆம்திகதி செவ்வாய்க்கிழமை, 12ஆம் வியாழக்கிழமை, 16ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை காரை நகர்பிரதேசத்தில்பாலாவோடை, இ.போ.ச. டிப்போ பிரதேசம், விளானை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.
(த–10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.03
யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறுமென பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.
(ஜ–9)

**விழி நீர் சொரிகின்றோம்**

எமது புனித அந்தோனியார் கல்லூரியின் பிரதி அதிபர் L.I றொகான் அவர்களின் அன்புத் தாயார் திருமதி லீனஸ் இக்னிசியஸ் பேர்னடேற்றம்மா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.



புனித அந்தோனியார்
கல்லூரிக் குடும்பம்,
ஊர்காவற்றுறை.

**இரண்டாம் ஆண்டின் நினைவலைகள்**

மண்ணில் 1947 • 05 • 14



விண்ணில் 2013 • 10 • 26

**திருமதி மனோன்மணி நன்னித்தம்பி**

திதி சப்தமி [03.11.2015]

நிறைகுடமாய் வாழ்ந்து
உறவுக்கெல்லாம் உயிர்கொடுத்த தாயே
இரண்டு ஆண்டுகள் சென்றதம்மா ஆனால்
உங்களை ஒருபோதும் நினையாது
சென்றதில்லை அம்மா உங்கள் பாதம்
போற்றி உருகி நிற்கின்றோம் அம்மா
என்றும் உங்கள் நினைவுகள் எம்
சிந்தனையில் வாழ்கின்றதம்மா
காலன் உங்களை அணுகாமல் காக்கும்
சக்தியின்றிக் காலமெல்லாம் நாங்கள்
கலங்குகின்றோம் அம்மா

இராவத்தை,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

என்றும் உங்கள் நினைவில்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கழன்று ஓடிய ரயில் எஞ்சின்

கொழும்பு, நவ.3

கடந்த 31ஆம் திகதி காலை கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற ரயிலின் எஞ்சின் மட்டும் கழன்று முன்னால் செல்ல பெட்டிகள் பின் தொடர்ந்த சம்பவ மொன்று நடந்துள்ளதாகவும், காலி, மாகால்ல ரயில் கடவையில் பணியிலிருந்த கேட் காவலாளி யின் புத்திசாதுர்யத்தால் நடக்க விருந்த பெரும் விபத்து நூலிழையில் தவிர்க் கப்பட்டதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 31ஆம் திகதி காலை 7.10இற்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட இந்த ரயில் காலி ரயில் நிலையத்தை அடைந்த பின் அங்கிருந்து மாத்தறை நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தது. அது மாகால்ல சுதர்மாராம ரயில் கடவையைக் கடந்தபோது அந்தக் கடவையின் காவலாளியான எம்.எம்.என்.பாரூக் ரயில் எஞ்சின் மாத்திரம் கடவையைக் கடந்து சென்றதை அவதானித்திருக்கிறார். எனினும், அவர் கடவை யைத் திறக்காமல் சற்றுநேரம் பொறுத்திருந்தபோது ரயிலின் பெட்டிகளும் பின்னால் வந்து கடவையைக் கடந்துள் ளன. எஞ்சின் ரயில் கடவையைக் கடந்த வுடன் அவர் கடவையைத் திறந்திருந்தால் அங்கு தடுத்திருந்த ஏராளமான வாகனங்கள் பின் னால் வந்த பெட்டிகளால் மோது ண்டு பெரும் இடர் நிகழ்ந்திருக்கக் கூடுமென பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

ரயில் எஞ்சின் கட்டுகொட ரயில் நிலையத்தை வந்தடைந்த பின் அதன் பின்னால் வந்த பெட்டிக ளைக் காணவில்லை என்று தெரிந்துகொண்ட சாரதி எஞ்சினை நிறுத்திவிட்டு பெட்டிகளுக்காகக் காத்திருந்தார். சற்றுநேரத்தில் அங்கு வந்து சேர்ந்த பெட்டிகள் எஞ்சினில் மோதி ஓய்வு நிலைக்கு வந்தன.

தனது புத்திசாதுரியத்தால் நடக்க விருந்த பெரும் இடரை நூலிழை யில் தவிர்த் துக்கொண்ட பாரூக்கை ரயில்வே திணைக்கள அதிகாரிகளும், பொலிஸாரும், பிரதேச வாசிகளும் வெகுவாகப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (கு)

## மத்தளவில் இறங்கியது ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, நவ. 3

குவைத்தில் இருந்து வந்த ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமொன்று திடீரென மத்தள விமான நிலையத்தில் நேற்று தரையிறக்கப்பட்டது.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில்தரையிறங்கவிருந்த யு.எல்.230 ரக விமானமே மத்தள விமான நிலையத்திற்குத் திருப்பப்பட்டுத் தரையிறக்கப்பட்டுள்ளது.

கடும் மூடுபனி காரணமாகவே இந்த விமானம் மத்தள விமானநிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவித்தன. அண்மைய வாரங்களில் இவ்வாறு திசை திருப்பப்பட்ட இரண்டாவது விமானம் இது வென்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## சர்வதேசப் பொலிஸாருடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்

### கைச்சாத்திடுகின்றார் பொலிஸ்மா அதிபர்

பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங் கக்கோன், சர்வதேச பொலிஸா ருடன் (இன்ரபோல்) புரிந்துணர்வு ஒப் பந்தமொன்றை கைச்சாத்திட வுள்ளதாகப் பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவித்தன.

உகண்டாவில் இடம்பெறும் சர்வதேச பொலிஸ் மாநாட்டிலேயே இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகபொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

உகண்டாவில் இடம்பெறும் வருடாந்த சர்வதேச பொலிஸ் மாநாட்டில் பல நாடுகளின் பொலிஸ் பிரதானிகள் கலந்து கொள்கின்றனர்.

இதன்படி இலங்கை சார்பில் இதில் கலந்து கொள்ள பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் நேற்று முன்தினம் உகண்டாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-வ)










## மரண அறிவித்தல்கள்



### இராசசேகரம் பயோதரி அம்பாள் (குயில்)

தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசசேகரம் பயோதரி அம்பாள் (குயில்) நேற்று (02.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசசேகரம் அரசரத்தினம்மா தம்பதியினரின் மகளும் கல்பனா, அரவிந்தன் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

09, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0196

தகவல்
குடும்பத்தினர்

### கலாநிதி ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை

(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

தென்புலோலி உபயகதிர்காமத்தைப் பிறப் பிடமாகக் கொண்ட கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (02.11.2015) திங்கட்கிழமை அமெரிக்கா கலிபோர்னியா வில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை உமையாத்தைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், மீனாட்சியின் அன்புக் கணவரும், சிவப்பிரியை, அருளாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதீசனின் அன்பு மாமனும், இளங்கோ, வன்னி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சுப்பிர மணியம்பிள்ளை, மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புனிதவதி, சிவகுமரன் ஆகியோரின் மைத் துனரும், மாலன்பனின் பெரியதந்தையும், மயூரியின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்: திருமதி பரமேஸ்வரி சிவகுமார் (சகோதரி).

## மரண அறிவித்தல்

முதுபெரும்புலவர், கலாபூஷணம், புலவர்மணி, கவியோகி, மரபுக்கவிஞர்

### திரு.வை.க.சிற்றம்பலம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் தற்போது இணுவிலில் வாழ்ந்தவருமாகிய வை.க.சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 101 வயதில் நேற்று (02.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இணுவிலில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுனினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சாந்தினிதேவி வசந்தராஜா

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தினிதேவி வசந்தராஜா கடந்த (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வரதராஜாவின் (ஓய்வுபெற்ற படவரைஞர்-நீர்ப்பாசனத் திணைக்களம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா -தவமலர் தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மருமகளும், வினிதா, வினேசன் ஆகியோரின் அன்புத் தாயும், கங்காதீபன், தனியா ஆகியோரின் அன்பு மாமியும், ஹரிசன், சிமாரா, ஷண்வின் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், குகானந்ததேவி, அருளீஸ்வரன், சாந்திபரன், ஜானகி ஆகியோரின் அன்புச்சகோதரியும்,பகீரதி-நடராஜா, ரேவதி- அரூஸ், காலஞ்சென்ற குலேந்திரராஜா மற்றும் சறோஜினிதேவி, ஜெயரூபகாந்தி, இராஜேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2015) செவ்வாய்க் கிழமை பி.ப. 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1ஆம் ஒழுங்கை, யாழ் வீதி,
உரும்பிராய் தெற்கு.

தகவல் :
சு. வசந்தராஜா (கணவர்)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

### பொன்னையா கனகலிங்கம்

(முன்னாள்,கொழும்பு,ஈரோஸ் திரையரங்கு முகாமையாளர்)



சங்கானை, நாகலிங்க சுவாமிகள் வீதியைப் பிறப்பிடமாக வும், கொழும்பு வெள்ளவத்தை, பாமன் கடையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கனகலிங்கம் அவர்கள் நேற்று (02.11.2015) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: -
குடும்பத்தினர்

### கந்தையா ஏகாம்பரநாதன்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய பொலீஸ் உத்தியோகத்தர்)



"அன்னைஅகம்" வட்டுவடக்கு சித்தன் கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட க. ஏகாம்பரநாதன் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய பொலீஸ் உத்தியோகத்தர்) நேற்று (02.11.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் - செல்வமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ரதிதேவியின் அன்புக் கணவரும், சுசிலா (கஜமுகன் முன்பள்ளி ஆசிரியர்), கவிதா (அராலி சரஸ்வதி ம.வி), நுசந்தா (ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி), சோதியா (வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம்), சயந்தினி, சத்யகிறி (பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரன், தேவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சோபிஷன், கிருஸ்ணவேணன், கிருஸ்ணவாணி, நோமிராஜ், நோஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2015) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி இந்து மயானத்துக்கு எ டுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை அகம்,
வட்டு வடக்கு, சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### E.S தங்கேஸ்வரராசா பிருதிவிராஜ்




E.S தங்கேஸ்வரராசா பிருதிவிராஜ் (02.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற E.S தங்கேஸ்வரராசா நாகரத்தினம் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும் சிங்கப்பூர் சண்முகம் இலட்சுமி அம்மா தம்பதியரின் மருமகனும் இராசலட்சுமியின் (கட்டி) அன்புக் கணவரும் அருள்குமரனின் தந்தையாரும் ஹாசினியின் பேரனும் இந்திராதேவி, தேவகுரு, வசந்தரதேவி மோகனசுந்தரம், ஜெயராஜ், விஜயராஜ் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற துரைசிங்கம் காலஞ்சென்ற இராஜேஸ்வரி சிவகுகநாதன், இராசலிங்கம், இரத்தினசாமி, இரத்தின சபாபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2015) செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கனகத்தி வடலி,
வல்வெட்டித்துறை.

(c 19806)
(14.15.16)

தகவல் :
குடும்பத்தினர்.

## விடுதலை

மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மாதம், சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். கடந்த 12 ஆம் திகதி ஆரம்பித்த இவர்களது போராட்டம் 17 ஆம் திகதிவரை நீடித்திருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக எழுத்து மூலமாக உத்தரவாதமளித்ததைத் தொடர்ந்து அவர்கள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். அத்துடன், ஜனாதிபதியை நான் நம்புகின்றேன், நீங்கள் அவர் வழங்கிய வாக்குறுதியை நம்பிப் போராட்டத்தைக் கைவிடுங்கள் என்று தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்தித்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் நவம்பர் 7 ஆம் திகதி நெருங்குகின்ற நிலையில் தமது விடுதலை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

'வாக்குறுதி வழங்கிய ஜனாதிபதி மௌனமாக இருக்கின்றார். எம்மை பிணையில் விடுவது தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. நாம் கோருவருது பொதுமன்னிப்பைத்தான். பிணையில் விடுதலை செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. எமக்குப் பொதுமன்னிப்புத்தான் வேண்டும்' என்று தமிழ் அரசியல் கைதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படாவிட்டால், சாவதைத் தவிர வேறு வழியில்லை. நாம் எமது உடலை மருத்துவ பீடத்துக்கும், எமது உடல் உறுப்புக்களை ஏனையோருக்கும் தானம் எழுதி வைத்து விட்டுத்தான் சாவோம். நாம் சாவடைந்த பின்னர் எமது உடலையும், உடல் உறுப்புக்களையும் உரியவர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபாலவே ஏற்றுக்கொள்ளட்டும்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தீபாவளிப் பண்டிகையை தாம் புறக்கணிப்பதாக அறிவிப்பதோடு, ஒட்டுமொத்த தமிழ் - இந்து மக்களையும் புறக்கணிக்க கோரவேண்டும். அத்துடன், நாடாளுமன்றத்துக்கு முன்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் தங்களது ஆதங்களை, அவர்களுடைய உறவினர்கள் ஊடாகத் தெரியப்படுத்தியுள்ளனர். (த-5)

## 700

கொல்லப்பட்டுள்ளனர்.

மக்களுக்குச் செய்திகளை எடுத்துச் சென்றவர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர். (த-சி)

## 10 மாவட்டங்

முள்ள பாடசாலைகளுக்கு இது தொடர்பான நடவடிக்கைகளை இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

## பிணை

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று (நேற்று) காலையில் தொலைபேசியில் உரையாடினேன். தமிழ் அரசியல் கைதிகளை முதல் கட்டமாகப் பிணையிலேயே விடுவிக்கப்படவுள்ளனர். அதற்கான ஏற்பாடுகளையே அரசு மேற்கொள்கின்றது. அவ்வாறாயின் பிணையில் விடுவிக்கப்படப்போகின்றவர்கள் தொடர்பிலான விவரத்தை வழங்குமாறு பிரதமரிடம் கோரினேன்.

அதற்கமைய பெயர்ப் பட்டியலை நாடாளுமன்றத்தில் வைத்து எம்மிடம் கையளிப்பதாகப் பிரதமர் தெரிவித்தார். இந்தப் பெயர்ப் பட்டியல் கிடைக்கப் பெற்ற பின்னரே, ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (த-5)

## ஜனாதிபதி

ரணையை முன்னெடுக்க முடியும் எனக் கூறினார்.

இதையடுத்து, இந்த மனு தொடர்பான விளக்கத்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என வழக்கின் பிரதிவாதிகளான, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சில அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்ற நீதியரசர் கட்டளையிட்டுள்ளார். (த-வ)

## உள்ளூர்

முதல மைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித் தார்.

உலகின் வல்லரசான அமெரிக்காவுடன் போர் புரிந்து வெற்றியீட்டிய வியட்நாம் போருக்குப் பின்னர் எவ்வாறு மீண்டது என்பது தொடர்பில் நாம் கற்கவேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கைக்கான வியட்நாமியத் தூதுவர் பான்கியூதோன் அம்மையார் நேற்று வடக்குக்கு பயணம் மேற்கொண்டார். அவர் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பில் முதலமைச்சர் தெரிவிக்கையில்,

வியட்நாம் தூதுவரின் வடக்கு மாகாணத்துக்கான முதலாவது பயணம் இது. இதன்போது உலகின் வல்லரசான அமெரிக்காவுடன் போர் புரிந்து வெற்றியீட்டிய வியட்நாம் போருக்குப் பின்னர் எவ்வாறு மீண்டது என்பது தொடர்பில் கேட்டறிந்து கொண்டேன்.

வடக்குக்கு அரசியல் காரணங்களுக்காக நீண்ட காலமாக வரவில்லை எனவும், எவற்றிலும் வெற்றி அடையவேண்டுமானால் உடனுக்குடன் முடிவு எடுக்கும் குணம் இருக்கவேண்டும் என்றும் தூதுவர் என்னிடம் கூறினார். அத்துடன் ஓர் இலக்கைத் தீர்மானித்து அதை நோக்கி ஊக்கத்துடனும், வேகத்துடனும் பயணிக்க வேண்டும் என்பதோடு வடக்கு மாகாணத்தில் மீன்பிடிக்கு கடலை மட்டும் நம்பியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. உள்ளூர் நீர் நிலைகளையும் பயன்படுத்தலாம். இதற்கு தமது நாடு முடிந்தளவு ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் தரத் தயார் எனவும் கூறினார். இலங்கை அரசைப் பொறுத்தவரை வியட்நாம் இணைந்து செயற்படுவதில் தாமதம் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்-என்றார். (த-101)

## ஐ.நா

கிராமப்புற மக்களுக்கும் தெளிவுபடுத்தப்படவுள்ளது என்று மகிந்த ஆதரவு அணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். அத்துடன், சர்வகட்சி மாநாட்டுக்கும் எதிர்ப்பு வெளியிடப்படவுள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், நாட்டில் சட்டம் இயற்றப்படவேண்டும். அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். உயர்நீதிமன்றம்வரை செல்வோம். இராணுவத்தைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்" -என்றும் அவர் கூறினார். (த-சி)

## வாய், கை,

பட்டுள்ளார்.

இவர் வீட்டில் தனித்திருந்தவேளை அங்கு நுழைந்த கொள்ளையர்கள் மூதாட்டியைக் கட்டிப்போட்டுவிட்டுக் கொள்ளையில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இரவு 7 மணியளவில் மூதாட் டியின் வீட்டுக்குச் சென்ற அயலவர்களே அவர் கட்டப்பட்ட நிலையில் சடலமாக இருந்ததைக் கண்டு சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கு விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

ஜன்னலைப் பிரித்தே கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மூதாட்டி வாய் கட்டப்பட்டமையால் மூச்சுத் திணறி உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (த-4-101-106)

## தாய்லாந்து

மைத்திரிபால சிறிசேனவுக்கு இராணுவ மரியாதையுடன் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

விசேட பிரதிநிதிகளுக்கான புத்தகத்தில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன கையெழுத்திட்டார். தாய்லாந்து பிரதமரால் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் இதன்போது வழங்கப்பட்டது. மேலும் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் கடந்துள்ளதையொட்டி விசேட முத்திரையும் இருவரால் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இதையடுத்து, இரு நாடுகளுக்குமிடையலான அரசியல், பொருளாதார, சமூக உறவுகளைக் கட்டியெழுப்புவது தொடர்பான முக்கிய பேச்சுகளில் இரு நாட்டுத் தலைவர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபட்டனர். (த-சி)

## கைத்தொலைபேசியில்

வேணாவில் பகுதியில் வசித்து வரும் இவர் நேற்றுமுன்தினம் மாலை கடும் மழைபெய்து கொண்டிருந்தவேளை மரக்கறி வியாபாரத்துக்காக மன்னாகண்டல் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தார்.

இதன்போதே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். மின்னல் தாக்கியபோது கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு சென்றதாக நேரில் கண்ட சிலர் கூறியுள்ளனர். இவருடைய சடலம் திருகோனமலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (த-ரி7)

# வன்னி மாவட்ட எம்.பிக்களுக்கு வவுனியாவில் நேற்று வரவேற்பு





வவுனியா, நவ 3

வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்கும் நிகழ்வு நேற்று வவுனியாவில் நடைபெற்றது. வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் மாலை சூட்டி, நகர வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சருமாகிய ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சிவசக்தி ஆனந்தன், டாக்டர் சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, மஸ்தான் ஆகியோருடன் வடக்கு மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாகிய எம்.தியாகராஜா, எம்.பி.நடராஜ், தர்மபால, சிவநேசன், ஜி.ரி.லிங்கநாதன், ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ரோகண கமகே மற்றும் இந்து இளைஞர் சங்கத் தலைவர் நா.சேனாதிராஜா, முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஞானப்பிரகாசம் உள்ளிட்ட பலரும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

மேளதாளம் மற்றும் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி ஆகியவற்றுடன் விருந்தினர்கள் வெகு கோலாகலமாக ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வவுனியா- ஹொரவப்பொத்தான வீதியில் உள்ள மொத்த காய்கறி விற்பனைச் சந்தையில் இருந்து கடை வீதி வழியாக மணிக்கூண்டு கோபுரச் சந்தியின் ஊடாக ஏ-9 வீதியைச் சென்றடைந்த ஊர்வலம் அங்கிருந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் சென்று முடிவடைந்தது.

கலாசார மண்பத்தில் நடைபெற்ற வரவேற்பு உபசார கூட்டத்தில் சர்வ மதத் தலைர்கள், நகர வர்த்தகர்கள், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் மற்றும் பட்டாணிச்சூர் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவ மாணவிகள் நடன விருந்தளித்து விருந்தினர்களை வரவேற்றனர்.

இந்நிகழ்வில் வவுனியா வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் சிறிஸ்கந்தராஜா வரவேற்புரையாற்றினார். சர்வ மதத் தலைவர்கள் ஆசியுரை வழங்கினர். வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் ரீ.கே.இராஜயலிங்கம் தலைமையுரையாற்றினார்.

தலைவர் ரீ.கே.இராஜலிங்கம், வர்த்தகர் சங்கத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை நிறைவேற்றுவதற்குக் கட்சி பேதமின்றி அனைவரும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (த)

## புஷ்பகுமாரவுக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு

மகிந்தாவின் ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்த ஜகத் புஷ்பகுமாரவுக்கு எதிரான முறைப்பாடொன்று தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்கு பெரிய ஊழல் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

தனது மனைவியின் பெயரில் அரச காணியொன்றை குத்தகைக்கு எடுத்து அரசின் நிதியினால் அதனை அபிவிருத்தி செய்துள்ளார். இதனால், அரசுக்கு ஒன்றரைக் கோடிக்கும் அதிகமான நிதி நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இவர் மீது முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காணியை அபிவிருத்தி செய்ய தெங்கு அபிவிருத்திச் சபையின் மனித வளம், பௌதிக வளம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையிலேயே இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் இன்று செவ்வாய்க்கிழமை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



கொழும்பில் இருந்து யாழ். நோக்கி நேற்று அதிகாலையில் பயணித் துக் கொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் புதூர்ப் பகுதியில் வீதியை விட்டு விலகி அருகில் - இருந்த வீட்டுக்குள் புகுந்து தடம் புரண்டது.

கொழும்பில் இருந்து வந்து கொண்டிருந்த ஹைஏ-ஏஸ் வாகனம் ஒன்று நேற்று அதிகாலையில் புதூர்ப் பகுதிக்கும் கனகராயன்குளம் பிரதேசத்துக்கும் இடையில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் வீதியை விட்டு விலகித் தடம்புரண்டு வீதியின் அருகே இருந்த வீட்டில்புகுந்தது. இவ்வாறு இடம்பெற்ற விபத்தின்போது வாகனமும், வீடும் சேதமடைந்தபோதும் - பயணிகள் அனைவரும் பெரும் காயங்கள் இன்றி அதிர்ஷ்ட வசமாகத் தப்பினர். (த-101)

# ஆபாச இணையங்களை தடை செய்யக் கோரிக்கை

கொழும்பு, நவ .3
ஆபாச இணையத் தளங்களைத் தடை செய்யக் கோரி பொது மக்களிடம் கையெழுத்துப் பெறும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என ஆலோசனைகள் மற்றும் நல்லிணக்கச் சபை தெரிவித்துள்ளது.

சிறுவருக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் போன்ற குற்றங்கள் பல பெருகிவர இதுவும் முக்கிய காரணம் என அந்த சபையின் செயலாளர் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹீல் டோல் குறிப்பிட்டுள்ளார். இதன்படி குறித்த மனுவில் மக்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் நாளை 4 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை இடம்பெறவுள்ளன. கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதனையடுத்து குறித்த மனு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (த)

# ஐ.தே. கட்சியின் செயற்பாடு: சு.க. அமைச்சர்கள் அதிருப்தி

## ஜனாதிபதியிடமும் முறைப்பாடு

கொழும்பு, நவ.3
தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளனர். இதுபற்றி கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஜனாதிபதிக்கும் தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களுக்குமிடையில் நடைபெற்ற முக்கிய சந்திப்பின்போதே இவ்வாறு முறையிடப்பட்டுள்ளது.

தாங்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருந்த போதிலும் தனித்து முடிவெடுப்பதற்குரிய அதிகாரம் மறுக்கப்படுகின்றது என்றும், வேலைவாய்ப்புகளை வழங்கும்போது நிதி அமைச்சால் தடங்கல் ஏற்படுத்தப்படுகின்றது என்றும், இரண்டாம் தரத்தவர்களாகவே தாம் கணிக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அமைச்சர்களான எஸ்.பி.திஸாநாயக்க, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரே ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளை இந்தச் சந்திப்பின் போது கடுமையாக விமர்சித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

இதன்பின்னர் பதிலளித்த ஜனாதிபதி, இதுபற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் பேசினால், முடிவொன்றை எடுத்து விடலாம் எனக் கூறியுள்ளார். அதன்பின்னர், உள்ளூராட்சி சபைத் தேர்தல் பற்றி கலந்துரையாடப்பட்டது. அனைவரையும் தேர்தலுக்குத் தயாராகுமாறு ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார். (த)

# மகிந்த பரம்பரைக்காகவே நிலக்கீழ் சொகுசு மாளிகை

## சொல்கிறார் அநுரகுமார

கொழும்பு, நவ.3
இலங்கையில் பரம்பரை பரம்பரையாகத் தமது குடும்பம் ஆட்சிபீடத்தில் இருக்கலாம் என்ற எண்ணத்தோடுதான் ராஜபக்ச அரசில் மிகவும் பிரமாண்டமாக– சொகுசாக நிலக்கீழ் மாளிகை அமைக்கப்பட்டது என்றும், இந்த உண்மையை மூடிமறைப்பதற்கே அரச இரகசியம்' என்ற கதையை மகிந்த கட்டவிழ்த்துவிட்டுள்ளார் என்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக் காட்டினார்.



ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் முற்பகல் பத்தரமுல்லையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது நிலக்கீழ் மாளிகை பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு: –

நிலக்கீழ் மாளிகை தொடர்பான தகவல்கள் அம்பலமாகியுள்ள நிலையில், அரச இரகசியம் வெளியிடப்படுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என மகிந்த கூறி வருகின்றார். இந்த விடயம் அரச இரகசியத்துடன் தொடர்புடைய விடயமல்ல. நாட்டு மக்களின் வளங்கள் சுரண்டப்பட்டு அவை இவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் வெளியிடுவதொன்றும் தவறான விடயமல்ல.

போர்க்காலத்தில் பதுங்கு குழிகளை நாம் கண்டோம். மாளிகை பற்றியும் அறிந்து வைத்துள்ளோம். தற்போதுதான் முதற் தடவையாக நிலக்கீழ் மாளிகையொன்றைக் காணக் கிடைத்துள்ளது.

இது அரச பாதுகாப்புத் தொடர்பான விடயமல்ல என்பதுடன், அரச தலைவரின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையும் அல்ல. தனிப்பட்ட தேவைக்காக முன்னெடுக்கப்பட்ட திட்டமாகும்.

போர்க்காலத்தில் அரச தலைவரைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது எமக்கும் தெரியும்.

இந்த நிலையில், பாதுகாப்புக்காகத்தான் இந்த மாளிகை அமைக்கப்பட்டதெனில், எதற்காக இத்தாலியில் இருந்து மாபிள்கற்கள்' தருவிக்கப்பட வேண்டும்? மின்குமிழ்கள், கட்டில், கதிரைகள் ஆகியனவும் கொண்டுவரப்பட்டுள்ளன.

தமது குடும்பம்தான் பரம்பரை பரம்பரையாக இந்த நாட்டை ஆளப் போகிறது என்ற கனவில்தான் மகிந்த இவ்வாறானதொரு மாளிகையை அமைத்துள்ளார். மாறாக, இது பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமல்ல – என்றார். (த)

# மாலைதீவு ஜனாதிபதி கொலை முயற்சி: தெஹிவளையில் சந்தேகநபர் கைது

கொழும்பு, நவ .3
மாலைதீவு ஜனாதிபதி மீதான கொலை முயற்சியின் சந்தேக நபரொருவர் தெஹிவளை, நெதிமாலைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் ஒரு மாலைதீவுப் பிரஜை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் யாமீன் மற்றும் அவரது பாரியாரும் சவுதியில் ஹஜ் கடமைகளை நிறைவேற்றிவிட்டு நாடு திரும்பும் வழியில், அவர்கள் பயணித்த கப்பலில் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றிருந்தது. குறித்த வெடிப்புச் சம்பவத்தில் மாலைதீவு ஜனாதிபதியின் பாரியார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)


Photoes computer ல வச்சிருந்தா
சிக்கல் தான்...

JAMPHOTO Books
செய்து வச்சிருந்தா கலக்கல் தான்!



ரொம்ப யோசிக்காதீங்க...
மிகவும் இலகுவாக மூன்றே படிமுறைகளில் உங்கள் நினைவுகளை நிரந்தரமாக்கிக் கொள்ள www.jamphotobooks.com க்கு log in செய்யுங்கள்.

1 பதிவிறக்கம் செய்யக்கூடிய இலவச மென்பொருள்
2 உங்கள் விருப்பப்படி வடிவமைக்கப்படும்
3 order online உங்கள் வீட்டுக்கே விநியோகிக்கப்படும்.



ஜாம் போட்டோ பிரைவட் லிமிட்ட், இல. 91, காலி வீதி, கொழும்பு 4, இலங்கை.
தொடர்பு இல: தொ.பே. +9411 7389721 பக்ஸ்: +9411 2055129 கைபேசி: +9477 2871212
ரூ. 2950/= முதல்

JAMPHOTO
EVERLASTING BEAUTIFUL STORIES

# முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடரின் முடிவுகள்

கரணவாய், நவ. 3

கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடர் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. குறித்த தொடரில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீர வீராங்கனைகளின் விவரங்கள் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

6வயது ஆண்கள் பிரிவில், நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் த.சகாயப்பிரியன் முதலாம் இடத்தையும், மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் த.பிரணவன் இரண்டாம் இடத்தையும், உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் சி.அச்சன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

8 வயது ஆண்கள் பிரிவில், உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் த.அபிசன் முதலாம் இடத்தையும், அதே கல்லூரியின் ந.அபிபாயன், பி. ஔகதன் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

10வயது ஆண்கள் பிரிவில், காசிநாதர் வித்தியாலயத்தின் பி.பிரவின் முதலாம் இடத்தையும், அதே வித்தியாலயத்தின் சே.அபிமன்யு இரண்டாம் இடத்தையும், நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ஜெ.ஆற்றவன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

12 வயது ஆண்கள் பிரிவில், நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் பா.மனோஜ் முதலாம் இடத்தையும், உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் த.சொப்ணன், ஆ.கயாவன் ஆகியோர் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

14 வயது ஆண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் பா.ரெனிசாந்த் முதலாம் இடத்தையும், உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் ப.சிவபாலஸ்ரீ இரண்டாம் இடத்தையும், நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலையின் ச.கிசோக் மூன்றாம் இடத்தையம் கைப்பற்றினர்.

16 வயது ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியின் த.அபிலாஸ், ஏ.சஞ்சைராம், க.கம்சன் மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றினர்.

18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியின் சோ.சஞ்சயன் முதலாம் இடத்தைக் கைப்பற்றினார்.

**பெண்கள் பிரிவு**

6 வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ரி.அக்சரா முதலாம் இடத்தைக் கைப்பற்றினார்.

8 வயது பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் பி.நதுசா முதலாம் இடத்தையும், நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் உ.கனிகா இரண்டாம் இடத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் செ.செந்துஜி மூன்றாம் இடத்தையம் கைப்பற்றினர்.


10 வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ப.ஆரணி முதலாம் இடத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஜெ.லவ்னா, இ.சகானா இருவரும் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

12 வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியின் ர.மிலோமிகா, பா.செம்பூவினி இருவரும் முறையே முதல் இரு இடங்களையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஏ.சாம்பிகா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

14 வயது பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் கம்சவாகினி, ஏ.கம்சப்பிரியா இருவரும் முறையே முதல் இரு இடங்களையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் ஆ.தர்சினி மூன்றாவது இடத்தையும் கைப்பற் றினர்.

16 வயது பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் சி.சுமித்தா, கி.யதுர்சா. சி.உமையாள் மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றினர். (ம-108)




பங்களாதேஷில் இடம்பெற்ற கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரில் சொலிட் விளையாட்டுக்கழக அணி சார்பில் பங்குபற்றிய மதனராஜா பிறேம்குமார், குரு பிரதீபா பிரபா விருதுபெற்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் பேரின்பநாதன் ஜெயகாந்தன் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அ.ரவிந்திரசர்மா மண்டபத்தில் கே.பி. பவுண்டேசனின் ஆலோசகர் தி.வரதராசன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வின் சில பதிவுகள். (ம-23)

# தீவக வல்லவன் தொடர்; இருதயராஜா சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 3

தீவக வல்லவன் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இருதயராஜா அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி அணி மோதிக் கொண்டது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. இதேநிலைமை இரண்டாம் பாதியிலும் நீடிக்க ஆட்டம் சமநிலைத் தகர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது.

சமநிலைத்தகர்ப்பில் இருதயராஜா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. சிறந்த வீரராக தம்பாட்டி காந்திஜி அணியின் குணா தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக மெலிஞ்சி முனை இருதயராஜா அணியின் ஜெயபிரசாந்தும், தொடராட்ட நாயகனாக மெலிஞ்சி முனை இருதயராஜா அணியின் விஜயும் தெரிவானார்கள். (ம-23)

# போராடி வீழ்ந்தது யாழ்.



யாழ்ப்பாணம், நவ. 3

தேசிய இளைஞர் மன்றங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை வீழ்த்திக் கிண்ணம் வென்றது கேகாலை மாவட்ட இளைஞர் அணி.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாத்தளை வலைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கேகாலை மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி மோதிக்கொண்டது. இதில் கேகாலை மாவட்ட இளைஞர் கழக அணி 17:15 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், நவ. 3

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்திலேயே நடைபெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)



மாவட்ட செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடைபெற்ற தடகளத் தொடரின் ஓர் பிரிவான பெண்களுக்கான (வயதெல்லையற்ற அல்லது திறந்த பிரிவு) 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தின் ஒரு பதிவு. (ம-422)

# யாழ். பெண்கள் கரம் அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், நவ. 3

இலங்கை கரம் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 'சி' பிரிவு இருபாலாருக்குமான கரம் தொடரில் யாழ். மாவட்ட பெண்கள் கரம் அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

இலங்கை கரம் சம்மேளனத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான காலிறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட பெண்கள் கரம் அணியை எதிர்த்து மாவியன் கீறின் அணி மோதிக் கொண்டது. முதல் இரு ஒற்றையர் ஆட்டங்களையும் 25:0, 22:14 என்ற அடிப்படையில் கைப்பற்றிய யாழ். மாவட்ட அணி இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் அரையிறுதிக்கு முன்னேறியது. (ம-23)

## நான்காவது இடத்தில் இறங்குகிறார் சிமித்

நியூசிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் ஆஸியின்தலைவரானசிமித்வழக்கமான தனது மூன்றாவது இடத்திலிருந்து நான்காவது இடத்தில் களமிறங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். தனது துடுப்பாட்ட வரிசை தொடர்பாக சிமித் தெரிவித்ததாவது 'றோயேர்ஸ், கிளார்க், வற்சன், கெடின் என அனுபவமிக்க அத்தனை வீரர்களும் ஓய்வினை அறிவித்துச் சென்றதால் ஆஸி. தற்பொழுது நெருக்கடியில் உள்ளது. ஆஸியின் துடுப்பாட்ட வரிசை நியூசிலாந்துக்கு ஈடுகொடுக்க வேண்டுமாயின் நான் 4ஆவது இடத்தில் களமிறங்குவது சிறந்ததாகவும் பொருத்தமானதாகவும் அமையும். வோர்ணர் நிலைத்து நிற்கும் பட்சத்தில் எனது தரவரிசை நன்மை தரக்கூடிய வகையில் அமையும்.' என்றார். (ம)



# தேசிய மட்டக் குத்துச்சண்டையில் புதுக்குடியிருப்பு மத்தி இரண்டாமிடம்


கனுசியா


டிலக்சனா


நிதர்சனா


கலையரசி

கரணவாய், நவ. 3
இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட குத்துச்சண்டைப்போட்டியின் தரப்படுத்தலில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கைப் பாடசலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டிகள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கண்டியில் இடம்பெற்றன. இதில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த மாணவிகளான, செல்வி யோகராசா நிதர்சனா 15-16 வயதுப் (46-48 கிலோ) பிரிவில் தங்கப்பதக்கத்தைப் பெற்றதுடன் சிறந்த குத்துச்சண்டை வீராங்கனையாகத் தெரிவாகியுள்ளார். செல்வி கந்தசாமி கலையரசி 17-18 வயதுப் (45-48 கிலோ) பிரிவில் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். செல்வி சிவனேஸ்வரன் டிலக்சனா 15-16 வயதுப் (44-46கிலோ) பிரிவில் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். செல்வி கனகேந்திரம் கனுசியா 15-16 வயதுப் (50-52 கிலோ) பிரிவில் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-108)

# ரஸ்பேர்க் முதலிடம்



உலக கார்பந்தயத் தொடரின் 17 ஆவது சுற்றான மெக்சிக்கோ சுற்றில் முதலிடம் பிடித்துள்ளார் ஜேர்மனியின் ரஸ்பேர்க்.

நடப்பு வருடத்துக்கான உலக கார்ப்பந்தயத் தொடர் 19 சுற்றுக்களாக நடத்தப்படுகிறது. இதன் 16 ஆவது சுற்றிலேயே ஏனைய மூன்று சுற்றுக்களுக்கும் வேலை வைக்காமல் தான் சம்பியனாவதை உறுதி செய்தார் கமில்டன். இந்த நிலையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறுவது யார்? என்ற போட்டியே தற்பொழுது நடைபெற்று வருகிறது. தொடரின் 17ஆவது சுற்று மெக்சிக்கோ ஓடுதளத்தில் நேற்று நடைபெற்றது. இதில் முதலிடம் பிடித்துள்ளார் ஜேர்மனியின் ரஸ்பேர்க். ஒட்டுமொத்தமாக 272 புள்ளிகளைப் பெற்றுள்ள ரஸ்பேர்க் இரண்டாவது இடத்தைக் கைப்பற்றுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. 18ஆவது சுற்று பிரேசிலில் இந்த மாதம் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)



## மேலும் நெருக்கடியில் ஆனந்த்

ஸ்பெயினில் நடைபெற்று வரும் செஸ் தொடரின் ஆனந்த் - வெஸ்லே மோதிய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.
குறித்த தொடரின் ஐந்தாவது சுற்றில் நடப்புச் சம்பியனான இந்தியாவின் விஸ்வநாத் ஆனந்த் அமெரிக்காவின் வெஸ்லேயை எதிர்கொண்டார். ஏற்கனவே முடிவடைந்த முதல் நான்கு சுற்றுக்களில் ஆனந்த் மூன்று ஆட்டங்களில் சமநிலையும் ஒன்றில் தோல்வியும் அடைந்ததனால் இந்தச் சுற்றில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கினார். ஆனால் வெஸ்லேயை எதிர்த்து ஆனந்தால் சமநிலை செய்ய மட்டுமே முடிந்தது. இதனால் இறுதிச் சுற்றுக்கு ஆனந்தால் தகுதி பெற முடியாமல் போகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகியுள்ளன. (ம)

# இந்தியா - பாகிஸ்தான் தொடர் நடைபெற வேண்டும் -கவாஸ்கர்

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் மீண்டும் தொடர் நடைபெற வேண்டும் என்றும் குறித்த தொடரை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முழு மனதுடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் தலைவரான கவாஸ்கர்.

குறித்த தொடர் தொடர்பாக கவாஸ்கர் தெரிவித்ததாவது:- 'எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு பேச்சுவார்த்தைதான். முதலில் பேச்சு நடத்தினால் பிரச்சினைகள் சரியாகிவிடும். இதனால் கிரிக்கெட் தொடர்களை நடத்துவது பற்றி இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பாகிஸ்தான் இதில் ஓரளவு முயற்சி காட்டுகிறது. ஆனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பெரிதளவான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இரு நாட்டு ரசிகர்களையும் கிரிக்கெட்தான் ஒருங்கிணைக்கும். இதனை நான் அரசியல்வாதியாக இல்லாமல் முன்னாள் கிரிக்கெட் வீரராக சொல்கிறேன். இந்திய அணி இலங்கை அல்லது பங்களாதேஷ் அணிகளுடன் விளையாடாவிட்டால் எந்த பாதிப்பும் கிடையாது. ஆனால் பாகிஸ்தானுடன் விளையாடாவிட்டால் மிகப்பெரிய இழப்பு ஏற்படுகிறது. பாகிஸ்தானில் தொடர்கள் நடைபெறாவிடின் கிரிக்கெட் செத்துவிடும். இதற்கு இந்தியா காரணமாக வேண்டாம்.' என்றார். (ம)



மாவட்ட செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட தடகளத் தொடர் நேற்றுமுன்தினம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி யில் நடைபெற்றது. குறித்த நிகழ்வுகளில் ஒன்றான ஆண்களுக்கான (திறந்த பிரிவு) 5000 மீற்றர் ஓட்டத்தின் ஒரு பதிவு. (ம-422)


# வீரர்களிடையே நட்புறவை அதிகப்படுத்தியது ஐ.பி.எல்.

*கூறுகிறார் டோனி*



மைதானத்தில் வார்த்தை மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் டோனி ஐ.பி.எல். தொடர்கள் வீரர்களிடையே நட்புறவை ஏற்படுத்தி வார்த்தை மோதல்கள் அளவுக்கு அதிகமான ஆதிக்கம் செலுத்துவதை இல்லாமல் செய்தது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடர் நெருங்கும் நிலையில் குறித்த தொடர் தொடர்பாக டெல்லியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே டோனி இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்; 'நாம் உன்னதமான ஆட்டத்தை ஆடுகிறோம். வெற்றி பெற விரும்புகிறோம், ஆனால் அதனை சரியான வழியில் அடைய வேண்டும். தரக்குறைவான, அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களால் வெற்றியை அடைவது கேவலமானது. அதனை ஐ.பி.எல். தொடர் விரட்டியுள்ளது. ஆக்ரோசம் என்பதை வார்த்தைகளில் காட்டக்கூடாது சச்சின், ராவிட், லக்ஸ்மன் போன்ற வீரர்களைப் போல் நுட்பமான ஆட்டத்தில் காட்ட வேண்டும். பிளாஸிஸ் எனக்கு நண்பர். வில்லியஸ் கோக்லிக்கு நண்பர். இவை சாத்தியமானது ஐ.பி.எல். தொடர்களாலேயே. ஆனால் இன்னமும் சில வீரர்கள் வார்த்தை மோதல்களை விடுவதாயில்லை. இதைத் திறமை என்று அவர்கள் நினைத்தால் அதைவிட முட்டாள்தனம் வேறில்லை.' என்றார். (ம)




போர்த்துக்கல் அணியில் தலைவரான கிறிஸ்ரியானோ றொனால்டோவே ரியல் மட்ரிட் கழகத்தின் சார்பாக அதிக கோல்களை அடித்தவராவார். இவரின் இந்தச் சாதனையை அண்மையில் விழாவெடுத்து கௌரவித்திருந்தது ரியல் மட்ரிட் நிர்வாகம். தற்பொழுது விளம்பர நிறுவனங்களும் சில தினங்களுக்கு முன்னர் ரியல் மட்ரிட் அணியின் விளம்பர ஒப்பந்த நிறுவனங்கள் சிலவும் குறித்த சாதனைக்காக றொனால்டோவை கௌரவித்துள்ளன. குறித்த நிகழ்வில் றொனால்டோ வென்ற நான்கு தங்கப் பாதணிகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ம)

## இளஞ்சிவப்பு பந்து
### மீள்பரிசீலனைக்கு சிறந்தது

டெஸ்ட் ஆட்டங்களில் வீரர்கள் நடுவரின் தீர்ப்பை மீள் பரிசீலனை செய்யும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறைமைக்கு பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களுக்கு என்று பிரத்தியேகமாக தயாரித்த இளஞ்சிவப்பு பந்து சிறந்த பயனைத் தருவதாக ஐ.சி.சி.யின் தொழில்நுட்பப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாளை மறுதினம் ஆஸ்திரேலியா நியூசிலாந்து அணிகள் மோதவுள்ள டெஸ்ட் ஆட்டம் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாகவே நடைபெறவுள்ள நிலையில் குறித்த ஆட்டத்தில் மின்னொளியில் மீள்பரிசீலனை முறைமை பயனளிக்குமா என்ற கேள்வி எழுந்திருந்தது. ஆனால் பகல் வேளையில் நடைபெறும் டெஸ்ட் ஆட்டங்களை விட இளஞ்சிவப்பு பந்தில் நடைபெறும் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களில் துல்லியத்தன்மை பேணப்படும் எனவும் மீள்பரிசீலனை முறைமைக்கும் அது பயனளிக்கும் எனவும் ஐ.சி.சி.யின் தொழில்நுட்பப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## கிண்ணம் பெடரரிடம்

சுவிற்சர்லாந்து ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் நடாலை வீழ்த்தி 8ஆவது முறையாக சுவிற்சர்லாந்து திறந்த ரென்னிஸின் சம்பியனாகியுள்ளார் பெடரர். தரப்படுத்தலில் 2ஆம் நிலை வீரரான பெடரர் (சுவிற்சர்லாந்து), 7ஆம் நிலை வீரரான ரபேல் நடாலை (ஸ்பெயின்) எதிர்கொண்டார். இருவரும் இறுதியாட்டத்தில் விளையாடி சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்பதால் எதிர் பார்ப்புக்கள் எகிறியிருந்தன. சொந்த மண் என்பதால் பெடரர் சற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு இணையாக நடாலும் தனது திறமையை நிரூபிக்கவே செய்தார்.

முதல் செற்றை பெடரர் 6-3 என எளிதாக வென்றார். ஆனால், 2 ஆவது செற்றில் நடால் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் அந்த செற்றை பெடரர் கடும் போராட்டத்திற்குப்பின் 5-7 என இழந்தார். இதனால் கிண்ணம் யாரிடம் செல்லப்போகிறது என்பதனை தீர்மானிக்கும் ஆட்டமாக மூன்றாவது செற் மாறியது. அந்த செற்றையும் 6-3 எனக் கைப்பற்றி 2-1 என்ற செற் கணக்கில் கிண்ணத்தை கைப்பற்றினார் பெடரர். (ம)



# முன்னிலை பெறும் நிலையில்
# முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து



இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினத்தில் 4-0 என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து நாள் முடிவில் 222-4 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானிக்க 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் ஆரம்ப வீரர்கள் இருவருமே களத்தில் இல்லை. மலிக்குடன் இணைந்தார் யுனிஸ்கான். 38 ஓட்டங்களுடன் மலிக்கின் இன்னிங்ஸும் 31 ஓட்டங்களுடன் யுனிஸ்கானின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. களத்தில் பாகிஸ்தானின் தடுப்புச்சுவரான மிஸ்பா. நீண்ட இடைவேளையின் பின்னர் ஓர் அரைச்சதம் மிஸ்பாவின் பெயரில் பதிவானது. ஆனால் பின்வரிசையில் எவருமே பத்து ஓட்டங்களை முழுமை செய்யாத நிலையில் திடீரென சரிவு கண்டு 234 ஓட்டங்களில் சுருண்டது பாகிஸ்தான். மிஸ்பா 71 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்துசார்பாகஅண்டர்சன் 4 இலக்குகளையும் புரோட், சமித் பட்டேல், மொயீன் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்துக்கு மொயீன் அலி சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுக்கவில்லை. குக்குடன் இணைந்தார் பெல். இணைப்பாட்டம் நிதானிக்க சரிவில் இருந்து மீண்டது கிரிக்கெட்டின் தாயகம். இணைப்பாட்ட மாக 71 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் முடிவுக்கு வந்தது குக்கின் இன்னிங்ஸ். 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் இங்கிலாந்தின் தலைவர் குக். 40 ஓட்டங்களுடன் பெல்லும் நான்கே ஓட்டங்களுடன் ரூட்டும் ஆட்டமிழக்க தற்பொழுது இங்கிலாந்து 139-4. ரெய்லருடன் இணைந்தார் பரிஸ்ரௌவ். மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 200 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. இறுதிவரை இணைப்பாட்டத்தை பிரிக்க முடியாமல் போக நாள் முடிவில் இங்கிலாந்து 222-4. ரெய் லர் 74 ஓட்டங்களுடனும் பரிஸ்ரௌவ் 37 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ள னர். பந்துவீச்சில் பாகிஸ்தான் சார் பாக சாஜ் 2 இலக்குகளையும் ரகற் அலி, மலிக் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## சானியா -கிங்கிஸ் மற்றொரு கிண்ணம்

சிங்கப்பூரில் நடைபெற்ற முன்னணி வீராங்கனைகளுக்கு இடையிலான ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா கிங்கிஸ் இணை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு மட்டுமாக வருட இறுதியில் ரென்னிஸ் தொடரொன்று நடத்தப்படுவதுண்டு. நடப்பு வருடத்தின் தொடர் சிங்கப்பூரில் நடைபெற்றது. இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா, சுவிற்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் இணை, ஸ்பெயின் நாட்டின் கார்பைன் முகுருசா - சுவாரெஸ் நவரோவா இணையை எதிர்த்து ஆடியது. 66 நிமிடங்களில் முடிந்த இந்த ஆட்டத்தில் சானியா மிர்சா - கிங்கிஸ் இணை 6-0, 6-3 என்ற நேர் செற்களில் மிக எளிதாக வெற்றிபெற்று கிண்ணத்தை கைப்பற்றியது. நடப்பு வருடத்தில் இந்த இணை கைப்பற்றும் 9ஆவது கிண்ணம் இதுவாகும். (ம)




அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்ட சாலியாகலாம்
இன்றே இறுதி நாள் 03/11/2015 (செவ்வாய்) இரவு 8 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
வல்வெட்டித்துறை 0776697960
அடுத்த வருடம் இலங்கையர்களுக்கு அமெரிக்க லொத்தர் வாய்ப்பு நிச்சயமில்லை

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 3.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.